

MSU

பதிப்புத்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி - 627 012.

# சமூக மதிப்புக்கல்வி

(இளங்கலை இரண்டாம் பருவம்)



பகுதி IV- பாடத்திட்டக்குழு



# சமூக மதிப்புக்கல்வி

(இளங்கலை இரண்டாம் பருவம்)

**பகுதி - IV பாடத்திட்டக்குழு**

பதிப்புத்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி - 627 012.

## சமூக மதிப்புக்கல்வி

(இளங்கலை இரண்டாம் பருவம்)

Edited by: Adhoc Board of Studies

Part IV- Value Based Education

### ஆசிரியர் குழு


தலைவர்:

பேரா.ப.த.பால்பாண்டியன்

(மேனாள் ஆட்சிக்குழுஉறுப்பினர், ம.சு.பல்கலைக்கழகம்)

உறுப்பினர்கள்:

முனைவர்.பெ.கோவிந்தராசு

(மேனாள் ஆட்சிக்குழுஉறுப்பினர், ம.சு.பல்கலைக்கழகம்)

பேரா.க.கணேசன்

(விவேகானந்தாகல்லூரி, அகஸ்தீஸ்வரம்)

பேரா.ஜி.காசிராஜன்

(திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்)

முனைவர்.ஜே.ஆர்.வி.எட்வர்ட்

(ஸ்காட் கிறித்துவக்கல்லூரி, நாகர்கோவில்)

முனைவர்.ப.இராதா

(ம.சு.பல்கலைக்கழகம், திருநெல்வேலி)



© 2016 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

No part of this book may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means-electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission from the publishers.



ரூ. 70 /-


### பதிப்புரை

நம் நாட்டில் பண்புக்கல்வி மற்றும் வாழ்க்கை நெறிமுறைக் கல்வி பற்றிய செயல் திட்டங்கள் பெரும்பாலும் மதம் சார்ந்த அமைப்புகளால் மட்டுமே தொடங்கப்பட்டு வருகின்றன. அவைகள் அனைத்தும் மதச்சார்பற்ற, இந்தியக் கலாச்சாரத்தை மையமாக வைத்து இறையாண்மைக்குப் பங்கம் விளைவிக்காத பண்புகளை முன்னிலைப்படுத்துகின்றன என்று அறுதியிட்டுச் சொல்லிவிட முடியாது. அன்பு, இரக்கம், நேர்மை, நம்பிக்கை என்ற அளவில் பொதுப்படையான பண்புகளை அனைத்து மதங்களும் போதித்தாலும், போதிப்பவர்கள் மீதும், போதிக்கும் நிறுவனங்கள் மீதும் மாற்று மதத்தினருக்கு முழு நம்பிக்கை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவேதான் பல பல்கலைக்கழகங்களில் பண்பு பற்றிய பாடத்திட்டங்களில் தமிழ் மரபையும், கலாச்சாரத்தையும் பாதுகாக்கும் உலகளாவிய சிந்தனைகளும், மனிதனை உயர்த்தும் உயரிய நோக்கும் பொதிந்து கிடக்கும் திருக்குறள் போன்ற இலக்கிய நூல்களைச் சேர்த்துள்ளனர்.

பள்ளி முதல் கல்லூரி வரை மாணவ, மாணவியருக்கு முக்கியப் பாடங்களோடு பண்புக்கல்வி வாழ்க்கைத்திறன் மேம்பாடு, ஆளுமைத்திறன், பண்புக்கல்வி, வாழ்வியல் நெறிமுறைகள் என்று பல பெயர்களில் இன்று கற்றுக் கொடுக்கப்படுகிறது. இவற்றின் தேவையும் இப்போது அதிகமாகிவிட்டது. காரணம், இன்றைய சமூக, அரசியல், பொருளாதாரச் சூழ்நிலைகள் அத்துடன் நுகர்வுக் கலாச்சாரம் பெருகிவிட்ட இக்கால கட்டத்தில் நம் தமிழ் மரபில் போற்றிப் பாதுகாத்த பண்புகள் மங்கி விட்டதை பரவலாகக் காணமுடிகிறது. மேலும், கல்வி அறிவு பெற்றவர்கள் அனைவரும் வேலை பெறும் பொருட்டு வாழ்க்கைத் திறமைகளை (Life Skills) எப்பாடுபட்டும் பெற்றுவிட்டாலும் கூட, அவர்கள் தனி மனித வாழ்க்கையிலும், குடும்ப வாழ்விலும், சமுதாயத்தின் உறுப்பினர் என்ற நிலையிலும், ஒரு நிறுவனத்தின் பணியாளர் என்ற முறையிலும் அவர்களிடம் இருக்க வேண்டிய வாழ்வியல் நெறிகளும்,

ஒழுக்கமும்,பண்புகளும் நிறைந்து இருக்கிறது என்று உறுதிபடச் சொல்லவிட முடியாது. இன்றைய இளைஞர்களைச் சமூக வலைத்தளங்களும், தொலைக்காட்சி, சினிமா மற்றும் ஊடகங்கள் திசை திருப்பிவிட்டதா என்ற ஐயப்பாடும் இருக்கிறது. எது சரி? எது தவறு? என்று பகுத்துப் பார்க்க முடியாத சமூகமாக மாறிவிட்டதோ என்ற கவலை எல்லோரிடத்திலும் இருக்கிறது. தாராளமயம், உலக மயமாக்கல் போன்ற கொள்கைகள் இந்திய இறையாண்மைக்குக் கேடு விளைவிப்பதாகவே ஆய்வுகள் கூறுகின்றன. இந்தப் பின்னணியில்தான் தற்போது பல்கலைக்கழகங்கள் பண்பு பற்றிய கல்வியை ஊக்குவிக்கின்றன. சமூக மதிப்புக் கல்வி (Social Value Education) என்பது பல்கலைக்கழக மானியக்குழு பரிந்துரைத்த இளங்கலை பாடத்திட்டத்தில் ஒரு கட்டாயப் பாடமாக்கப்பட்டிருக்கிறது.

சமூகம் விரும்பத்தக்க மற்றும் ஏற்புடைய குணநலன்களையும், பண்புகளையும், ஒழுக்க நெறிகளையும் சமூக மதிப்புக் கல்வி மூலம் ஒரு மாணவன் பெற வேண்டும் என்பதுதான் இப்பாடத்தின் நோக்கம். "நான் யாருக்கும் எதுவும் கற்றுக் கொடுக்க முடியாது. நான் அவர்களைச் சிந்திக்க வைக்கத்தான் முடியும்" என்றார் கிரேக்கத் தத்துவஞானி சாக்ரட்டீஸ். சுவாமி விவேகானந்தர், "ஒருவருக்கு மற்றவர் உண்மையிலேயே கற்றுக்கொடுக்க முடியாது. ஒவ்வொருவரும் அவர்களாகவே கற்றுக்கொள்ள வேண்டும்" என்றார். பாடமோ, பண்போ எதையும் கற்றுக்கொடுக்க முடியாது; கற்றுக்கொள்ளத்தான் முடியும் என்பதுதான் அறிஞர்களின் கருத்து. என்றாலும் கற்றுக்கொள்வதற்கான செயல்முறைகளை ஆசிரியர்கள்தான் செய்துகொடுக்க வேண்டும். கலந்துரையாடல் மூலமோ, சொற்பொழிவுகள்,செயல்காட்சி (ஒரு கதாபாத்திரமாக நடிப்பது), விவாதம் மற்றும் நவீனத் தொழில் நுட்பக் கருவிகளின் துணையுடனோ ஏதாவது ஒரு வழிமுறையைத் தெரிவு செய்து கொண்டு, பண்புக்கல்வி மாணவ, மாணவியர் பெறும் வண்ணம் செயலாக்கம் செய்தால் மட்டுமே நன்மை பயக்கும். இல்லாவிடில் இதுவும் வெறும் ஏட்டுக் கல்வியாக பின்தங்கிவிடும்.



இப்பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள தலைப்புகளும், அவற்றில் உள்ள அம்சங்களும் வெறும் அறிவு சார்ந்த விஷயங்களை மட்டும் படிக்கும் நம் மாணவர்களை, முழுமையான ஆளுமைப் பண்பு உடையவர்களாகவும், பரந்துபட்ட நம் இந்தியக் கலாச்சாரத்தை உள்வாங்கியவர்களாகவும், நம் நாட்டின் பன்முகத் தன்மையை உணர்ந்தவர்களாகவும், மனித உரிமைகள் அனைத்தும் அறிந்தவர்களாகவும், சமூக நீதிக்காக போராடும் போராளிகளாகவும், சமூகப் பிரச்சனைகளை அறிந்து உணர்ந்து, அவற்றிற்குத் தீர்வு காண முனைபவர்களாகவும், தனி மனித, குடும்ப மற்றும் சமூக அமைப்பின் நெறிமுறைகளைப் பின்பற்றுவர்களாகவும், தொழில் அறம் மற்றும் வேலைப் பண்பாடு கொண்டவர்களாகவும் உருவாக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

இப்புத்தகத்தில் உள்ள ஐந்து அலகுகளும் சமூக மதிப்புக் கல்வி பாடத்திட்டத்தை வடிவமைத்த பாடத்திட்டக் குழு உறுப்பினர்களால் தயார் செய்யப்பட்டது. இவற்றில் உள்ள தலைப்புகளில் உள்ள அம்சங்களையும், விஷயங்களையும் ஒரே புத்தகத்தில் விரிவாக சொல்வது என்பது மிகவும் சிரமமான பணி. என்றாலும் கூட, இயன்றவரை குறிப்புகளாக தொகுத்துத் தந்துள்ளோம். மேலும் தகவல்களையும், கருத்துக்களையும் பிற நூல்கள் மூலமாகவும், வலைத்தளங்கள் மூலமாகவும் மாணவ, மாணவியர் பெற முடியும். எழக்கூடிய சந்தேகங்களுக்குத் தெளிவு, புதிய கருத்துக்கள் ஆகியவற்றை இக்கல்வியைச் செயலாக்கும் ஆசிரியர் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இப்புத்தகத்தில் பேசப்பட்டுள்ள பொருள் சம்பந்தமாக மற்றும் விடுபட்ட கருத்துக்கள் பற்றி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும், பயிலும் மாணவ, மாணவியரும் ஆசிரியர் குழுவுக்கு அறியத் தந்தால் மகிழ்வடைவோம். உரிய மாற்றங்கள் செய்வோம்.

ஆசிரியர் குழு

# Part IV-Value Based Education

## (for all UG courses)

## Syllabus w.e.f .2016-17

## II Semester

**Objective:**

To enable the students to understand the social realities and to inculcate an essential value system towards building a healthy society

**Unit I: Social Justice**

Definition – need – parameters of social justice – factors responsible for social injustice –caste and gender–contributions of social reformers

**Unit II: Human Rights and Marginalized People**

Concept of Human Rights – principles of human rights – human rights and Indian constitution – Rights of women and children – violence against women - Rights of marginalized people – like women, children, dalits, minorities, physically challenged etc

**Unit III: Social Issues and Communal Harmony**

Social issues – causes and magnitude – alcoholism, drug addiction, poverty, unemployment etc – communal harmony – concept – religion and its place in public domain – separation of religion from politics – secularism – role of civil society



**Unit IV: Media Education and Globalized World Scenario**

Mass media – functions – characteristics – need and purpose of media literacy - effects and influence - youth and children - media power – socio cultural and political consequences – mass mediated culture – consumeristic culture – Globalization – new media – prospects and challenges

**Unit V: Values and Ethics**

Personal values – family values – social values – cultural values – professional values – and overall ethics – duties and responsibilities

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | iii - v |
| | Syllabus | vi - vii |
| 1. | சமூகநீதி<br>- பேரா.ஜி.காசிராஜன் | 1-20 |
| 2. | மனித உரிமைகளும்,<br>ஒடுக்கப்பட்ட மக்களும்<br>- பேரா.க.கணேசன் | 21-54 |
| 3. | சமூகஅவலங்கள்,<br>மதச்சார்பின்மை,சமூகநல்லிணக்கம்<br>- முனைவர்.ஜே.ஆர்.வி.எட்வர்ட் | 55-66 |
| 4. | ஊடகங்களும், தினசரிவாழ்வியலும்<br>- முனைவர்.பெ.கோவிந்தராசு<br>- முனைவர்.ப.இராதா | 67-87 |
| 5. | நற்பண்புகளும், நெறிமுறைகளும்<br>- பேரா.ப.த.பால்பாண்டியன் | 88-117 |
| 6. | மாதிரிவினாத்தாள் | 118 |




# UNIT I

# சமூக நீதி

## (Social Justice)

### I. சமூக நீதிக்கான தேவைகள்

நமது இந்தியச் சமூகம் என்பது மாறுபட்ட வாழ்க்கை முறையோடும் மாறுபட்ட கலாச்சாரத்துடனும் வாழும் மக்களைக் கொண்ட சமூகம். வேறுபட்ட மதச்சம்பிராதயங்களைப் பின்பற்றும் ஒரு சமூகம். இந்து மதத்துக்குள்ளும் வேறுபட்ட விழுமியங்களைக் கொண்ட சைவ, வைஷ்ணவ வாழ்முறை அடங்கி இருக்கிறது. இந்தியாவை ஒரு மதங்களின் நாடு என்பர். ஏனெனில் இங்குத் தோன்றிய மதங்கள் பல. புத்த, சமண, சைவ, வைஷ்ணவ, சீக்கிய, ஜைன மதங்கள் இங்குத் தோன்றியும், வெளியிலிருந்து வந்து இங்குக் காலூன்றிய கிறிஸ்துவ, இஸ்லாமிய மதங்களும், இந்தியச் சமூகத்துக்குள் ஊடாடி நிலைத்து நிற்கின்றன. பெரும்பான்மையாக இருக்கக் கூடிய இந்துக்கள், வெவ்வேறு சாதிகளுக்குள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மேம்போக்காகப் பார்க்கும் போது செய்யும் தொழில் அடிப்படையில் நான்கு பிரிவுகளாகத்தான் இந்து சமூகக் கட்டமைப்பு இருப்பதாகத் தோன்றுகிறது.

அந்த நான்கு பிரிவுகள் - அதாவது வர்ணங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

1) பிராமணர் 2) சத்திரியர் 3) வைசியர் 4) சூத்திரர்

படிப்பது, உடலுழைப்பு இல்லாமலிருப்பது, பூசனை செய்வது, கோவில் நிர்வாகத்தை மேற்கொள்வது போன்றவை பிராமணர்களுக்கானவைகளாக இருந்து வந்தன.

போர்த் தொழில் செய்வது, உடல் வலுவைக் கொண்டு நாட்டை ஆள்வது விவசாயம் செய்வது போன்றவை சத்திரியர்களுக் கானவைகளாக இருந்து வந்தன.

வணிக வியாபாரங்களைக் கடைப்பிடிப்பவர்கள் வைசியர்களாவர்.

அடிமைத் தொழில் செய்வதும் எந்தவித உரிமையும் அற்று இருப்பவர்கள் சூத்திரர்களாவார்.

இந்த நான்கு வகைப் பிரிவுக்குள் எண்ணிலடங்காச் சாதி உட்பிரிவுகளாகவும் மக்கள் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். மன்னராட்சி காலத்தில் ஒவ்வொரு சாதிக்கும் சமூகத்தில் இவ்வளவுதான் மதிப்பு என்றும், இன்னதுதான் செய்தொழில் என்றும் வகைப்படுத்தப்பட்டு அதை மக்கள் மீறவிடாமல் பார்த்துக் கொள்வதும் அதிகாரத்தில் உள்ளவர்களின் கடமையாக இருந்தது. சமூகத்தில் படிப்பதற்கோ சொத்து வைத்துக் கொள்வற்கோ சூத்திரர்களுக்கு உரிமை கிடையாது. பிறப்பின் அடிப்படையில் சாதி நிச்சயிக்கப்படுவதால், சாதிக் கொடுமைகளிலிருந்து தப்பிக்க முடியா வண்ணம் விதி என்றும், முற்பிறவிப்பயன் என்றும், கடவுளின் தீர்ப்பு என்றும் மக்கள் மனத்தில் பதிவு செய்யப் பட்புருக்கின்றது. அதனால்தான் தலித்துகள் கொடுமைப் படுத்தப்படும்போது, மற்றவர்கள் அதைப் பார்த்து எதிர்ப்பு தெரிவிப்பதில்லை. அது அவர்களுக்குத் தேவைதான் என்று சமூகப் பொதுப் புத்தியில் பதிய வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் தான் கீழ்சாதி மக்களின் மேல் இரக்கப்படாத சமூகமாக இருக்கிறது. அவர்கள் அடிமையாக இருப்பது தர்மம் என்றும், அவர்கள் அடிமைத்தனத்திற்கு எதிராக எழும்போதெல்லாம், அது நியாயமில்லை, தர்மத்திற்கு எதிரானது, சாதிக்கலவரம் உண்டாகிவிடும் என்று பேசும், நடுத்தர மக்கள் மற்றும் மேல்சாதி மக்களின் மனநிலையை மாற்ற சமூக நீதிக்கல்வி அவசியமாகிறது.

சமூக ரீதியிலும், கல்வி ரிதீயாகவும் முற்றிலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, அவர்களுக்கும் அவர்களுடைய அறிவையும், படைப்புத் திறனையும் சமூக மேம்பாட்டுக்கு வழங்க சமூக நீதி அவசியமாகிறது. ஒடுக்கப்பட்ட மக்கள் மான மரியாதையுடன் வாழ சமூக நீதி மிகமிக அவசியமாகிறது.

ஏற்கனவே நாம் குறிப்பிட்டது போல, இந்தியச் சமூகத்தில் பல சமயப்பண்பாடுகளை மக்கள் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒட்டு மொத்த மக்கள் தொகையில், ஒரு மதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தால் அவர்கள் சிறுபான்மையினராகக் கருதப்படுவார்கள். சிறுபான்மையின மக்களுக்கும் மற்றவர்களைப் போல அனைத்து உரிமைகளும் வாய்ப்புகளும் கிடைக்கப் பெற சமூகநீதி என்பது மிக அவசியமாகிறது.



மேலும் நம் இந்தியச் சமூகம் ஆணாதிக்கச் சமூகம் ஆகும். இங்கு ஆண்களுக்கு மிக அதிக முக்கியத்துவமும், மிக அதிக உரிமைகளும் கொடுக்கப்படுகின்றன. பெண்கள், ஆண்களுக்கு அடிமைச் சேவகம் செய்பவர்களாகவே பண்பாட்டு ரீதியாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறார்கள். அடிமைத்தனம் என்பது பெண்களுக்கு ஒரு குணநலனாகவே நம் சமூகம் அங்கீகரிக்கிறது. பெண்களும் ஆரம்பத்தில் கல்வி மறுக்கப்பட்டதால் ஆணாதிக்கக் கருத்தியலை உள்வாங்கி அவர்கள் உடம்பால் பெண்ணாக இருந்தாலும், மனதில், கருத்தியலால் ஆணாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதுமாதிரி தலித்துகளும் பெரும்பாலோர் அடிமைத்தனம் தான் நமக்கு விதி என்று அவர்கள் மனரீதியாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இது சமத்துவமற்ற இந்து சமூகத்தின் மிகப் பெரிய வெற்றியாகும். எனவே பெண்கள், தலித்துகள் மற்றவர்களைப் போல அனைத்து உரிமைகளும் பெற்று வாழ சமூக நீதி மிக அவசியமாகிறது.

## II. சமூக நீதி என்றால் என்ன?

ஒரு தனி மனிதன் நேர்மையாகவும், நியாயமாகவும், சக மனிதர்கள் மேல் மனித நேயமாகவும், தவறுகள் நடந்தால் அதை எதிர்க்கும் துணிவுடையவனாகவும், அறிவியல் மனப்பான்மையுடனும் இருந்தால் அது தனிமனித நீதியாகும்.

மனிதர்களின் மொத்தக் கூட்டுதான் ஒரு சமூகம். ஒரு சமூகம் நேர்மையாகவும், நியாயமாகவும், மனித நேயமாகவும், தவறுகளின் மேல் கோபம் கொள்ளும் விதமாகவும், அறிவியல் மனப்பான்மை மிக்கதாகவும், அனைவருக்கும் சம வாய்ப்பு அளிப்பதுமாகவும் இருத்தலே சமூக நீதியாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மிக முக்கியமான மையக் கருத்து சமூக நீதிதான். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 42வது திருத்தப்பிரிவு இந்திய மக்கள் சமூகநீதியைப் பெறுவதற்குரிய வழியை மிக விரிவாக விவரிக்கிறது.

பொருளாதாரச் சமதர்மமும் சமூகநீதியின் இன்றியமையாத ஒரு பகுதியாகும். சமூகநீதி நிலவ வேண்டுமானால் அரசின் கொள்கைகளில் பொருளாதாரச் சமதர்மக் கொள்கையும் நடைமுறையில் இருக்க வேண்டும்.

## III. சமூக நீதியின் அளவீடுகள்:

ஒரு சமுதாயத்தில் சமூகநீதி நடைமுறையில் உள்ளது என்பதை எவ்வாறு அளவிடுவது என்பதற்கான அளவீடுகள் உள்ளன. அந்த அளவீடுகளின் தன்மையைப் பொறுத்தே ஒரு சமூகத்தை நாகரிகமான சமூகமா இல்லையா என்பதை எடை போட முடியும். அந்த அளவீடுகள் எவை எவை என்பதைக் கீழே குறிப்பிடலாம்:

1) சம வாய்ப்பு 2) சமத்துவம் 3) அறிவியல் மனப்பான்மை

4) சகோதரத்துவம் 5) சுதந்திரம் 6) ஒற்றுமை 7) கல்வி

8) பெண் விடுதலை 9) கலப்புத் திருமணம்

10) பாலினப் பாகுபாடின்மை 11) வேலை வாய்ப்புரிமை

### 1) சம வாய்ப்பு:

சாதி, மதம் கடந்து, கிராமம் நகரம் கடந்து அனைத்து மக்களுக்கும் அனைத்துத் துறைகளிலும் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அடிப்படை வசதிகளில், வேலை வாய்ப்பில், கலாச்சாரத் திருவிழாக்களில், கல்வியில் அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். அனைவருக்கும் சம வாய்ப்பு என்பது தான் சமூக நீதியின் மிக முக்கிய அளவீடு.

### 2) சமத்துவம்:

சமூக, பொருளாதார மற்றும் கல்வியில் அனைவரும் பங்கேற்பு செய்யும் விதமாக சமத்துவம் கொண்டு வர வேண்டும். நாட்டின் வளமான செல்வம் அனைவருக்கும் நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதுவே சமூக நீதியாகும்.

### 3) அறிவியல் மனப்பான்மை:

ஒரு சமூகத்தில் சமூகநீதியை நிலைநிறுத்த வேண்டும் என்றால், அங்கே எதையும் அறிவியல் மனப்பான்மையுடன் பார்க்கும் பார்வை வேண்டும். மூட நம்பிக்கைகள் நிறைந்த சமூகத்தில் சமூக நீதியை எதிர்பார்க்க முடியாது. மூடநம்பிக்கைகளை அற்றுப் போகச் செய்ய அறிவியல் பூர்வமான பார்வையை வளர்க்க துணை செய்வதே சமூகநிதியாகும்.



### 4) சகோதரத்துவம்:

சமூகத்தில் உள்ள மற்றவர்களை, ஒருவன் கண்டு கொள்ளாமல், தன்னலமே முக்கியம் என்றிருப்பது சமூக நீதிக்கு எதிரான ஒன்றாகும். மனிதத்திற்கே விரோதமான ஒன்றாகும். தன்னைப் போலவே மற்றவர்களை எண்ணுவது, தனக்குள்ள பிரச்சினைகள் மற்றவர்களுக்கும் இருக்கும் என ஏற்றுக் கொள்வது, தனக்கான தேவைகள் மற்றவர்களுக்குமானது என இருப்பதே சகோதரத்துவம்.

### 5) சுதந்திரம்:

ஒரு மனிதன் தான் விரும்பும் நல்ல காரியங்களைத் தடையின்றி வினையாற்றவும், சமூக மேம்பாட்டுக்கான கருத்துக்களைத் தடையின்றிப் பேசவும் கிடைக்கிற வாய்ப்புகளே சுதந்திரம். சமூக நீதியின் அடிப்படை அம்சமே சுதந்திரம்தான். சமூகத்தின் ஒரு பகுதி மக்களுக்குக் கேடு விளைவிக்கும் விசயங்களைப் பேசவும், வரலாறு என்று கூறி பொய்களைப் பரப்பவும் சுதந்திரம் கிடையாது. எது நல்லது, எது உண்மையான வரலாறு என்பதை ஒருவன் தொடர்ந்து நிறைய வாசிப்பதன் மூலமும், பகுத்தறிவதன் மூலமும் தெரிந்து கொள்ளலாம்.

### 6) ஒற்றுமை:

இந்தியா போன்ற பல மதங்கள் கொண்ட, பல மொழிகள் பேசும், எண்ணற்ற சாதிகளைக் கொண்ட ஒரு நாட்டில் மக்களுக்கிடையே ஒற்றுமை என்பது மிக அவசியம். ஒற்றுமையின் மூலம் மட்டும்தான் மக்களின் வாழ்க்கைத் தரம், நாட்டின் பொருளாதார வளர்ச்சி முன்னேற்றம் காண முடியும். இந்தியாவின் சிறப்பம்சமே வேற்றுமையில் ஒற்றுமை என்பதே.

### 7) கல்வி:

கல்வி பெறுவது என்பது ஒரு மனிதனின் அடிப்படை உரிமையாகும். இதில் ஆணானாலும், பெண்ணானாலும் கல்வி என்பது அடிப்படை உரிமையே. இலவசக் கல்வி என்பது கட்டாய உரிமை என்று இந்தியச் சட்டம் சொல்கிறது. நடைமுறையில் கொஞ்சம் முன்னேற்றம் இருந்தாலும் சில பேர் அடிப்படைக் கல்வி கூட இல்லாமல் இருக்கிறார்கள். கல்வியில் இட ஒதுக்கீடு என்பது மிக மிக அவசியம். சாதிகளை உடைத்தெறியும் திறன்

கொண்டது கல்வி. நமது சமூகத்தில் சாதியம், இரும்புக் கோட்டை மாதிரி இறுகிப் போயிருக்கின்றது. அவைகளையெல்லாம் மாற்ற இந்தியா முழுக்க, அறிவியல் மற்றும் கணிதப் பாடப்பிரிவுகளில் ஒரே மாதிரியானப் பாடத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். அதனினும் மேலாகப் பயிற்றுமொழி என்பது அவரவர் தாய்மொழியாகவே இருக்க வேண்டும். பிறமொழிக் கல்வி விருப்பப்பாடமாக இருக்க வேண்டும்.

**8) பெண் விடுதலை:**

இந்தியக் குடும்ப அமைப்பு முறையில் பெண் ஆணுக்குக் கீழ்ப்படிந்து சேவை செய்பவளாகவே வரையறுக்கப்படுகிறாள். வீட்டிலேயே ஆணுக்கு ஒரு மதிப்பீடும் பெண்ணுக்கு ஒரு மதிப்பீடுமாக இருக்கிறது. உணவு, கல்வி உட்பட, ஆண்களுக்கு வழங்கப்படுகிற அளவுக்குப் பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. பெண் என்பவள் ஆணுக்குக் கீழ்ப்படிந்து இருப்பதுவே, அவளது சிறந்த குணநலன் என மதிக்கப்படுகிறது. கல்வி, பொருளாதாரம், குடும்ப நிருவாகம் போன்றவற்றில் ஆணும், பெண்ணும் சரி சமம் என்பதுவே பெண் விடுதலை. பெண் விடுதலையும் சமூக நீதியின் ஒரு அங்கமே.

**9) கலப்புத் திருமணம்**

உலகத்தில் எங்கும் இல்லாத, இந்தியாவில் மட்டுமே இருக்கிற சாதியமைப்பு மனிதர்களிடையே அதிக ஏற்றத் தாழ்வை உண்டாக்கி இருக்கிறது. சம உரிமைகள் மறுக்கப்பட்டு, மனிதாபிமானமற்று அடிமைகளாக பெரும்பான்மையோரும், எல்லா உரிமைகளோடு சிலரும் இருந்து வந்திருக்கிறார்கள். இந்தியாவில் சாதிய அமைப்பும், ஏற்றத்தாழ்வும் இறுகிப்போனதற்குக் காரணம் அகமணமுறையே என்கிறார் மாமேதை அம்பேத்கார். அகமண முறை, சமூக நீதிக்கு எதிரான ஒரு செயலாகும். எனவே சமூக நீதி வேண்டுமென்றால் கலப்பு திருமணங்கள் மிக அவசியமானதாகிறது. கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்க வேண்டிய கடமை நம் முன்னே இருக்கிறது.



***10) பாலின பாகுபாடின்மை:***

இதுவும் சமூகநீதியின் ஒரு அங்கமாகும். நம் சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் வெட்டவெளி அடிமைகளாகவும், எல்லா சாதிகளைச் சேர்ந்த பெண்கள் வீட்டுக்குள் அடிமைகளாகவும் இருக்கிறார்கள். மாற்றுப்பாதை, மாற்றுக் கல்வி இல்லாததால் அடிமைகளாக இருக்கிறோம் என்று கூடப்புரியாமல் அவர்கள் இருக்கிறார்கள். அதனால் அவர்களின் படைப்பாற்றல் பங்களிப்பு சமூகத்துக்குக் கிடைக்காமலேயே போய் விடுகிறது. எனவே ஆணும், பெண்ணும் சரி சமம் என்கிற மனநிலை வர வேண்டும். சமூகத்தின் இரண்டு கால்களாக ஆணும், பெண்ணும் இருக்க, அங்கு ஒரு காலைக் கட்டிப்போட்டால், சமூகம் எப்படி பீடு நடை போட முடியும் ?

***11) வேலை வாய்ப்புரிமை:***

சமூக நீதியில் எல்லோருக்கும் வேலை வாய்ப்புரிமை என்பது மிக முக்கியமானதாகும். இந்தந்த வேலைகளை இன்னாருக்கானது என வகுப்பது சமூக நீதிக்கு எதிரான ஒன்றாகும். எல்லா வேலைகளையும் எல்லோரும் செய்ய வேண்டும். அப்போதுதான் சமூகநீதி நிலையாக வரும். வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு அவசியமாகிறது. வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீட்டு முறையைக் கறாராக கடைப்பிடிப்பதால் மட்டுமே சமூக நீதி நிலைபெறும்.

**IV. சமூக அநீதிக்குரிய காரணிகள்:**

ஒரு சமூகத்தில் அநீதி நிலவுகிறது என்றால் வாழ்நெறியோடு சார்ந்த கலாச்சாரத்தில் சில குறைபாடுகள் இருப்பதே காரணம். சில காரணங்களை வைத்து மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வை உண்டாக்குவதே சமூக அநீதிக்கு அடிப்படைக் காரணம். நம் இந்தியச் சமூகத்தில் சமூக அநீதிக்கானக் காரணிகளாக மூன்றைச் சொல்லாம்.

1) சாதி 2) பாலின வேறுபாடு 3) மத வேறுபாடு

### 1) சாதி:

இந்தியாவில் பல மதங்கள் தோன்றியுள்ளன. மதப் போட்டிகள் நடந்திருக்கின்றன. இந்த மதப் போட்டிகளுக்கு இடையிலேயும் செய்யும் தொழிலை வைத்து மக்களிடையே ஏற்றத் தாழ்வுகள் உண்டாகி சாதியம் ஆரம்பமாகிறது. சாதிப் பிரிவு ஏற்பட்டவுடனே இதுதான் சரியான சமூக அமைப்பு முறை என்று அதிகார வர்க்கம் உறுதிப்படுத்துகிறது. சாதிகள் மூன்று வகைகளாக இருந்தன. மேல்சாதி, நடுத்தரச்சாதி மற்றும் கீழ்சாதி. கீழ்சாதி மக்களை அடிமைகளாக, எந்தவித உரிமையும் அற்ற மக்களாக இந்தச் சாதிய அமைப்பு வைத்திருக்கிறது. இந்தச் சாதி அமைப்பு கடவுள் நம்பிக்கையுடன், மதத்துடன் இரண்டறக் கலந்திருப்பதால், அடிமைகளே "நாங்கள் அடிமைகள்தான்" என்று மனரீதியாக ஏற்றுக் கொள்ள வைக்கப்பட்டிருக்கிறது. கீழ்சாதி மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டு, அவர்களது உழைப்பைச் சுரண்டுவதற்காக, அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. பிறப்பால் சாதி வருவதால், அவர்களது கஷ்டங்கள் அவர்களது விதி என்றும், போன பிறவிப்பயன் என்றும் நம்பப்படுவதால், மேல்சாதி மக்களுக்கு ஒரு குற்ற உணர்வே இல்லாமல் இருந்திருக்கிறது. நமது சமூக அமைப்பில் சாதிய அடுக்கு முறையே சமூக அநீதிக்கான மிக முக்கியக் காரணி.

### 2) பாலின வேறுபாடு:

ஆண், பெண் சமத்துவமின்மை மற்றொரு சமூக அநீதிக்கான காரணியாக இருக்கிறது. இப்பொழுது இல்லையென்றாலும், கடந்த பல வருடங்களாக பெண் கல்வி மறுக்கப்பட்டிருக்கிறது. பெண் வீட்டுக்குள்ளேயே அடங்கி இருக்க வேண்டும் என்பதுதான் நமது குடும்ப அமைப்பு முறை. பெண்களைக் குடும்பத்துக்குள் வைத்து அவர்கள் மீது ஏவும் கொடுமைகளை வெளியே சொல்லாமல் பொறுமை காப்பதே நல்ல பெண்ணின் அடையாளம். பெண் குழந்தைகள் வேண்டாம் என்கிற சூழ்நிலை. ஆண் பிள்ளைக்குத் தவம் இருக்கிற ஒரு சமூகத்தில் பெண் குழந்தை வேண்டாம் என்பது எவ்வளவு பெரிய கொடுமை?



வீட்டுக்கு வெளியே திருவிழாக்களில், வீட்டு விசேஷங்களில் சமையல் செய்வது ஒரு ஆணாய் இருக்க, வீட்டிற்குள்ளே பெண்தான் சமையலுக்கு என்பதே பெண்ணடிமைத் தனத்தின் ஒரு அளவுகோல். பெண் கல்விக்கு முக்கியத்துவம் தராத வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு முன்னுரிமை தராததே ஒரு சமூக அநீதிதான்.

### 3) மத வேறுபாடு:

இந்தியாவை மதங்களின் நாடு எனலாம். இங்கு அதிக எண்ணிக்கையில் மதங்கள் தோன்றி இருக்கின்றன. சைவ, வைணவ, புத்த, ஜைன, சமண, சீக்கிய மதங்கள் போல இன்னும் பிரபலமில்லாத மதங்களும் இங்குத் தோன்றியிருக்கின்றன. இது போக கிறிஸ்துவ, இஸ்லாம் மதங்களும் இங்கு இருக்கின்றன. மதப்பிரச்சினையால் இந்தியாவே இரண்டாக துண்டாடப் பட்டிருக்கிறது. எல்லா மதத்தினரும் சுதந்திரத்துடனும், சமவாய்ப்புடனும் வாழ்வதே சமூகநீதி. மத வாதம் என்பது சமூக அநீதியாகும். மக்கள் தொகை அதிகம் கொண்ட மதம் பெரும்பான்மை மதம் என்றும், மக்கள் தொகைக் குறைவாக கொண்ட மதம் சிறுபான்மை மதம் என்றும் கூறலாம். மதத்தை அரசியலோடு கலப்பதையே மதவாதம் எனலாம். பெரும்பான்மை மதவாதம் சர்வாதிகாரத்திற்குப் போகும். சிறுபான்மை மதவாதம் தீவிரவாதத்திற்கு போகும். இரண்டுமே தவறான போக்குகள். இந்தியாவில் மன்னர் காலத்திலிருந்து மதச்சண்டைகள் நடந்து வந்திருக்கின்றன. இவ்வளவு வளர்ச்சி அடைந்த காலத்திலும், மதத்தை வைத்து அரசியல் நடத்துவது சமூக அநீதிக்கே இட்டுச் செல்லும்.

## V. சமூகச் சீர்திருத்தவாதிகள்:

மனிதாபிமானமற்ற சமூக அநீதிகளைக் கண்டு குறைந்த பட்சம் நியாயம் பேசுபவர்களால்கூட தாங்கிக் கொள்ள முடியாது. தன்னளவில் அவைகளைக் கண்டு ஆவேசமடைவார்கள். இது ஒரு சாதாரண மனிதன் செய்யக் கூடிய ஒன்று, சமூக அநீதியைக் கண்டு, அதற்கானக் காரணங்களை ஆராய்ந்து, சமூக அநீதிகளைப் போக்கச் சமரசமற்றுப் போராடி சமூகத்தில் ஒரு அசைவை ஏற்படுத்தியவர்களே சமூகச் சீர்திருத்தவாதிகள். இந்தியாவில்

மிகச் சிறந்த சமூகச் சீர்திருத்தவாதிகள் இருந்தாலும், அதில் மிக முக்கியமானவர்கள் இரண்டு பேர் அவர்களில் ஒருவர் ஈ.வே.ரா. பெரியார், மற்றொருவர் மாமேதை அம்பேத்கர்.

1) ஈ.வே.ரா. பெரியார்:

இவரது பெயர் ஈ.வே. ராமசாமி. பகுத்தறிவுப் பகலவன் என்றும் அழைக்கப்படுகிறார். இவர் வைக்கம் வீரர் என்றும் அறியப்படுகிறார். சமூகத்தில் உள்ள மூட நம்பிக்கைகளை எதிர்த்து எந்தவித சமரசமுற்றுப் போராடியவர். ஊர் ஊராகச் சென்று பகுத்தறிவின் முக்கியத்துவம் பற்றியும், தீண்டாமைக் கொடுமைகள் பற்றியும், மனிதர்களில் சாதி ரீதியான அடிமைத்தனம் வேண்டாம் என்றும் பிரச்சாரம் செய்தார். தீண்டாமைக்கும், அடிமைத்தனத்திற்கும் அடிப்படைக் காரணமே கல்வி மறுப்புதான் என்றும், அனைவருக்கும் கல்வி அத்தியாவசமாக்க வேண்டும் என்றும், பேசியும் எழுதியும் வந்தார். கடவுள் மறுப்புக் கொள்கைகளைத் தான் நடத்தி வந்த "குடியரசு இதழில்" தொடர்ந்து எழுதி வந்தார். அவரது அடிப்படைக் கொள்கை சூத்திரமே "கடவுளை மற ˙ மனிதனை நினை" என்பதுதான். மனிதனை அடிமைப்படுத்துகிற, தீண்டாமைக்கு உட்படுத்துகிற கல்வி மறுக்கிற எந்த மதமும், கடவுளும் தேவையில்லை என்றார். பெண்ணடிமைத் தனத்தை எதிர்த்தார். பெண்கல்விக்கும் பாடுபட்டார். ஆணும், பெண்ணும் சரிசமம் என்றுள்ள சமூகமே முன்னேறும் என்றார். சாதி ஆதிக்கத்தையும், ஆணாதிக்கத்தையும் சேர்த்தே அழிக்க வேண்டும் என்ற உயர்ந்த இலக்கிற்காகவே வாழ்ந்தார். அரசியல் அதிகாரம் கிடைத்தால் கொண்ட கொள்கைகளில் சமரசம் செய்ய நேரிடும் என்பதால் அதிகாரத்திற்குப் போக மறுத்தார்.

(பெரியாரின் பங்களிப்பை முழுமையாக இங்குக் கொண்டு வர முடியாது. நமது நோக்கம் அவரை அறிமுகம் செய்து வைப்பதே. பெரியாரின் கருத்துக்களை, அவரும் மற்றவர்களுமாகச் சேர்ந்து எண்ணற்ற புத்தகங்களாக கொண்டு வந்திருக்கிறார்கள். அவைகள் கல்லூரி நூலகங்கள் மற்றும் அரசுப் பொது நூலகங்களிலும் கிடைக்கும். மாணவர்கள் அந்தப் புத்தகங்களைப் படிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்).



ஈ.வே.ரா. பெரியார் பற்றிய சில முக்கிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1) 1879 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் நாள் ஈரோட்டில் பிறந்தார். பெற்றோர்: வெங்கட நாயக்கர் - சின்னத்தாயம்மாள்

2) 1919 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியில் இணைந்து காந்தியடிகள் தலைமையில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார். சமூகநீதியை முன்னிறுத்தி, பின் கொள்கை வேறுபாட்டின் காரணமாக காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

3) தீண்டாமை மற்றும் சாதி ஒழிப்புதான் அவரது முதன்மை நோக்கம். மேல் சாதிக்காரர்கள் வசிக்கும் தெருக்களில் தாழ்த்தப்பட்டவர்கள் நுழையக்கூடாது என்பது தீண்டாமையின் ஒரு பகுதி. அது இந்தியா முழுவதும் நடைமுறையில் இருந்தது. மேல் சாதிக்காரர்கள் வசிக்கும் தெருக்களில் தாழ்த்தப்பட்டவர்களை அழைத்துச் செல்லும் போராட்டம் கேரளாவில் உள்ள வைக்கம் என்னும் ஊரில் பெரியார் தலைமையில் நடைபெற்றது.

4) காந்தியடிகள் மதுவிலக்கை வலியுறுத்திப் போராட்டங்களை நடத்தினார். அதற்கிணங்க தமிழ்நாட்டில் இருந்த கள்ளுக்கடைகளை மூடக்கோரி பல போராட்டங்களை நடத்தியவர் பெரியார். கள்ளுக்கடை மறியலில் அவர் துணைவியார் நாகம்மையும், அவரது சகோதரியும் தலைமையேற்றனர் என்பது குறிப்பிடத்தகுந்தது.

5) 1953 ஆம் ஆண்டு, அப்பொழுது முதலமைச்சராக இருந்த இராஜாஜி அவர்கள் பள்ளிகளில் குலக்கல்வி திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிட்டார். இதன் அடிப்படை என்னவென்றால் சாதியமைப்பை இன்னும் இறுக்கமடையச் செய்வதும், காலையில் பாடம், மதியம் அப்பா செய்கிற குலத் தொழிலை மாணவர்கள் செய்ய வேண்டும் என்பதாகும். சாதி ஒழிப்பே பிரதானக் கொள்கையாக கொண்ட பெரியார் இதை கடுமையாக எதிர்த்து பல கட்டப் போராட்டங்களை நடத்தினார். குலக்கல்வி முறைக்கு எதிராகப் பல கட்டுரைகள் எழுதினார். இறுதியில் ராஜாஜி அவர்கள் முதல்வர் பதவியிழந்து குலக்கல்வி திட்டமும் ஒழிந்தது.

6) மருத்துவ மற்றும் பிற கல்லூரிகளில் 1950களில் மதிப்பெண் அடிப்படையிலே மாணவர் சேர்க்கை நடைபெற்றது. அந்த மாதிரி நடந்தால் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்லூரிகளில் சேர்வது கடினம். மதிப்பெண் அடிப்படையில் மாணவர் சேர்க்கைக்கு எதிராகவும், இடஒதுக்கீட்டு முறையில் (வகுப்பு உரிமை) மாணவர் சேர்க்கை வேண்டும் என்று போராடிய பெரியார் வெற்றி பெற்றார். அச்சமயத்தில் 1950ம் ஆண்டு டிசம்பர் 3-ம் நாள் திருச்சியில் இது சம்பந்தமாக வகுப்பு உரிமை மாநாடு ஒன்றை நடத்தினார் பெரியார்.

7) நமது சமூக அமைப்பின் மிக மோசமான அம்சமாக சாதிய அமைப்பு இருக்கிறது. சாதீய அமைப்பை அடியோடு தகர்த்தெறிந்திட வேண்டும் என்றுதான் பெரியார் தன் வாழ்நாள் முழுவதும் எழுதியும் பேசியும் வந்தார். இந்தப் போராட்டத்தில் ஒரு பகுதியாக 1973ம் ஆண்டு டிசம்பர் 8 மற்றும் 9ம் தேதிகளில் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாட்டைக் கூட்டினார்.

8) தமிழ்நாட்டில் இந்தித் திணிப்பைக் கடுமையாக எதிர்த்தவர் பெரியார். மக்கள் விருப்பப்படி எந்த மொழியையும் கற்றுக் கொள்ளலாம். அரசு ஒரு மொழியைத் திணிக்கக் கூடாது என்றார். பெரியார் நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பெண்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

9) சுயமரியாதை இயக்கம்: பெரியாரின் மிக முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று சுயமரியாதை இயக்கத்தினை ஆரம்பித்தது. சுயமரியாதை இயக்கத்தின் கோட்பாடுகளாகக் கீழ்க்கண்டவற்றைப் பெரியார் வரையறுத்தார் :

i) மனித இனத்திற்கு எந்தச் சமூகமும் தடைகள் ஏற்படுத்தக் கூடாது.

ii) சமூகச் சமத்துவத்திற்கும், முற்போக்கான கருத்தியலுக்கும் தடைகள் இருத்தல் கூடாது.

iii) சமூகத்தில் அனைவருக்கும் சம வாய்ப்பு

iv) மக்களுக்குள் பரஸ்பர ஒற்றுமை

v) நாட்டின் இன்ப துன்பங்களில் அனைவருக்கும் சம பங்கு இருக்கச் செய்தல்.



vi) ஆண், பெண் இருபாலரும் சட்டத்திற்கு முன் மற்றும் சமூகத்திற்கு முன் சரிசமம்

மனித நேயப்பண்பு சமூகத்தில் ஓங்குமாறு சுயமரியாதை இயக்கத்தினை வழி நடத்தினார் பெரியார்.

1929ம் ஆண்டு பிப்ரவரி 17, 18ம் தேதிகளில் செங்கல்பட்டில் முதல் சுயமரியாதை மாநாட்டையும், 1930ம் ஆண்டு மே, 10ம் தேதி ஈரோட்டில் இரண்டாவது சுயமரியாதை மாநாட்டையும் 1931ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மூன்றாம் சுயமரியாதை மாநாட்டையும் விருதுநகரில் பெரியார் நடத்தினார்.

**2) சமூக நீதியில் டாக்டர் அம்பேத்கர்**

சமூக நீதிக்காக இந்தியாவில் போராடியவர்களில் மிக முக்கியமானவர் மாமேதையும், மிகப் பெரும் கல்வி அறிஞருமான அண்ணல் அம்பேத்கர் அவர்கள். இந்தியாவின் சாதியச் சமூக அமைப்பில், அதை எதிர்த்துப் போராடிய அம்பேத்கரை, சிலை வடிவில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் காணப்படுவது, இந்து சாதிய அமைப்பின் இறுக்கத்தையே காட்டுகிறது. அவர் இந்திய மக்களின் அறிவுச் சொத்து. அவர் காந்தியாரோடும், பண்டித நேருவோடும் போட்டோக்களாக இந்தியாவின் அனைத்து வீடுகளிலும் அலங்கரிக்கப்பட வேண்டியவர். தாழ்த்தப்பட்டவராகப் பிறந்து, தனது சொந்த, அனுபவங்களின் மூலமாக சாதியக் கொடுமையை அறிந்தவர். இந்தியச் சமூகத்தில் சாதியத் தன்மை என்பதை தன் டாக்டர் பட்ட ஆய்வுக்களமாக எடுத்துக் கொண்டு ஆய்வு செய்தவர். அந்த ஆய்வில் தனது தெளிந்த அறிவின் மூலம் சாதியின் தோற்றம் பற்றியும், அது எவ்வாறு இறுகிப் போனது என்பது பற்றியும், சாதியை எவ்வாறு இல்லாமல் ஆக்குவது என்பது பற்றியும் மிகத் தெளிவாக விளக்குகிறார். சாதி ஒழிப்பிற்காக, சமூக நீதிக்காக தன் வாழ்நாள் முழுவதும் போராடியவர். இந்து சமூகச் சாதியத் தன்மையின் இறுக்கத்திற்கு, சாதிய சமூகம் கடைபிடித்து வரும் அகமணமுறையே காரணம் என்று கண்டறிந்திருக்கிறார். எனவே அகமணமுறையை ஒழித்து, கலப்புத் திருமணத்தின் மூலமே சாதியை ஒழிக்க முடியும் என்றார்.

தலித்துகளுக்கு இரட்டை வாக்குரிமைக்காகப் போராடியவர். பல்துறை வல்லுநராக இருந்தார் பாபா சாகேப் அம்பேத்கர். பொருளாதாரத்துறையிலும் நிபுணத்துவம் பெற்றிருந்தார். சட்டத்துறையிலும் பெற்றிருந்த நிபுணத்துவம் காரணமாகவே 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 3ம் தேதி சட்ட மந்திரி ஆனார். இந்திய அரசியலமைப்பு சட்டத்தைத் தயாரிக்கும் குழுவின் தலைவராக இருந்து, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் தயாரித்தார். எனவே அம்பேத்கர் இந்திய அரசியலமைப்பின் தந்தை என அழைக்கப்பட்டார்.

டாக்டர். அம்பேத்கரைப் பற்றி முழுவதுமாக இங்கு கொண்டு வருவது மிகக் கடினம். அவர் ஒரு அறிவுக்கடல். அம்பேத்கரின் எழுத்துக்கள் அனைத்தும் 29 தொகுதிகளாக அரசே வெளியிட்டிருக்கிறது. அவைகள் எல்லா நூலகங்களிலும் கிடைக்கும். மாணவர்கள் தேடி எடுத்துப் படிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட அண்ணல் அம்பேத்கர் சாதியத்தை எதிர்த்து மிகக் கடுமையாகப் போராடினார். இந்து சாதீய அமைப்பு, அதன் அடிப்படையிலேயே சமத்துவமற்ற அமைப்பு என்று மிகக் கடுமையாக எதிர்த்தார். சீர்திருத்த முடியாத இந்து மதத்தை விட்டு வெளியேற எண்ணினார். "என்னுடைய பிறப்பு என் கையில் இல்லை. அதனால் நான் இந்துவாகப் பிறந்தேன். ஆனால் நான் ஒரு போதும் இந்துவாகச் சாக மாட்டேன்" என்று கூறி அம்பேத்கர் ஒரு இலட்சம் தொண்டர்களுடன் 14.10.1956-ல் புத்த மதத்தில் இணைந்தார்.

அம்பேத்கர் பற்றிய சில முக்கியக் குறிப்புகளைப் பார்க்கலாம்.

1) அம்பேத்கர் 1891-ம் ஆண்டு ஏப்ரல் 14-ம் தேதி பிறந்தார். தந்தையார் ராம்ஜி, தாயார் பெயர் பீமாபாய்.
2) தாழ்த்தப்பட்ட மக்களுக்கான உரிமை மாநாடு 1917-ம் ஆண்டு பம்பாய் நகரில், நவம்பர் மாதம் நடத்தினார். தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நடத்தும் பல கொடுமைகளை எதிர்த்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



3) **தாழ்த்தப்பட்ட மக்களின்** முன்னேற்றத்திற்காக பகிஷ்கரித் ஹிதகர்னி என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். 1930-ம் ஆண்டு மார்ச் 12-ம் தேதி டாக்டர் அம்பேத்கர் தனது நாசிக் சத்தியாகிரகத்தை நடத்தினார்.
4) 12.11.1930-ல் லண்டனில் நடந்த முதல் வட்ட மேஜை மாநாட்டில் அம்பேத்கர் கலந்து கொண்டார். அம்பேத்கர் தனது கொள்கைகளையும், எடுக்க வேண்டிய முடிவுகளையும் மிகச் சிறப்பாக எடுத்துரைத்தார்.
5) 1931-ம் ஆண்டு செப்டம்பர் இரண்டாம் வட்ட மேஜை மாநாடு நடந்தது. அதில் இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுப்பது பற்றி விவாதிக்கப்பட்டது. அதில் கலந்து கொண்ட டாக்டர். அம்பேத்கர் இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்தால், அது ஒரு இயக்கத்திற்கோ அல்லது ஒரு பிரிவினருக்கோ இல்லாமல், அதிகாரம் அனைத்துப் பிரிவினருக்கும் சம அளவில் இருக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார்.
6) 1946-ம் ஆண்டு ஜீன் மாதம் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் படித்துப் பயன்பெறும் வகையில் கல்லூரி ஒன்றினை நிறுவினார். அரசு வேலை வாய்ப்புகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு தேவை என்று காரண காரியங்களை வலிமையாக எடுத்துரைத்துப் போராடினார்.

## VI. சாதி:

சாதி என்பது உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லாத, இந்தியாவில் மட்டும் இருக்கின்ற ஒன்று. சமூகத்தைச் சாதி ரீதியாகப் பிரித்து இரக்கமற்ற ஒரு கட்டுக்கோப்பான அமைப்பாக சாதியம் இருக்கிறது. பழங்காலத்தில் நிறைய மதங்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் தோற்றுப் போனவர்கள் கீழ்சாதியினராகக் கருதப்பட்டனர். விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு மட்டுமே தொழிலாக இருந்த ஒரு காலத்தில், இந்தந்த வேலைகளை இந்தச் சாதியினர் செய்ய வேண்டும் என்றுப் பிரித்து சாதிகளை உண்டாக்கினர். ஒரு சாதியில் பிறந்துவிட்டு, ஒருவனால் அந்தச் சாதியை விட்டு வெளியே வர முடியாத கட்டுக்கோப்பான அமைப்பே இந்தியச் சாதியம். சாதியம் மத ரீதியாக பக்தி சார்ந்த வாழ்க்கை முறையோடு இணைக்கப்பட்டது.

அதன் மூலம் ஒருவனின் சாதி என்பது போன பிறவியில் செய்த பாவ புண்ணியம், அவனுடைய தலைவிதி, அதை மாற்ற யாராலும் முடியாது என மக்களின் மனங்களில் பதிய வைக்கப்பட்டது. அதனாலேயே வாய்ப்புகள் மறுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டவர்கள் படும் துன்பங்களைப் பொது ஜனங்கள் கண்டு கொள்வதில்லை. துன்பப்படுவது அவனது விதி என்று எளிதில் நகர்ந்து போவது நம்மிடையே மிகச் சர்வ சாதாரணம். தாழ்த்தப்பட்டவர்கள் மீது ஏவப்படும் வன்கொடுமைகள் மனிதாபிமானமற்றதாக இருந்தாலும் இது புண்ணிய பூமி என்று புகழ்ந்து கொண்டார்கள்.

இந்து சமுதாயம் தொழிலின் அடிப்படையில் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒன்று பிரம்மாவின் தலையிலிருந்து பிறந்தவர்கள் பிராமணர்கள். இவர்கள் கல்வி கற்பிக்கும் தொழிலைச் செய்பவர்கள். இரண்டு: பிரம்மாவின் தோள்களிலிருந்து தோன்றியவர்கள் சத்ரியர்கள். போர் செய்து நாட்டை ஆள்வதும், நாட்டைக் காப்பதும் இவர்களது தொழில். மூன்று: பிரம்மாவின் வயிற்றிலிருந்து பிறந்த வைசியர்கள். இவர்கள் வணிகத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள். நான்கு: பிரம்மாவின் பாதங்களிலிருந்து தோன்றிவர்கள் சூத்திரர்கள். இவர்கள் மேற்சொன்ன மூன்று பிரிவினருக்கும் அடிமைச் சேவகம் செய்கிறவர்கள். எவ்வித உரிமையும் அற்று அவர்கள் மீது சமூகம் ஏவிய வன்கொடுமை மனம் நடுங்கச் செய்வதாக பல நூற்றாண்டுகளாக நடந்து வருகிறது.

இந்த நான்கு பிரிவுகளுக்குள்ளும் எண்ணற்ற சாதிகளும், அந்தச் சாதிகளுக்குள் உட்பிரிவுகளும், ஒவ்வொரு உட்பிரிவுக்கும் ஒரு குல தெய்வம் என்று சாதீயம் ஆழமாக வேரூன்றி இருக்கிறது. பிறப்பின் அடிப்படையில் சாதி உறுதிப்படுவதால் தாழ்த்தப்பட்ட குடும்பங்களில் பிறந்த எண்ணற்ற படைப்பாளிகள் தங்கள் அறிவைச் சமூகத்திற்கு அளிக்க முடியாமல் போய்விடுகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தீண்டாமைக் கொடுமை இருந்திருக்கிறது. கல்வி மறுக்கப்பட்டிருக்கிறது. சொத்துரிமை இல்லாமல் இருந்திருக்கிறது. சாதீய அமைப்பு கருத்தியல் ரீதியாகவும் கடவுள் நம்பிக்கை மேலாகவும் கட்டமைக்கப் பட்டிருக்கிறது.



சாதி அமைப்பு முறையை மிக நுணுக்கமாக ஆராய்ந்தார் டாக்டர். அம்பேத்கர். இந்தச் சாதி அமைப்பு முறை ஈவு இரக்கமற்றதாகவும், சமத்துவமற்றதாகவும் உள்ளது என்றும், சாதி அமைப்பு முறை இறுகிப் போய்க் கொண்டே இருப்பதற்கும் மிக முக்கிய காரணம் அகமண முறைதான் என்கிறார். சாதியைப் பற்றி இன்னும் விரிவாக அறிய வேண்டுமென்றால் பெரியாரையும், அம்பேத்கரையும் படிக்க வேண்டும்.

## VII பாலினச் சமத்துவமின்மை:

நமது சமூக அமைப்பில் ஆண் தலைமைத்துவமே முதன்மையானதாக இருக்கிறது. ஆணுக்கு அத்தனை உரிமைகளும் கொடுக்கப்பட்டு இது ஒரு ஆணாதிக்கச் சமூகமாக இருக்கிறது. இங்கு ஆண்-பெண் சமத்துவமின்மை உறுதிபட இருக்கிறது. மற்ற நாடுகளில் பெண்ணடிமைத் தனம் இருந்தாலும் இந்தியாவில் இரண்டு விதமான பெண்ணடிமைத்தனம் இருக்கிறது. இந்தியாவில் தாழத்தப்பட்டவர்கள் பொது வெளியில் உரிமைகளற்று இருக்கிறார்கள் என்றால், எல்லா சாதிகளிலும் பெண்கள் வீட்டிற்குள் உரிமைகளற்று இருக்கிறார்கள். அதிலும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண்கள் மிகவும் பரிதாப நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் சமூக வெளியிலும், வீட்டிற்குள்ளும் அடிமைகளாக இருக்கிறார்கள். பெண்ணுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. வீட்டு வேலைகள் பெண்களுக்கானது என்ற கருத்தியல் உருவாக்கி, வெளியே சென்று அறிவைத் தேட முடியாமல் ஆணைச் சார்ந்துதான் பெண் இருக்க வேண்டும் என்ற நிலை உருவாக்கப்பட்டது. பெண்ணை அடிமையாக்க அவளுக்குரிய குணநலன்கள் வேண்டும் எனக்கருத்தியல் ரீதியாக வலியுறுத்தப்பட்டது. பெண் கற்போடு இருக்க வேண்டும் என்றும், அச்சம், மடம், நாணம் போன்ற பண்புகளோடு இருக்கும் பெண்ணே சிறந்தவள் என்றும் பெண்ணடிமைத்தனம் உறுதிப் படுத்தப்பட்டது.

விவசாய வேலைகளுக்குப் பெண்கள் தேவைப்படுவதால் வெளி வேலைக்கு அனுமதிக்கப்பட்டாலும் அவளுக்கான ஊதியம் ஆண்களுக்கானதை விட குறைவாக வழங்கப்பட்டது. ஆண் செய்கிற அதே வேலையைப் பெண் செய்தாலும் சம்பளம்

குறைவாகக் கொடுக்கப்பட்டது. பெண்ணுக்குச் சொத்துரிமை கிடையாது. தற்சமயம் சட்ட ரீதியாகப் பெண்ணுக்கு சொத்துரிமைச் இருந்தாலும், நமது குடும்ப அமைப்பு முறையில் அதை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

நமது குடும்ப அமைப்பு முறையில், பெண் குழந்தை ஒரு பாரமாகவே இருக்கிறது. அதனாலேயே கருவிலேயே பெண் குழந்தையை ஒழிக்கும் நடவடிக்கை நடந்து கொண்டிருக்கின்றன. குழந்தைகள் விளையாடும் விளையாட்டுகளில் கூட ஆணுக்கும், பெண்ணுக்கும் தனித்தனி விளையாட்டுகள் இருக்கின்றன. ஒரு வீட்டில் ஆண் குழந்தைக்குக் கிடைக்கும் உரிமையும், சலுகையும் பெண் குழந்தைக்குக் கிடைப்பதில்லை.

ஒரு பெண், குழந்தைப் பருவத்தில் அப்பாவையும், குமரிப்பருவத்தில் கணவனையும், முதுமைப் பருவத்தில் தன் மகனையும் சார்ந்தே வாழ வேண்டி இருக்கிறது. இப்பொழுது இருக்கிற பெண் சொத்துரிமை, ஓட்டுரிமை எல்லாம் பெண்களால் போராடி பெற்றவையாகும். ஆண்-பெண் சமத்துவத்துக்கு இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டே உலகம் முழுவதிலும் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8-ம் தேதி பெண்கள் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இங்குள்ள கலாச்சார அரசியலைப் புரிந்து கொள்ளாமல் ஆண்-பெண் சமத்துவமின்மையைப் புரிந்து கொள்ள முடியாது. நம்மை சுற்றி உள்ளவர்கள் புரிதல் இல்லாமல் சொல்வார்கள்: "பெண்ணே பெண்ணுக்கு எதிரி என்று", அது தவறான வாதமாகும். ஒரு பெண் இன்னொரு பெண்ணுக்கு எதிரியாக இருக்கிறாள் என்றால், அவள் உடம்பால்தான் பெண், மனதால் ஆணாதிக்க கருத்தியலை உள்வாங்கிய ஆணாக இருக்கிறாள். ஆணாதிக்க கருத்தியல்களே பெண்ணடிமைத்தனத்திற்குக் காரணங்கள். அவைகளைத் தகர்த்தெறியாமல் பெண் விடுதலை சாத்தியமில்லை.

ஒரு சமூகத்தின் இரண்டு கால்கள் ஆணும், பெண்ணும். இரண்டு கால்களும் சம பலத்தில் இருந்தால் தான் ஒன்றாக நடக்க முடியும். ஒரு காலை மட்டும் முடக்கிப் போட்டால் நொண்டி நொண்டித்தான் நடக்க முடியும்.



## கேள்விகள்:

### பகுதி - அ

**I) சரியான விடையைத் தெரிவு செய்க:**

1) சமூகநீதியின் அளவீடாக கீழ்க்கண்டவற்றில் எதைக் குறிப்பிடலாம்?
   அ) சமவாய்ப்பு ஆ) கல்வி
   இ) கலப்புத்திருமணம் ஈ) அனைத்தும்

2) சாதி ஒழிப்பில் பங்காற்றும் மிக முக்கியக் காரணி
   அ) கல்வி ஆ) சுதந்திரத்தன்மை
   இ) விடுதலை ஈ)கலப்புத் திருமணம்

3) சமூக அநீதிக்கான மிக முக்கியக் காரணம்
   அ) சாதி ஆ) கல்வி
   இ) வேலை வாய்ப்பு ஈ) சுதந்திரம்

4) ஈ.வே.ரா. பெரியார் எந்த ஆண்டில் பிறந்தார்?
   அ) 1869 ஆ) 1873 இ) 1951 ஈ) 1879

5) மாமேதை அம்பேத்கார் எந்த ஆண்டு புத்த மதத்தில் இணைந்தார்?
   அ) 1956 ஆ) 1946 இ) 1951 ஈ) 1950

### பகுதி - ஆ

**II) கீழ்க்கண்ட வினாக்களுக்கு 150 வார்த்தைகளுக்கு மிகாமல் பதில் கூறுக.**

1) சமூக அநீதிக்கானக் காரணிகளை விவரி.
2) சமூக நீதிக்கானத் தேவைகளைப் பற்றி விவரி.
3) இந்தியாவில் சாதியமைப்பு - குறிப்பு வரைக.
4) பாலினச் சமத்துவமின்மை என்றால் என்ன?
5) சமூக நீதி - குறிப்பு வரைக.

10. சித்திரவதைக்கு உட்படா உரிமை 11. தன்னாட்சி உரிமை (சுயநிர்ணயம்) 12. ஆட்சியில் பங்குகொள்ள உரிமை 13. நேர்மையான விசாரணைக்கான உரிமை 14. நகர்வு சுதந்திரம் 15. கூடல் சுதந்திரம் 16. குழுமச் சுதந்திரம் 17. கல்வி உரிமை 18. மொழி உரிமை 19. பண்பாட்டு உரிமை 20. சொத்துரிமை 21. தனி மனித உரிமை

## III. மனித உரிமைகளின் முக்கியத்துவமும், கொள்கைகளும்

மனித உரிமைகளை நிலைநாட்டுவதன் மூலமாக கீழ்க்கண்ட அம்சங்கள் மனித சமூகத்திற்குச் சமாதான சமத்துவ வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான கொள்கைகளாக அமைகின்றன.

1. சர்வதேச அளவில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு 2. மனிதனுக்கு மனிதன் அடிமைப் படுத்துவதைத் தடுத்து நிறுத்துவதற்கு 3. மனித சித்ரவதையைத் தடுத்து நிறுத்துவதற்காக 4.யுத்தங்களின் மூலம் ஏற்படும் மனிதப் படுகொலைகள் மற்றும் மனிதப் பாதிப்புகள் உருவாவதைத் தடுப்பதற்காக. 5. அரசியல், சமூகப் பொருளாதார, கலாச்சார மற்றும் குடியுரிமை உரிமைகளை ஒவ்வொரு மனிதனும் பெறவேண்டும் என்பதற்காக 6. மனித இனப் படுகொலையைத் தடுப்பதற்காக 7. குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 8. ஆண்-பெண் சமூக நீதியைப் பாதுகாப்பதும், உறுதிப்படுத்துவதும். 11. தீண்டாமையைத் துடைத்தெறிவது 12. மதச் சார்பின்மையைப் பாதுகாப்பது. 13. மத நல்லிணக்கத்தைப் பேணுவது 14. விடுதலையைப் பேணிப் பாதுகாப்பது

## IV. இந்திய அரசியல் அடிப்படை உரிமைகளும், மனித உரிமைகள் பிரகடனமும்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி கீழ்க்காணும் 14 முதல் 32 வரையிலான விதிகள் ஒவ்வொரு குடிமகனுக்கும் அடிப்படை உரிமைகளாக வழங்கப்பட்டுள்ளன. இவைகள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பிரகடனத்தின் அடிப்படையில் வகுக்கப் பட்டுள்ளன.



**1. அனைவருக்கும் சம உரிமை (விதி 14)**
(மனித உரிமைப் பிரகடனம் பிரிவு 7)

தனி மனித உரிமைகளைப் பறிக்கும் அதிகாரம் மாநில அரசுகளுக்குக் கிடையாது. அதை நிராகரிக்கவும் முடியாது. அரசியலமைப்புச் சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர், அவரின் சமூகப் பாதுகாப்பைப் பெறும் உரிமையைப் பெற்றுள்ளார்.

**2. சாதி, மதம், மொழி, பாலினம், பிறந்த இடம் ஆகியவற்றின் ஆதாரத்தின் மீதான ஏற்றத் தாழ்வு தடை உரிமை (விதி 15) (ம.உ.பி பிரிவு 7)**

நமது நாட்டில் வாழும் குடிமக்கள் குறிப்பிட்ட பகுதியில்தான் வசிக்கவேண்டும், குறிப்பட்ட இடத்திற்குச் செல்லக்கூடாது என்பது உள்பட எந்தக் கட்டுப்பாடுகளும் விதிக்க முடியாது.குறிப்பாக வர்த்தக நிலையங்கள்,ஓட்டல்கள், பொது பொழுதுபோக்கு அரங்கங்களுக்குச் செல்வது, அல்லது பொதுமக்களின் நலனுக்காக அமைக்கப்பட்டுள்ள கிணறு,ஏரி, குளம், குளியல் அறை,சாலை, மக்கள் பயன்படுத்தும் பூங்கா உள்பட பொது இடங்களுக்குச் செல்வதற்கு யாரும் நிர்ப்பந்தம் செய்யவோ, தடை விதிக்கவோ முடியாது.மேலும் பழைய பஞ்சாங்கங்களைக் கூறி பெண்கள், சிறுவர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் பட்சத்தில் அது தண்டனைக்குரிய குற்றமாகும். இந்தப் பாகுபாட்டைத் தடுக்க அரசாங்கம் சிறப்பு சட்டங்கள் கொண்டு வந்து செயல்படுத்த வேண்டும்.

**3. பொதுச் சேவையில் சம வாய்ப்பு உரிமை (விதி 16) (ம.உ.பி பிரிவு 23)**

அரசு பணியைப் பெற சாதி,மதம், மொழி, பாலினம்,பிறந்த இடம் ஆகியவற்றைக் காட்டி ஒதுக்க முடியாது.

அரசு பணியில் சேர தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குத் தனியாக இட ஒதுக்கீடு உரிமையை அரசு வகுத்து செயல்படுத்தி வருகிறது. இது போன்ற சட்டம் கொண்டு வரும் அதிகாரம் மக்கள் மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**4. மத வழிபாட்டு உரிமை (விதி 17) (ம.உ.பி பிரிவு 27)**

குறிப்பிட்ட மத வழிபாட்டைப் பின்பற்றும் மக்கள்தான் வாழவேண்டும் என்ற விதிமுறை எதுவும் கிடையாது.நாட்டு மக்கள் தான் விரும்பும் மத வழிபாடுகளைச் சுதந்திரமாக செயல்படுத்த உரிமை உள்ளது. எந்தவித அடிப்படை காரணங்களைக் காட்டியும் அதை தடுக்க முடியாது. அப்படி தடுத்தால் தண்டனைக்குரிய குற்றமாகும்.

**5. பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திர உரிமை (விதி 19) (ம.உ.பி பிரிவு 19,20)**

பேச்சுச் சுதந்திர உரிமை, அமைதியாக மற்றும் சரியான நோக்கத்தில் கூட்டம் நடத்தும் உரிமை, சங்கம் அமைப்புகள் தொடங்கும் உரிமை, இந்திய தேசம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்யும் உரிமை,இந்தியாவின் எந்தப் பகுதியிலும் சுதந்திரமாக வாழும் உரிமை, நாட்டில் எந்தப் பகுதியிலும் சுதந்திரமாக தொழில், வர்த்தகம் செய்யும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

**6. குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும் பாதுகாப்பு உரிமை (விதி 20) (ம.உ.பி பிரிவு 9,10,11)**

அ) சட்டத்தை மீறி குற்றம் செய்பவர்களை மட்டும் தண்டிக்கும் உரிமை

(ஆ) சட்டத்தில் வழங்கியுள்ள அளவு மட்டுமே தண்டனை வழங்க வேண்டும்.

(இ) ஒரே குற்றத்திற்காக ஒருவரைப் பலமுறை தண்டிக்க முடியாது

(ஈ) குற்றம் செய்துள்ள புகாரின் பேரில் உள்ள அம்சங்களைத் தவறு செய்தவர் தானே சாட்சி சொல்ல அனுமதிக்க முடியாது.

**7. வாழ்வுரிமை (விதி 21) (ம.உ.பி பிரிவு பிரிவு 3)**

நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் சட்டத்திற்குட்பட்டு அமைக்கப்பட்டுள்ள வழிமுறைகள் படி வாழும் தகுதியைப் பெற்றுள்ளார்.



**8. குற்றவாளியிடம் பறிமுதல் மற்றும் சுதந்திரப் பாதுகாப்பு உரிமை (விதி 22) (ம.உ.பி பிரிவு 9, 10 )**

(அ.) தன்னை கைது செய்ததற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ளும் உரிமை

(ஆ) தனது வக்கீலைச் சந்தித்து தனது தரப்பு நியாயத்தைச் சொல்லும் உரிமை

(இ) கைது செய்யப்பட்டவரை அவர் கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் உள்ளூர் நீதிமன்ற நீதிபதி முன் ஆஜர்படுத்தவேண்டும். அதை மீறும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் சட்டத்தில் இடமுள்ளது.

**9. அடக்குமுறைக்கு எதிரான உரிமை (விதி 23,24 ) (ம.உ.பி பிரிவு 4, 5 )**

14 வயதுக்கும் குறைவான சிறுவர்களைத் தொழிற்சாலை, சுரங்கம் உள்பட ஆபத்தான வேலைகளில் ஈடுபடுத்துவது பெரிய சமூகக் குற்றமாகச் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளது. மேலும் வலுக்கட்டாயமாகப் பணியில் அமர்த்தி வேலை வாங்கிய பின், அதற்கான கூலி கொடுக்காமல் இழுத்தடிப்பதும் குற்றமாகும்.

**10 மத உரிமை (விதி 25) (ம.உ.பி பிரிவு 18)**

தனி மனிதன் தனது வாழ்க்கையில் எந்தெந்த உரிமைகளைப் பெற்று சுதந்திரமாக வாழ்கிறானோ, அதேபோல் தான் விரும்பும் மதத்தில் சேர்ந்து வழிபடும் முழு உரிமையும் பெற்றுள்ளார். அதே போல் தான் விரும்பும் மதத்தின் பிரச்சாரத்தை எந்த நேரத்திலும் செய்ய உரிமை பெற்றுள்ளார்.

**11. சிறுபான்மையினர் உரிமை (விதி 26)**

அனைத்து மதப்பிரிவினருக்கும், பொதுநிலை நெறியியல் சுகாதாரம் ஆகியவைகளுக்குட்பட்ட மத நடவடிக்கைகளைச் செயல்படுத்தவும், நிறுவனங்களைத் தொண்டு மனப்பான்மையிலும் மத நம்பிக்கை, நோக்கத்திற்கும் சொத்துகளை வாங்கவும், நிர்வகிப்பதிலும் சட்டப்படி உத்திரவாதம் அளிக்கிறது.

**12. வரி செலுத்தும் உரிமை (விதி 27)**

எந்த நபரையும் எந்த ஒரு குறிப்பிட்ட மத வளர்ச்சிக்கோ, அல்லது மத நிறுவனத்துக்கோ வரி செலுத்த கட்டாயப் படுத்தக் கூடாது.

**13. கல்வி நிறுவனங்களில் மத போதனைகள் பற்றி (விதி 28 )**

அரசு நிதி உதவி பெறும் கல்வி நிலையங்களில் கல்வி நிறுவனங்கள் அவற்றின் உறுப்பினர்களைக் கட்டாய மத போதனை வழங்குவதையோ, மத வழிபாட்டுக்குக் கலந்து கொள்ள வற்புறுத்துவதையோ தடை செய்கிறது. வயது வராத நபரானால் பாதுகாவலர் சம்மதமின்றி மத போதனை குழந்தைகளுக்கு வழங்கக் கூடாது.

**14. கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையும் கலாச்சார நடவடிக்கையும் (விதி 29)**

இந்தியக் குடிமக்களில் வேறுபட்ட மொழிக் கலாச்சார பிரிவினருக்குத் தங்களின் மொழி கலாச்சாரத்தைப் பாதுகாக்கவும், வளப்படுத்தவும் உரிமை உண்டு.

**15. அரசு உதவித் தொகை பெறும் சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களுக்கு நிதி அளிப்பதில் அரசு வேறுபாடு காட்டக் கூடாது (விதி 30)**

**16. சொத்தைக் கையகப் படுத்துவது பற்றி (விதி 31)**

சட்ட ஆலோசனையைப் பெறாமல் எவருடைய சொத்தையும் பறிக்கக் கூடாது.

பொது நன்மையைக் கருதியும் அல்லது சட்ட ஆலோசனையைக் கொண்டும் அல்லாமல் எந்தச் சொத்தையும் கட்டாயமாகக் கையகப்படுத்தவோ, வற்புறுத்திப்பெறவோ கூடாது. அப்படி கையகப்படுத்தவோ,வாங்கவோ செய்தால், இதற்கான நிர்ணயிக்கப்பட்ட ஈட்டுத் தொகையை அல்லது அந்தச் சட்டம் கொள்கைவழி நிர்ணயித்த விலையை அளிக்கவேண்டும்.

**17.உரிமைகளை அமுல் படுத்த (விதி32)**

இந்தப்பாகத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை செயலாக்குவதற்காக உச்சநீதிமன்றத்தில் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உரிமை பொறுப்புறுதி செய்யப்பட்டுள்ளது.



## V. பெண்ணுரிமைகள்

பெண்ணுரிமையானது, மனித உரிமைகளில் அடங்கிய ஒன்றாகும். பெண்ணுரிமை என்பது சமுதாயத்தில் ஆண்களுக்கு நிகராக சம அந்தஸ்து வழங்கப்படுவதாகும். பெண்களுக்கு அனைத்து துறைகளிலும சம அந்தஸ்தும் ,ஆண்களுக்கு நிகரான சம உரிமையும் வழங்கப்படுவதாகும்.

கீழ்க்கண்ட பெண்ணுரிமைகள் சமூக, பொருளாதார, குடியுரிமை மற்றும் பிற களங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

1. சமத்துவ உரிமை 2. சொத்துரிமை 3. பாரம்பரியச் சொத்துரிமை 4. கூலி மற்றும் வருமானம் பெரும் உரிமை 5. வர்த்தகம், பணிகளில் ஈடுபடும் உரிமை 6. சம வேலைக்குச் சம ஊதியம் பெரும் உரிமை 7. தொழிற்சங்க உரிமை 8.பணிப் பாதுகாப்பு மற்றும் பிரசவ விடுப்பு உரிமை 9. திருமண ஒப்புதல் வழங்கும் உரிமை 10.விவாகரத்து பெறும் உரிமை 11. குழந்தைகளைப் பாதுகாக்கும் உரிமை 12.விதவையான பிறகோ,அல்லது விவாகரத்து செய்தபின் குழந்தைகள் மீது உரிமை. 13. பேச்சுரிமை 14. மத உரிமை 15 குடியுரிமை மாற்றும் உரிமை 16. கல்வியுரிமை 17. உடைகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை. 17. வாக்குரிமை 18. மறுமணம் செய்யும் உரிமை 19. சமயங்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை 20.அரசு பதவிகளை வகிக்கும் உரிமை

**பெண்ணினத்தைத் தாக்கும் பொதுவான பிரச்சனைகள்.**

1. பெண்களைத் தாழ்வாக மதித்தல் 2. பெண் சிசுக்கொலை 3. பால்ய விவாகம் 4. ஆண்களுக்குப் பலதார மணம் 5. வரதட்சணை 6. பெண் தீ வைத்து தற்கொலை 7. வல்லுறவு 8. பெண் சீண்டல் 9. சொத்துரிமையின்மை 10.கட்டாய விபச்சாரம் 11. பாலினப் பாகுபாடு 12.சதிக்கொடுமை 13. குடும்ப வன்முறை 14 இழி தொடர்பு போன்றவைகள் பெண்களைப் பொதுவாக தாக்கும் பிரச்சனைகளாகும்

அனைத்து வகை பெண் பாகுபாட்டுக்கெதிரான நடவடிக்கை மாநாடு (**CEDAW**- Convention on the Elimination of All Forms of Discrimination of Women) 1979-ல் சர்வதேச அளவில் ஐக்கிய நாடுகளின் சபையால் உரிமை மசோதா

நிறைவேற்றப்பட்டது. அம்மசோதா 1981 -ல் நடைமுறைக்கு வந்தது.உலகமெங்கும் 188 நாடுகள் இதை ஏற்றுக்கொண்டன. அம்மசோதாவின் முக்கிய அம்சங்கள் கீழ்வருவன.

1. பாலினப் பாகுபாட்டுக்கு முற்றுப்புள்ளி வைப்பது
2. பாலினத்தின் தாழ்வு மனப்பான்மை, உயர்வு மனப்பான்மையை நீக்குவது.
3. பாலினச் சமத்துவம் உருவாக்குவது
4. பெண் கொடுமைகளைக் குறைப்பது
5. கட்டாய விபச்சாரத்தைத் தடுப்பது.
6. ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்வியில் சம வாய்ப்பு வழங்குவது.
7. கல்வியை ஊக்குவிப்பது
8. பெண்களுக்கெதிரான வன்கொடுமையைத் தடுப்பது.

**பெண்களுக்கெதிரான வன்முறை**

பெண்களுக்கெதிரான வன்முறை என்பது உலகத்தின் மிக விரிந்து பரந்த மனித உரிமை மீறலாகும். அது உடல், பாலியல், உளவியல், பொருளாதாரக் குற்றம், இவற்றில் எது வேண்டுமானாலும் இருக்கலாம். அது கால, இட, இன, நிலவியல், சொத்து மற்றும் பண்பாட்டு எல்லைகளைத் தாண்டி நிகழ்த்தப்படுகிறது. அது வீட்டில், தெருக்களில், பள்ளிகளில், வேலைத்தளங்களில், வயல்வெளிகளில், அகதி முகாம்களில் வெளிப்படும். மேலும் அது சர்வதேசமும் காலங் காலமாக அறிந்த குடும்ப மற்றும் பாலியல் வன்முறை தொடங்கி கர்ப்பிணிகள் மீதான வன்முறை மற்றும் கௌரவக் கொலைகள் வரை நீளும்.

**வரையரை : ஐக்கிய நாடுகள் சபை கீழ்க்கண்டவாறு விளக்குகிறது ;** "பெண்களுக்கு உடல் ரீதியாகவோ, பாலியியல் ரீதியாகவோ அல்லது இப்படி அளிக்க வாய்ப்புள்ள பாலினத்தைச் சார்ந்த எந்த ஒரு வன்முறை நடவடிக்கையும் பெண்கள் மீதான வன்முறை. இதில் மேற்படி வன்முறையை நிகழ்த்துவேன் நிகழ்த்துவோம் என்கின்ற மிரட்டலும் வலுக்கட்டாயமாகவும், ஒரு தலைப்பட்சமாகவும் பறிக்கப்படும் சுதந்திரமும் அடங்கும். இவை தனிப்பட்ட வாழ்க்கையிலோ, பொது வெளியிலோ எங்கு நடந்தாலும் அது பெண்கள் மீதான வன்முறை என்று வரையறுக்கப்படும்.



"காலங்காலமாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான சமனில்லா செல்வாக்கின் வெளிப்பாடே பெண்களுக்கு எதிரான வன்முறையாகும். ஆண்களைவிடத் தாழ்ந்த நிலைக்குப் பெண்களைத் தள்ளும் இக்கட்டானச் சமுதாயச் செயற்பாடுகளுள் ஒன்று பெண்களுக்கு எதிரான வன்முறையாகும்" என்று ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கு எதிரான வன்முறைஒழிப்பு சாற்றுரை கூறுகிறது.

**2007 மார்ச் 8 அன்று ஐ நா சபையின் பொதுச்செயலாளர் திரு. பான் கீ மூன்** "பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் மீதான வன்முறை, உலகின் ஒவ்வொரு கண்டத்திலும், ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு பண்பாட்டிலும் கட்டற்ற அளவில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இது பெண்ணின் வாழ்வை, அவர்களின் குடும்பங்களை, ஏன் ஒட்டுமொத்த சமூகத்தையே பாழாக்கிக் காவு வாங்கிக்கொண்டே இருக்கிறது. பெரும்பாலான நம் சமூகங்கள் பெண்கள் மீதான வன்முறையைக் குற்றம் எனத் தடை செய்துள்ளனவென்றாலும், உண்மையில் நடைமுறையில் அவை மூடி மறைக்கப் படுகின்றன" என்று வரையருக்கிறார்.

பெண்களுக்கெதிரான வன்முறையை ஆய்ந்த உலக சுகாதார அமைப்பு, இவ்வன்முறை பெண்களின் வாழ்நாளின் ஐந்து நிலைகளில் நடைபெறுவதாக வகைப் படுத்தியுள்ளது.

1. பிறப்பிற்கு முன்னர் 2. மழலைப் பருவம், 3. சிறுமியர் 4. வளர்சிதை மாற்றம் மற்றும் வயது வந்தோர் 5.முதியோர் ஆகியனவாகும்.

**வன்கொடுமையின் வகைகள்:**

1.உடல் ரீதியான வன்கொடுமை 2. உளவியல் ரீதியான வன்கொடுமை 3.வாய்மொழி ரீதியான வன்கொடுமை 4.பாலியல் ரீதியான வன்கொடுமை 5.பொருளாதார ரீதியான வன்கொடுமை. 6.தகவல் தொடர்பு ரீதியான வன்கொடுமை.

**உடல் ரீதியான வன்கொடுமை:** கன்னத்தில் அறைதல், அடித்தல், கையை முறுக்குதல், கூரிய ஆயுதத்தால் குத்துதல், குரல்வளையை நசுக்குதல், எரித்தல், மூச்சுத் திணறடித்தல்,

உதைத்தல், பொருளொன்றினால் அல்லது ஆயுதமொன்றினால் பயமுறுத்தல், அடித்துத் தள்ளுதல், மற்றும் நபர் ஒருவருக்கு உடல்ரீதியிலான காயங்களை ஏற்படுத்தும் விதத்தில் வன்முறையின் ஏதாவது வேறு வடிவம் மற்றும் கொலை ஆகியனவும் உடல்ரீதியாகத் தவறாக நடத்தப் படுதல் அல்லது மூர்க்கத்தனத்தில் ஏதாவது செயதல் ஆகியவை உடல்ரீதியான வன்முறையாகும்.

**உளவியல் ரீதியான வன்முறை:** நபர் ஒருவரை உணர்ச்சி ரீதியாக குழப்புகின்ற அல்லது பாதிப்பு ஏற்படுத்துவதை நாடி நிற்கின்ற வன்முறையின் ஏதாவது வடிவமே உணர்வு பூர்வமான அல்லது உளவியல் ரீதியிலான வன்முறையாகும். இது தொடர்ச்சியாக ஏசுதல், பயமுறுத்துதல், சிறுமைப்படுத்தல், கத்துதல், வீட்டுக்குள் கட்டுப்படுத்தல, மேற்பார்வை, கைவிடுதலின் அல்லது துஷ்பிரயோகத்தின் பயமுறுத்தல்கள், சிறுவர்களின் பாதுகாவலை எடுத்துச் செல்வதாகப் பயமுறுத்தல், பொருட்களை அழித்தல், தனிப்படுத்தல், மற்றும் தொடர்ச்சியாக இகழ்தல் ஆகியனவற்றை உள்ளடக்கக் கூடும். பெருமளவு வடிவமைப்பிலான பால்நிலை அடிப்படையிலான வன்முறை உணர்வு பூர்வமானதும், உளவியல் ரீதியிலானதுமான வன்முறையில் விளைகின்றது.

**வாய் மொழியிலான வன்முறை:** பெண்ணை அச்சுறுத்தல், கத்துதல், ஏசுதல், சிறுமைப் படுத்துதல், பயமுறுத்துதல் ஆகியவையே வாய்மொழியிலான வன்முறையாகும். இவ்வகையான வன்முறை ஒரு பெண்ணின் சுயகௌரவத்தையும் உளவியல் சேமநலனையும் சேதப்படுத்துகிறது.

**பாலியல் ரீதியான வன்முறை:** பாலியல் வல்லுறவு அல்லது நிர்ப்பந்தத்திலான பாலியல், முறை தவறிய உடலுறவு, பாலியல் தொந்தரவு, பாலியல் வன்முறை மற்றும் தேவையற்ற பாலியல் செயற்பாடுகளை நிர்ப்பந்தித்தல், அல்லது ஏனையோருடன் பாலியலை மேற்கொள்ளுமாறு கட்டாயப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதே இந்த வகை.

**பொருளாதார ரீதியான வன்முறை:** நிதிசார் அல்லது **வளங்களை** ஈட்டுவதற்கு, **நன்**மையடைவதற்கு அத்துடன்



அனுபவிப்பதற்குப் பெண்ணின் சுதந்திரத்தைத் தடுக்கின்ற அல்லது பிடுங்கிக் கொள்கின்ற அல்லது மறுதலிக்கின்ற ஏதாவது செயல்பாடு அல்லது முயற்சி பொருளாதார ரீதியான வன்முறையாகும்.

உணவு மற்றும் அடிப்படைத் தேவைகளை மறுத்தல், தொழிலுக்கான அடைதலைக் கட்டுப்படுத்தல் அல்லது நிர்ப்பந்தித்தல் போன்ற செயற்பாடுகளை உள்ளடக்கியதே இந்த வகை.

**தகவல் தொடர்பு ரீதியான வன்முறை:** கையடக்கத் தொலைபேசி மற்றும் இணையத்தளங்கள், சமூக வலைப்பின்னல், முகநூல், மின்னஞ்சல் போன்ற தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்கள் ஊடாக இழைக்கப்படும் வன்முறை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் சார்ந்த வன்முறை எனப்படும். இதனை டிஜிட்டல் அல்லது சைபர் வன்முறை என்றும் கூறலாம். ஆபாசப் படங்கள், சிறுவர் ஆபாசப் புகைப்படம், பின்தொடர்தல், அலைபேசியில் பெண்களின் அனுமதியின்றி அவர்களுக்குப் பொருத்தமற்ற படங்களை, வீடியோக்களை மேலேற்றுதல், பெண்களை அச்சுறுத்தி மோசப்படுத்துவதும், தொடர்வதும்தான் டிஜிட்டல் வன்முறை எனப்படும்.

பாலியல் வன்முறையைத் தடுப்பதற்கான ஆலோசனைகளை உருவாக்க, முன்னாள் நீதியரசர் ஜே எஸ் வர்மா தலைமையில் மூவர் குழு ஒன்றை மத்திய அரசு 2012 டிசம்பர் 23ல் அமைத்தது. 80000-க்கும் மேற்பட்ட ஆலோசனைகள் நாடு முழுவதிலிருந்தும் பெறப்பட்டு 2013 ஜனவரி 23 ல் குழு 20அத்தியாயங்களுடன் 654 பக்க அறிக்கையாக சமர்ப்பித்தது. இந்த அறிக்கையின் ஆலோசனைகளும் அவற்றின் விளைவுகளும் பின்வருமாறு

1. பெண்களுக்குப் பாதுகாப்பான கண்ணியமாக வாழ்வுச் சூழலை அளிப்பது அரசின் கடமை என்று அழுத்தமாக எடுத்துக் கூறுகிறது.

2. சட்டக்கமிஷன் 84-வது மற்றும் 172-வது ஆண்டறிக்கையும், தேசியக் காவல்துறை கமிஷன் அறிக்கையும் பாலியல் வன்முறை குறித்த பல பரிந்துரைகள் உள்ளடக்கியுள்ளதைச் செயல்பட வைக்கவேண்டுமென வலியுறுத்துகிறது.

3. பாலியல் வன்கொடுமைகளை, மான அவமானமாகக் கருதாமல் தைரியமாக பாதிக்கப்பட்டோர் புகார் செய்யவேண்டும். புகார் கொடுக்க அரசு ஊக்கப்படுத்தவேண்டும்.

4. காவல் நிலையத்திற்கு வரும் புகார் மீது, அதை கட்டப்பஞ்சாயத்து முறையில் அணுகாமல் சட்டப்படி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

5. பாலியல் வல்லுறவுப் பிரச்சினை ஆண் பெண் இருவருமே மாறி மாறி புகார் கொடுத்து கட்டப்பஞ்சாயத்து முறைக்கு வழி வகுக்கும். முன்னால் போட்ட சட்டத்தில் பிரதானமாக பெண்களுக்கு எதிரான கொடுமையே என அழுத்தம் தரும் விதத்தில் மாற்றம் செய்ய ஆலோனையை அரசு ஏற்று குற்றவியல் சட்டத்தில் திருத்தத்தை 2013-ல் செய்தது.

6. பாதுகாவலில் பலாத்காரம் என்பது கூடுதல் குற்றம். காவல் அதிகாரி, சிறை அதிகாரி, கல்வி நிலையப் பொறுப்பாளர், ஆசிரியர் இப்படி நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள் தவறிழைக்கும்போது அதிக தண்டனை தேவை என குறிப்பிட்டதை அரசும் ஏற்றுக்கொண்டு 10 ஆண்டு முதல் ஆயுள் முழுவதும் தண்டனை எனச் சட்டத்தில் சேர்த்துள்ளது.

7. மனைவியின் விருப்பத்திற்கு விரோதமாக அல்லது சம்மதமின்றிப் பாலியல் வல்லுறவில் ஈடுபடுவது கணவனாக இருந்தாலும் அது குற்றமாகக் கருதப்படவேண்டும்.

8. பாலியியல் வன்முறை புகார் வந்தவுடன் அரசு அதிகாரி காவல்துறையினர் சட்டப்படி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என அறிவுறுத்தியதின் பேரில் அரசு இ பி கோ 166 ஏ பிரிவில் 6 மாதம் முதல் 2 ஆண்டு வரை சிறைத் தண்டனை உட்பட பெண்களுக்குச் சாதகமான முறையில் சிபாரிசுகளை வழங்கியுள்ளது.

## VI. தலித் மக்களுக்கெதிராக உரிமை மீறல்கள்

**தீண்டாமைக் கொடுமைகளும் மனித உரிமை மீறல்களும் :**

இந்திய அரசியல் சட்டத்தில் பிரிவு 17-ன் படி தீண்டாமை எந்த வடிவத்தில் கடைப்பிடிப்பதும் தடை செய்யப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது.



1955-ஆம் ஆண்டு மத்திய அரசு தீண்டாமைக் கொடுமையை ஒழித்திட குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்தது. இது பழங்குடியினருக்குப் பொருந்தும்படியாக இல்லாமல் இருந்தது, பாராளுமன்றம் திரு. இளையபெருமாள் தலைமையில் கமிட்டி அமைத்தது. அதன் சிபாரிசின்பேரில் 1989-ஆம் ஆண்டு எஸ்சி / எஸ்டி வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இந்தச் சட்டம் 1995ல் தான் நடைமுறைக்கு வந்தது. பல்வேறு சமூக இயக்கங்களின் முயற்சியால் இந்தச் சட்டம் வலிமையோடு அமுல்படுத்த 2015ல் திருத்தப்பட்டு ஜனவரி 26, 2015 முதல் அமுல்படுத்தப்பட்டது.

மேற்கண்ட பல சட்டங்கள் கொண்டுவரப்பட்டாலும் தீண்டாமைக் கொடுமை முற்றாக ஒழிக்கப்படவில்லை. பல வடிவங்களில், இந்தியக் கிராமப் புறங்களில் இன்னும் தீண்டாமைக் கொடுமைகள் நிலவி வருகின்றன.

சாதியம் இந்தியச் சமூகத்தில் மிக ஆழமாக வேரூன்றியுள்ள பிரச்சினையாகும். நீண்ட நெடுங்காலமாக இந்திய நாட்டிற்கும், மக்களுக்கும் பெரும் வேதனை தரும் பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. இன்றும் ஜனநாயக அமைப்பிற்கே இது பெரும் சவாலாக இருந்து வருகிறது. அரசியல் சட்டப்படி பிரிவு -17 தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது என்று குறிப்பிட்டிருந்தாலும், சமுதாயத்தின் கொடூரமான வடிவங்களான தீண்டாமையும், சாதியக்கொடுமைகளும் தொடர்கின்றன. இதற்கு முற்றுப்புள்ளி வைப்பது அவசர கடமையாகும் என்ற அடிப்படையில் தலித் மக்களின் பிரச்சினைகள் பற்றியும், இவர்களின்பால் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் புரிந்து கொள்ளவேண்டியுள்ளது.

சமத்துவச் சமுதாயம் காண விழைந்த ஆன்மீக மகான்களான அய்யா வைகுண்டர், வள்ளலார், ஸ்ரீமன் நாராயண குரு, சமூகச் சீர்திருத்தவாதியான மகாராஷ்டிராவில் பிறந்த மகாத்மா ஜோதிபா பூலே, டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார் இன்னும் ஏராளமான சமூகச் சீர்திருத்தவாதிகள் நடத்திய சமூக இயக்கங்களாலும், அரசியல் சட்டம் பிரிவு-17 தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது எனக் குறிப்பிட்டு, அதனடிப்படையில்

நிறைவேற்றிய சமூக நீதி திட்டங்களால் ஓரளவு தலித்துகளின் சமூக அந்தஸ்து உயர்ந்திருந்தாலுங்கூட, இன்னும் பொருளாதாரச் சமத்துவச் சமூக அந்தஸ்தும் அவர்களுக்கு எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது. ஒட்டு மொத்த தலித் மக்களின் வாழ்நிலைகளில் இருக்கும் பிரச்சினைகளை எவிடென்ஸ் தன்னார்வ அமைப்பும், தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியும் தங்களது களப்பணி ஆய்வின் மூலமாக கீழ்க்கண்ட வடிவங்கள் வெளிக்கொணரப்பட்டிருக்கின்றன.

1. ஆலயங்களில் நுழைவதற்குத் தடை 2. கிராமங்களில் டீ கடைகளில் இரட்டை டம்ளர் முறை. 3. சாதி இந்துக்களின் தெருக்களில் உள்ள பொதுக் கிணறு, குழாய்களில் தண்ணீர் எடுக்கத் தடை 4. மேல்சாதித் தெருக்களில் செருப்பு போட்டு நடக்கத் தடை 5. குடை பிடிக்கத் தடை 6. பொது சுடுகாட்டைப் பயன்படுத்தத் தடை 7. தோளில் துண்டு அணியத் தடை 8. கோவில் திருவிழாக்களில் தேர் இழுக்க, தலித் மக்களின் கோயில் தேர் பிற சாதி தெருக்களில் நுழையத் தடை 9. வயதான தலித் பெரியவர்களை இதர சாதி சிறுவர்கள் ஒருமையில் அழைப்பது 10. தலித் சாதியினரின் பெயரின் மரியாதை பகுதியை வெட்டிவிடுவது. மாடசாமியை "மாடா" என்றழைப்பது. 11.சாவு செய்தி சொல்ல கட்டாயப்படுத்துவது 12. பிணக்குழி தோண்ட கட்டாயப்படுத்துவது 13. மலம் அள்ள கட்டாயப்படுத்துவது 14.இறந்த வீடுகளிலும், கோயில்களிலும் அடிமைத் தொழிலாக பறையடிக்கக் கட்டாயப்படுத்துவது 15. தலித் உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு உரிய அந்தஸ்து தர மறுப்பது-பஞ்சாயத்து தலைவர் நாற்காலியில் உட்கார விடாமல் செய்வது 16. தலித்துகளுக்கு ஒதுக்கப்பட்ட ஊராட்சிகளில் தேர்தல் நடத்த விடாமல் தடுப்பது. 17. தலித் பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்வது மற்றும் கொடுமைப் படுத்துவது 18.அரசு நிர்வாகம் ஓரவஞ்சனையுடன் நடந்து கொள்வது.19. தலித் மக்கள்மீது காவல்துறை மிருகத்தனமாக தாக்குதல் தொடுப்பது 20. சாதியின் பெயரைச் சொல்லி திட்டுவது 21. தலித்துகளுக்கு முடிவெட்ட மறுப்பது. 21. தமிழகத்தின் சில கிராமங்களில் தலித் மாணவர்களைத் தலித் என்பதால் படிப்பு வராது என்று திட்டுவது



22. பள்ளிகளில் தலித் மாணவர்களைத் தனியாக உட்கார வைப்பது.23. கிராம ஓட்டல்களில் தலித்துகளை மட்டும் தரையில் உட்கார வைப்பது 24. கிராமப் பொது தொலைக்காட்சியைத் தலித்துகள் பார்க்கத் தடை 25. தலித் திருமணங்களுக்குத் திருமண மண்டபம் தர மறுப்பது 26. கிராமப் பொது மேடைகளில் நடைபெறும் கூட்டங்களில் தலித்துகள் பேச தடை. 27. கோவிலில் காப்பு கட்டிய பிறகு திருவிழா முடியும் வரை தலித்துகள் முகத்தில் முழிக்காமல் இருப்பது 28 தலித்துகள் தெருவில் ஆண் நாய் வளர்க்கத் தடை 29. சத்துணவுக் கூடத்தில் தலித்துகளுக்கு தனித்தட்டு 30.தலித்துகளின் நிலம் மற்றும் வீட்டு மனைகளை ஆக்கிரமித்துக்கொண்டு திருப்பித்தர மறுப்பது. 31.தலித் அதிகாரி தலைமை தாங்கும் விழாக்களைப் புறக்கணிப்பது 32. தலித் விற்பனை செய்யும் பொருளை வாங்க மறுப்பது. 33. தலித்துகள் ஆடு வளர்க்கத் தடை 34. கடைகளில் தலித்துகளுக்குப் பொருள் வழங்க மறுப்பது 35.பேருந்து நிறுத்தத்தில் தலித்துகள் உட்காரத் தடை. 36. பொதுக் குளத்தில் குளிக்கத் தடை 37. ஆதிக்கச் சாதியினர் வரும்போது தலித்துகள் கட்டிலில் உட்காரத் தடை 38. மேல் சாதியினர் வந்தால் பேருந்துகளில் தலித்துகள் எழுந்து இடம் கொடுக்க வேண்டும் என்பது. 39. கூலி வேலை செய்யும் தலித்துகள் உணவு வாங்க அவர்களே தட்டு கொண்டு வரவேண்டும் என்று கூறுவது 40.இலவசமாக கூலியில்லாமல் வேலை செய்ய வற்புறுத்துவது 41. கிராமப்புறப் பள்ளிகளில் தலித் ஆசிரியர்களைப் பணிபுரிய விடாமல் தடுத்து வேறு ஊர்களுக்கு மாறுதலில் செல்ல நிர்ப்பந்திப்பது 42.தனியார் தொழிற்சாலைகளில் நிர்வாகப் பிரிவில் தலித்துகளை வேலைக்கு எடுக்க மறுப்பது. 43. கிராமப் பொதுச் சொத்துக்களில் இருந்து வரும் வருமானத்தில் தலித்துகளுக்கு பங்கு கொடுக்க மறுப்பது. 44. அரசு அலுவலகம், ரேசன் கடை, பேருந்து நிறுத்தம் போன்றவற்றைத் தலித்துகள் வசிக்குமிடங்களில் அமைக்க மறுப்பது போன்ற இன்னும் பல வடிவங்களில் தீண்டாமை தொடர்கிறது.

பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2016ஐ தமிழக அரசு இதழில் வெளியிடப்பட்டுள்ளது. தீண்டாமைச் செயல்கள் என 180

குற்றங்களை வகைப்படுத்தியதோடு தீர்வுதவித் தொகையிலும் மாறுதல் செய்து குற்றங்களுக்குத் தக்கபடி ரூ 85000 முதல் 8,50,000 வரை வழங்கிட வகை செய்துள்ளது.

விண்வெளியில் வித விதமாக ராக்கெட் விட்டு வேற்றுக் கிரகங்களில் மனிதன் வாழ்வதற்கு ஆராய்ச்சி நடந்துகொண்டு இருக்கும் காலத்தில், மலக்குழிக்குள்ளே மனிதனை இறக்கி உயிரைவிட வைக்கும் இழிவு நடந்துகொண்டு இருக்கிறது.இந்திய நாகரிகத்தைப் பற்றிச் சரியாகவோ, தவறாகவோ பெருமிதம் கொள்கிற எவருக்கும் இந்த இழிவு தலைகுனிவு ஆகும்.

மலக்குழிக்குள் மனிதன் இறந்துபோக காரணமான மனித மலத்தை மனிதன் சுத்தம் செய்தல் எனும் பழக்கத்தை இன்னமும் ஒழிக்கப்படாத அடிமைத்தனத்தின் வடிவங்களில் ஒன்றாக ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைப் பிரிவு அறிவித்துள்ளது. ஏறக்குறைய 800 வருடங்கள் பழமையான அடிமைத்தனம் இது.

தற்போது இந்தியாவில் 657 மாவட்டங்கள் உள்ளன. அவற்றில் இன்னமும் 256 மாவட்டங்களில் கையால் மலமள்ளும் முறை இருக்கிறது என்று ச ஃபை கர்மாச்சாரி அந்தோளன் எனும் அமைப்பு ஆய்வு அறிக்கை கொடுத்துள்ளது.

மக்கள் அமைப்புகளின் பல்வேறு கட்ட முயற்சியால் மத்திய அரசு "கையால் மலமள்ளுவோரை வேலைக்கு அமர்த்துதல் மற்றும் உலர்கழிப்பறைகளைக் கட்டுதல் தடுப்புச் சட்டத்தை" 1993ஆம் ஆண்டு கொண்டு வந்தது.

இச்சட்டப்படி, மனித மலத்தை மனிதன் தலையில் சுமக்க வைத்தால் அல்லது கையில் தூக்கி செல்ல வைத்தால், அது தடை செய்யப்பட்ட குற்றம். தண்ணீர் இல்லாத கழிப்பறைகள் கட்டுவதும், இருப்பதும் குற்றம். கையால் மலம் அள்ளும் ஒருவரை வேலைக்கு அமர்த்துபவருக்கு இந்தச் சட்டப்படி ஒருவருடம் வரை சிறை, ரூ 2000 வரை அபராதம் என்று குறிப்பிட்டுள்ளது.

கையால் மலமள்ளுவோரை விடுதலை செய்து மறுவாழ்வு அளிக்கும் தேசியத் திட்டம் 1991-92-ல் துவக்கப்பட்டது. அதன்கீழ் நடந்த கணக்கெடுப்பில் இந்தியாவில் 7.70 லட்சம் பேர் கையால் மலம் அள்ளுவோரும் அவர்களைச் சார்ந்து



வாழ்வோரும் இருப்பதாக குறிப்பிடுகிறது. மாநிலங்கள் மத்திய அரசுக்கு 2007-ல் கொடுத்த கணக்குப்படி 21 மாநிலங்களில் 3 லட்சத்து 42 ஆயிரம் பேர் எனக் கணக்கு சொல்கிறது.சர்வதேச தொழிலாளர் அமைப்பு 7 லட்சம் பேர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளதாக கணக்கு சொல்கிறது. 2010-ல் 16 மாநிலங்கள் 2 யூனியன் பிரதேசங்கள் மத்திய அரசுக்குக் கொடுத்த அறிக்கையில் 1,18,474 பேர் என கணக்கு தெரிவிக்கிறது. பல்வேறு சமூக இயக்கங்கள் மூலமாக இந்த எண்ணிக்கை கணிசமாக குறைந்து வருகிறது.

## VII. குழந்தை உரிமைகள்

"பகலைப் பற்றிய இயல்பை எவ்வாறு காலைப்பொழுது காட்டுகிறதோ, அதுபோல ஒரு மனிதனின் இயல்பைக் காட்டுவது குழந்தைப் பருவமே" என்று ஆங்கிலக்கவிஞர் ஜான் மில்ட்டன் "இழந்த சொர்க்கம்" எனும் படைப்பில் வெளிப்படுத்தியுள்ளார்.

18 வயதுக்குக்கீழ்இருக்கும் அனைத்து நபர்களும் குழந்தைகள்தாம். குழந்தைப்பருவம் என்பது ஒவ்வொரு மனிதரும் கடந்தே ஆகவேண்டிய ஒரு பருவம். குழந்தைகள், தங்களது குழந்தைப் பருவக்காலத்தில் பல்வேறு விதமான அனுபவங்களைப்பெறுகிறார்கள்.அனைத்துக்குழந்தைகளும், கொடுமைக்கு உள்ளாவது, தவறாகப் பயன்படுத்தப்படுவது ஆகியற்றிலிருந்து காப்பாற்றப்பட வேண்டியவர்கள்தாம்.

குழந்தைகளுக்கு எதனால் சிறப்புக்கவனம் தேவைப்படுகிறது? "1098 எனும் கட்டணமில்லா தொலைபேசிக்கு ஓராண்டில் சராசரியாக இந்தியாவில் 20 லட்சம் அழைப்புகள் வருகின்றன. இப்படி வரும் அழைப்புகளில் பெரும்பாலனவை கட்டாய வேலையில் மாட்டிக்கொண்ட குழந்தைகளின் கொடுமை பற்றியதுதான்" என நீதிராஜன் என்ற கட்டுரையாளர் குறிப்பிடுகிறார்.

ஆள் கடத்தல் தொடர்பாக 2015ல் இந்தியாவில் பதிவான குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்கள் 40 சதமான பேர் குழந்தைகள். பாலியல் தொழில் உள்ளிட்ட காரணங்களுக்காக வாங்கப்பட்டவர்கள் விற்கப்பட்டவர்கள் கடந்த ஆண்டை விட 25 சதம் அதிகம். பாதிக்கப்பட்ட 9127 பேரில்

18 வயதுக்குள்ளானவர்கள் 43 சதமானவர்கள் என்று தேசியக் குற்றப் பதிவேடுகளின் நிறுவனம் குறிப்பிடுகிறது என 25-10-2016 தமிழ் இந்து நாளேடு செய்தி தெரிவிக்கிறது. இந்த நிலைகளிலிருந்துதான் குழந்தை உரிமைகள் பற்றி பார்க்க வேண்டும்.

தாங்கள் வாழும் சூழ்நிலைகளால்,பெரியவர்களைவிட அதிகமாக பாதிக்கப்படக் கூடிய பலவீனமான நிலையில் குழந்தைகள் இருக்கிறார்கள்.

ஆகவே, மற்றெந்தப் பிரிவினரையும் விட, அவர்கள் சார்ந்த சமூகம் மற்றும் அரசாங்கங்களின் நடவடிக்கைகளாலும் நடவடிக்கையின்மையினாலும் அதிகமாகப் பாதிக்கப் படுகிறார்கள்.

நமது சமூகத்தையும் சேர்த்து, பல்வேறு சமூகங்களில் குழந்தைகள், அவர்களுடைய பெற்றோரின் சொத்துக்களாகக் கருதப்படுகிறார்கள்.அவர்கள் இன்று பெரியவர்கள் அல்ல என்றும் சமுதாயத்தின் முன்னேற்றத்தில் அவர்களுக்குப்பங்கு இல்லை என்றும் கருதப்படுகிறார்கள்.

குழந்தைகள், தங்களுக்கு என்று மனமும், புத்தியும் கொண்டவர்கள் என்றோ, தனிக்கருத்தை உடையவர்கள் என்பதாகவோ, தனக்குவேண்டியது பற்றித்தேர்ந்தெடுக்கும் திறன்உள்ளவர்கள் எந்த விஷயத்தைக்குறித்தும் முடிவு செய்யும் திறமை உள்ளவர்கள் என்றோ பெரியவர்கள் கருதுவதில்லை.

பெரியவர்கள், குழந்தைகளை வழி நடத்துவதற்குப் பதிலாக அவர்களது வாழ்க்கை குறித்த அனைத்து முடிவுகளையும் எடுக்கிறார்கள்.

குழந்தைகளுக்கு ஓட்டுரிமை கிடையாது. அதேபோல, அரசியல் பலமும் கிடையாது. பொருளாதாரத்திலும் பலவீனமாகவே இருக்கிறார்கள்.

இதனாலேயே அவர்களது குரலும் கோரிக்கைகளும் பெரும்பாலும் எடுபடுவதில்லை.

குழந்தைகள் தவறாகப் பயன்படுத்தப்படுவது, குரூரமாக நடத்தப்படுவது போன்ற அவலங்களுக்கு உள்ளாகக்கூடிய பலவீனமான நிலையில் உள்ளார்கள்.



### குழந்தைகளுக்கான உரிமைகள் என்ன?

18 வயதிற்குள் இருப்பவர்கள் சட்ட ரீதியான உரிமைகள், பாதுகாப்பு உத்தரவாதங்கள் ஆகியவற்றைப் பெறத்தகுதியும் உரிமையும் பெற்றவர்கள்.

இந்திய அரசியலமைப்புச்சட்டம், அனைத்துக் குழந்தைகளுக்கும் குறிப்பிட்ட உரிமைகளை அளித்திருக்கிறது.

இவற்றை இந்தக்காரணத்திற்காகவே சட்ட அமைப்பில் சேர்த்துள்ளார்கள் அவை:

- 6-14 வயது பிரிவினர் அனைவருக்கும் கட்டாயமாக ஆரம்பக்கல்வி இலவசமாகப் பெறுவதற்கான உரிமை (சட்டப்பிரிவு 21எ)
- 14 வயது பூர்த்தியாகும் வரை தீங்கு விளைவிக்கும் சூழ்நிலையில் வேலை செய்யத்தடை என்கிற பாதுகாப்பு உரிமை (சட்டப்பிரிவு 24)
- பொருளாதார நிலை காரணமாக வேறுவழியின்றி அவர்களது வயது அல்லது வலிமையை மீறிய பணிகளில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்துவது, கொடுமைக்குள்ளாவது ஆகியவற்றுக்குத்தடை என்ற பாதுகாப்பு உரிமை (சட்டப்பிரிவு 39) (இ)

இவற்றைத்தவிர, இந்தியாவிலுள்ள பிற குழந்தைப்பருவ வயதைக்கடந்த ஆண்/பெண் ஆகியோருக்கு இருக்கும் அனைத்து உரிமைகளும், குழந்தைகளுக்கும் இருக்கிறது.

1. சமமானஉரிமை (சட்டப்பிரிவு 14)
2. பாரபட்சமாக நடத்தப்படுவதற்கு எதிரான உரிமை (சட்டப்பிரிவு-15)
3. தனிப்பட்ட சுதந்திரத்திற்கும், சட்டபூர்வமான செயல்பாடுகளுக்குமான உரிமை (சட்டப்பிரிவு 21)
4. இழி தொழில் வணிகத்திலிருந்து பாதுகாக்கப்படவும், வலுக்கட்டாயமாகக் கொத்தடிமைகளாக ஈடுபடுத்தப் படுவதிலிருந்து பாதுகாக்கப்படவும் உரிமை (சட்டப்பிரிவு - 23)

5. சமுதாயத்தில் பலவீனமாக இருக்கும் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் சமூக அநீதிகளால் பாதிக்கப்படுவதிலிருந்தும் அனைத்து வகையான சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்கப்பட உரிமை (சட்டப்பிரிவு 46)
6. எந்த அரசாங்கமாக இருந்தாலும், அதற்கென்று சில கடமைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

   பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குச் சிறப்பான சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் (சட்டப்பிரிவு 15) (3)
7. மக்களில் பலவீனமான பிரிவினருக்குக்கல்வி மேம்பாட்டுக்கான வழிவகை செய்தல் (சட்டப்பிரிவு 46)
8. சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாத்தல் (சட்டப்பிரிவு-29)
9. தனது மக்களுடைய உணவின் தரம் மேம்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் மற்றும் பொதுமக்களின் ஆரோக்கியத்தில் தொடர் முன்னேற்றத்துக்கான செயல்களில் ஈடுபடல் (சட்டப்பிரிவு- 47)

குழந்தைகளின் உரிமை குறித்து ஐ.நா.வின் மாநாட்டுத் தீர்மானங்களின் குறிப்பிடத்தக்க அம்சங்கள் - உரிமைகள்

1. உயிர் வாழும் உரிமை 2. பாதுகாப்பு உரிமை

3. வளர்ச்சி உரிமை 4. பங்கேற்பு உரிமை

**உயிர் வாழும் உரிமை என்பதில் கீழ்க்கண்டவை அடங்கும்:**

1. வாழ்வதற்கானஉரிமை 2. சிறந்த தரமான ஆரோக்கியத்தைப் பெற உரிமை 3.சத்துணவு 4.போதிய அளவு தரமான வாழ்க்கை 5.அடையாளத்திற்கான ஒரு பெயர் மற்றும் தேசிய அடையாளம்

**பாதுகாப்புப் பெறுவதற்கான உரிமை என்பது,**

1. சுரண்டல் கொடுமைகள், மனிதத் தன்மையற்ற முறையில் கீழ்த்தரமாக நடத்துதல், உதாசீனம் செய்தல் அல்லது புறக்கணித்தல் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு.
2. நெருக்கடிக்காலம், போர், உடல் ஊனமுற்ற நிலை ஆகிய சமயங்களில் சிறப்புப்பாதுகாப்பு வளர்ச்சி காண்பதற்கான உரிமை என்பதில் கீழ்க்கண்டவை அடங்கும்:



1. கல்வி கற்பதற்கான உரிமை 2. ஆரம்ப கட்டக் குழந்தைப் பருவத்தில் பராமரிப்புக்கும், வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருத்தல் 3. சமூகப்பாதுகாப்பு 4. ஓய்வு, பொழுது போக்கு மற்றும் கலாச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான உரிமை

**பங்கேற்பு உரிமை என்பது,**

1. குழந்தைகளின் அபிப்பிராயங்களுக்கு மதிப்பு அளிப்பது. 2.எதையும் வெளிப்படுத்த உரிமை 3. தகவல்கள் கோரிப்பெறும் உரிமை 4. கருத்தில், எண்ணத்தில், மதநம்பிக்கைகளில் தேர்ந்தெடுக்க, பின்பற்ற சுதந்திரம்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வகையான உரிமைகளும் ஒன்றையொன்று சார்ந்தவை. அதனாலேயே பிரிக்கமுடியாதவை. என்றாலும், அவற்றின் தன்மைகளின் அடிப்படையில் அவை பிரிக்கப்பட்டுள்ளன.

## VIII. சிறுபான்மையோர் உரிமைகள்

மத்திய அரசு, மத மற்றும் மொழிச் சிறுபான்மையோரின் சமூகப் பொருளாதார,கல்வி மற்றும் வாழ்நிலை குறித்த ஆய்வினை மேற்கொள்ள இரண்டு ஆணையங்களை நியமித்தது. நீதிபதி ரெங்கநாத் மிஸ்ரா தலைமையில் 29 அக்டோபர் 2004-ல் ஆணையத்தை அமைத்தது.

இந்த ஆணையம் விரிவான ஆய்வு நடத்தி 21 மே 2007-ல் தனது அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்தது. நீதிபதி ராஜேந்தர் சச்சார் தலைமையில் 2005 ஆம் ஆண்டு ஆணையம் அமைத்தது. அந்த ஆணையம் 30 நவம்பர் 2006-ல் அதன் ஆய்வறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

நீதிபதி ரெங்கநாத் மிஸ்ரா ஆணையம் கீழ்க்கண்ட முக்கியமான சிபாரிசுகளை வழங்கியுள்ளது:

1. பாதிக்கப்பட்ட சிறுபான்மையின மக்களின் குறைகளைக் களைந்திட சம வாய்ப்பு ஆணையம் உருவாக்கவேண்டும்.
2. பொதுநலம் சார்ந்த அமைப்புகளில் சிறுபான்மையோரின் பங்கேற்பை அதிகப் படுத்த நியமன முறையை உருவாக்க வேண்டும். செயல்பாடுகளின் மீது முடிவெடுத்தலில் இவர்களின் பங்கும் இருக்கவேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்

3. வேலைவாய்ப்பில், வீட்டுவசதி, கல்விநிறுவனங்களில், வங்கிக் கடன் வழங்குவதில் சிறுபானமையோருக்குக் காட்டப்படும் பாகுபாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க போதுமான சட்ட வழிமுறைகளை உருவாக்கவேண்டும்.

4. பாடத்திட்டங்களின் உள்ளடக்கத்தில் சிறுபான்மையோருக்கு எதிரான பாகுபாடு மற்றும் வெறுப்பு கருத்துக்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது பொருத்தமில்லாத கருத்துக்கள் இடம் பெற்றிருந்தால் அதை களைந்திட நிறுவன ரீதியாக வழிமுறைகள் உருவாக்க வேண்டும்.

5. சிறுபான்மையோரின் வளர்ச்சியை உருவாக்கும் விதத்தில் எந்த அளவு வளர்ச்சி நலன்களை அடைகிறார்கள் என்பதைக் கண்காணிக்கும் தன்னாட்சி மதிப்பீட்டு குழுமத்தை அமைக்கவேண்டும்.

6. உருது மொழி பள்ளிகளைத் தேவையான இடங்களில் திறப்பதும், உருது மொழி கல்விக்குத் தரமான பாடநூல் உருவாக்குவதை உறுதிப் படுத்தவேண்டும்

7. தகுந்த நேர்முக தேர்வுக் கழகங்களில இஸ்லாம் சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை வழங்க வேண்டும்.

8. பல்கலைக்கழகங்களிலும், சுயாட்சி கல்லூரிகளிலும் அனைத்து மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மாணவர் சேர்க்கையில் இடம் பெறும் வகையில் மாற்று அளவு கோல் உருவாக்க வேண்டும்.

9. இஸ்லாம் சமூகத்தில் அஷ்ரப்கள், அஜலப்கள், அர்ச்ல்கள் ஆகிய மூன்று பிரிவினர்களுக்குப் பல்வேறு விதமான சாதகமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அர்ஸல்களுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படும் முன்னுரிமை போலவே இட ஒதுக்கீடு உள்பட சலுகைகளை வழங்க வேண்டும். அஜ்லப் இஸ்லாமிய சமூகத்தினருக்கு இதர பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கும் உரிமைகளை வழங்க வேண்டும்.



10. இஸ்லாம் சமூகத்தினர் அதிக கவனம் செலுத்தும் தொழில்களில் ஈடுபடுவோருக்கு அவர்களின் வளர்ச்சிக்காக நிதி மற்றும் இதர உதவிகள் கிடைக்க வழிவகை உருவாக்கவேண்டும்.

11. மேல்நிலைக் கல்விக் கழகத்தோடு மதரஸாக்களையும் இணைப்பதற்கும்,மதரஸாக்களில் வழங்குகின்ற பட்டப்படிப்பை, இராணுவம், அரசு மற்றும் வங்கித் தேர்வுகளுக்குத் தகுதியானவை என அங்கீகரிக்கவேண்டும்

12. குறைந்த நியாயமான கட்டணத்தில் சிறுபான்மை மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மாணவர் தங்கும் விடுதிகளில் வசதிளை வழங்கவேண்டும்

13. முன்னுரிமைத் துறைகளில் இஸ்லாமியருக்குப் பதவிஉயர்வும், நியமனங்களும் அதிகப்படுத்தவேண்டும்.

## மொழிச் சிறுபான்மையோர் உரிமைகள்

அரசியல் சாசனப் பிரிவு 347-ன் படி ஒரு மாநிலத்தின் கணிசமான விகிதத்தில் உள்ள மக்கள் தங்களால் பேசப்படுகிற மொழியை அம்மாநிலத்தில் அங்கீகரிக்க வேண்டுமென்று விரும்பி அதன் பொருட்டு கோரிக்கை வைக்கின்றனர்.

குடியரசுத் தலைவருக்கு அதில் தெளிவு ஏற்பட்டிருந்தால், அத்தகைய மொழியை அம்மாநிலத்தின் அதிகாரபூர்வமான மொழியாக அம்மாநிலம் முழுவதிலும் அல்லது அதன் ஒரு பகுதியில் அவரால் குறிப்பிடப்படும். அத்தகைய காரியங்களுக்குப் பயன்படுத்தவேண்டும் என்று நெறிப்படுத்தலாம்.

அரசியல் சாசனப் பிரிவு 350 ஏ -யின்படி சிறுபான்மை மொழி பேசுவோரின் குழந்தைகள் துவக்கக் கல்வி நிலையில் அவர்களுடைய தாய்மொழியிலேயே கற்பிக்க போதிய வசதிகளை செய்து தருவதற்கு ஒவ்வொரு மாநில அரசும், அம்மாநிலத்தின் உள்ளாட்சித் துறையும், முயற்சியெடுக்க வேண்டும். அத்தகைய வசதிகளை வழங்குவதற்குத் தாம் தேவை என்றும் முறையானதென்றும் கருதும் நெறிமுறைகளைக் குடியரசுத் தலைவர் வெளியிடலாம்.

அரசியல் பிரிவு சாசனம் 350 பி (1)- ன் படி சிறுபான்மை மொழியினருக்கு ஒரு சிறப்பு அலுவலரைக் குடியரசு தலைவர்

நியமிக்கவேண்டும். இச்சாசனப்படி சிறுபான்மை மொழி பேசுவோருக்கு வழங்கப்படும் பாதுகாப்பு தொடர்பான விஷயங்களைப் புலனாய்வு செய்தும், குடியரசுத் தலைவர் பணிக்கும் அத்தகைய கால இடை வெளிகளில் அந்த விஷயங்கள் பற்றி அவரிடம் அறிவிக்கை செய்வதும் அந்தச் சிறப்பு அதிகாரியின் கடமையாகும். அந்த அறிக்கைகளைப் பாராளுமன்ற அவைகளுக்கும் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கும் அனுப்பி வைக்கவேண்டும்.

இந்து அல்லாத சிறுபான்மையினருக்கும் இந்தியக் குடியுரிமைச் சட்டம்1955ன் பொருத்தப்பாட்டினை இந்த ஆணையம் விவாதித்து,அனைத்து வகையான தீண்டாமை அம்சங்களும் மத வேறுபாடின்றி நிலவி வருவதையும் பரிசீலித்து,1989-ல் நிறைவேற்றப்பட்ட தாழ்த்தப்பட்டோர் மலைவாழ் மக்களுக்கெதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை இதர பிற்படுத்தப்பட்டோருக்கும், சிறுபான்மையோர் அல்லது சமூக, பொருளாதார ரீதியாக பிற்படுத்தப்பட்டோருக்கும் பாகுபாடு மற்றும் ஒதுக்கல் முறைகளிலும் பாதுகாப்பை விரிவுபடுத்த தேவையிருக்கிறது என்பதையும் ரெங்கநாத் மிஸ்ரா ஆணையம் குறிப்பிட்டுள்ளது. அரசியல் சாசனப் பிரிவு 29, 30 ஆகியவைகளும் சிறுபான்மையோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தன்மையை உள்ளடக்கியுள்ளது என்பதையும் ஆணையம் வழிமொழிந்து அமுல்படுத்த வலியுறுத்துகிறது.

## IX. மாற்றுத்திறனாளியும், உரிமைகளும்

"மாற்றுத்திறனாளி" என்பவர் உடலிலோ அல்லது மனதிலோ ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக அவரால் சில செயல்களை செய்யமுடியாமல் போய்விடுகிற காரணத்தினால் அவர்களை நாம் அவ்வாறு அழைக்கிறோம். மாற்றுத்திறன் பின்வரும் வழிகளில் வகைப்படுத்தபடுகிறது:

- மரபணுவினால் பிறப்பிலேயே ஏற்படும் மாற்றங்கள்
- தாயின் கருவில் இருக்கும் பொழுதோ அல்லது பிறந்த உடனே ஏற்படும் நோய்கள் மூலம் ஏற்படும் மாற்றங்கள்



- நோயினாலோ அல்லது விபத்திலோ ஏற்படுத்திக் கொண்டது
- தெரியாத காரணங்களால்

**உடல் ஊனம்**

மூட்டுகள், நுண்ணிய எலும்புகள் அல்லது மொத்த மோட்டார் திறன் வலுக்குறை கொண்டு பாதிக்கப்படும்போது அது உடல் ஊனம் எனப்படுகிறது.

**புலன் குறைபாடு**

ஏதேனும் ஒரு புலனின் வலுக்குறை புலன் குறைபாடு ஆகிறது. இது பொதுவாக பார்வை மற்றும் காது கேளாமை குறைபாடுகளைக் கொண்டிருக்கிறது, ஆனால் வேறு சில புலன்களும் குறைபடலாம்.

**பார்வை குறைபாடு**

வழக்கமான வழிமுறைகளைக் கொண்டு சரி செய்ய இயலாத பார்வை வலுக்குறைகள் இருக்கும் பார்வை செயலிழப்புக்களை நாம் பார்வை குறைபாடு எனக் கூறலாம்.

**கேள்விக் குறைபாடு**

கேள்விக் குறைபாடு என்பது பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ ஒலியை உணரும் அல்லது புரிந்து கொள்ளும் வல்லமையை இழத்தல் ஆகும். பல வகையான உயிரியல் காரணங்களினாலும் சூழல் காரணங்களினாலும் ஏற்படக்கூடிய இக்குறைபாடு ஒலியை உணரும் தன்மை கொண்ட எல்லா உயிரினங்களிலும் ஏற்படலாம்.

**நுகர்ச்சி மற்றும் சுவைசார் புலன் குறைபாடு**

நுகர்ச்சி மற்றும் சுவைசார் புலன் குறைபாடுகள் பொதுவாக வயது முதிர்ச்சியின் காரணமாக வருவதுண்டு. ஆனால் இளைய வயதினருக்கும் இது போன்று வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

**மனவளர்ச்சிக் குறைபாடு**

மனவளர்ச்சிக் குறைபாடு என்றால் அறிவு வளர்ச்சியில் ஏற்படும் குறைபாடு. 1838-ஆம் ஆண்டு எஸ்கிரால் என்பவர் மனவளர்ச்சிக் குறைபாட்டைப் பற்றி விளக்கும் போது "மனவளர்ச்சிக்

குறை என்பது ஒரு நோயல்ல வளர்ச்சி நின்றுவிடும் நிலை" என்று விளக்கினார். டிரட்கோல்ட் என்பவர் முழுமையான அல்லது சாதாரண வளர்ச்சி அடையத்தவறிய மனதின் நிலையே மனவளர்ச்சிக் குறை" என்று கூறினார். மனவளர்ச்சிக் குறைவைப் பலரும் மன நோய் எனத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் மனவளர்ச்சிக் குறைவு வேறு ; மன நோய் வேறு.

**உளப் பிறழ்ச்சி**

உளப் பிறழ்ச்சி (Mental disorder) அல்லது **உள நோய்** அல்லது மன நோய் என்பது தனிப்பட்ட மனிதரில் உண்டாவதும், வளமையான பண்பாட்டு வளர்ச்சியில் எதிர்பார்க்கப்படாத துன்பத்தை அல்லது இயலாமையை உண்டாக்கும் உளவியல் அல்லது நடத்தைக் கோலம் ஆகும். உளப் பிறழ்ச்சியை அடையாளம் காணலும், அது தொடர்பான புரிதலும் காலத்துக்குக் காலமும், பண்பாட்டுக்குப் பண்பாடும் மாற்றமடைந்து வந்திருக்கிறது. உளப் பிறழ்ச்சி என்பதன் வரைவிலக்கணம், மதிப்பீடு, வகைப்பாடு என்பன மாறுபட்டாலும் நோய்களுக்கும், நலக்கேடுகளுக்குமான அனைத்துலகப் புள்ளியியல் வகைப்பாடு, உளப்பிறழ்ச்சி தொடர்பான நோயறிதல் மற்றும் புள்ளியியல் கையேடு போன்றவற்றிலும் இவை போன்ற பிற கையேடுகளிலும் தரப்படும் வழிகாட்டல்கள் உளநல வல்லுனர்களால் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன.

**இந்தியாவில் மாற்றுத்திறனாளிகளின் நிலை**

இந்தியாவில் மட்டும் 7 கோடிக்கும் அதிகமானோர் மாற்றுத் திறனாளிகளாக உள்ளனர். வளர்ந்த நாடுகளைவிட இந்தியா போன்ற ஏழை மற்றும் வளரும் நாடுகளில் மாற்றுத்திறனாளிகள் கூடுதல் எண்ணிக்கையில் இருப்பதாக உலகச் சுகாதார நிறுவனமும் உலக வங்கியும் இணைந்து தயாரித்த 2011 ஆண்டின் மாற்றுத் திறனாளிகளைப் பற்றிய முதல் உலக அறிக்கை குறிப்பிடுகிறது.2006 ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான ஐ.நா. சாசனம் விதிகளை இந்தியாவும் கையொப்ப மிட்டு ஏற்றுள்ளதோடு, தற்போது அது அமலிலும் உள்ளது. "மாற்றுத் திறனாளிகளின் தேவைகளைக் கருணை அடிப்படையில் பார்க்கக்கூடாது என்பதும் உரிமைகளின்



அடிப்படையில் பார்க்க வேண்டும் என்பதும், அவர்களுக்கு எதிரான பாரபட்சங்களுக்கு முடிவு கட்ட வேண்டும்" என்பதும் ஐ.நா. சாசன விதிகளாகும்.

**மாற்றுத் திறனாளிகளுக்கான சட்டம்**

மாற்றுத்திறனாளிச் (சம வாய்ப்பு, உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் 1955 நிறைவேற்றப்பட்டது.நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு 1996-இல்தான் நடைமுறைக்கு வந்தது.இச் சட்டத்தை முழுமையாகச் செயல்படுத்தக் கோரி தேசியப் பார்வையற்றோர் கழகம் தில்லி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. உயர்நீதிமன்றமும் மனுதாரரின் கோரிக்கையை ஏற்று அரசுக்கு உத்தரவிட்டது. ஆனால் மத்திய அரசு, நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக, மத்திய சட்ட அமைச்சகம், அந்த உத்தரவை எதிர்த்து மாற்றுத் திறனாளிகளுக்கு சமவாய்ப்பு, உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப் பங்கேற்பு அளிக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் இருக்க உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. உச்சநீதிமன்றம் மத்திய அரசின் கோரிக்கைக்குச் செவி சாய்க்க வில்லை.

**தேசிய நிறுவனம்**

ஒன்றுக்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மேம்பாட்டுக்கான தேசிய நிறுவனம் சென்னை, கோவளம், முட்டுக்காடு அருகே கிழக்குக் கடற்கரைச் சாலையில் 15 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டு, சேவையாற்றி வருகிறது. இங்கு, மறுவாழ்வு மருத்துவம், மறுவாழ்வு உளவியல், ஊனமுற்றோருக்கான தொழில் பயிற்சி, பேச்சு, கேட்டல் மற்றும் தொடர்புப் பயிற்சி, சிறப்புக் கல்வி, கண் பார்வையின்மையோடு இணைந்த காது கேளாமை, இயன்முறை மருத்துவம் மற்றும் செயல்முறை மருத்துவம், 0-3 வயதில் தொடக்கக் கால பயிற்சி, செயற்கை அவயங்கள் மற்றும் முடநீக்கு சாதனங்கள் பொருத்துதல், உணர்வு உறுப்புகள் குறைபாட்டுக்கான ஒருங்கிணைப்புப் பயிற்சி, சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு பணிகள் ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன.

**கல்வி**

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 64.8 சதவீதம் பேர் கல்வி கற்றவர்களாக உள்ள நிலையில், வெறும் 49 சதவீதம் மாற்றுத்திறனாளிகளே கற்றவர்களாக உள்ளனர். 44 சதவீத பள்ளிகள் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்த முடியாதவைகளாக உள்ளதாக அரசு தகவல்கள் உள்ளன. பார்வையற்றோருக்கான பிரெயில் வடிவிலான ஆவணங்களும் காதுகேளாத வாய் பேசாதோருக்கான செய்கை மொழி பெயர்ப்பாளர்களும், மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான அரசு பள்ளிகள் மற்றும் சிறப்பாசிரியர்கள் போதிய அளவில் இல்லாததும் இவர்களின் கல்விக்குத் தடைகளாக உள்ளன.

**வேலை வாய்ப்பு**

வேலைவாய்ப்பில்லாமல் அவதியுறும் ஊனமுற்றோரின் எண்ணிக்கை 66 சதவீதமாக உள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கு இன்னின்ன வேலைகள் ஒதுக்கப்படலாம் என்று இனம் காணும்படி சட்டம் வழிகாட்டுகிறது. அரசுத்துறைகளில் உள்ள C மற்றும் D பிரிவு ஊழியர் நியமனத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு இடஒதுக்கீடு வழங்கும் முறை 1977 ஆம் ஆண்டிலேயே அறிமுகப்படுத்தப்பட்டு 1996 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்த சமவாய்ப்புச் சட்டத்திலும் வழிவகை செய்யப்பட்டது. அரசோ, வெறும் நூறு வேலைகளை மட்டும் பட்டியலிட்டுள்ளது .தேசிய ஊனமுற்றோர் வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மையத்தின் புள்ளிவிவரப்படி, அரசு வேலைவாய்ப்பில் 0.5 விழுக்காடும், தேசிய அளவில் எடுத்துக்கொண்டால் 0.4 விழுக்காடும்தான் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

தமிழகத்தில் உள்ள மொத்த மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை சுமார் 18 இலட்சத்திலிருந்து 22 இலட்சம் (18 இலட்சம் 2001 ஆண்டு கணக்கெடுப்பு. அரசு புள்ளி விபரம்) ஐக்கியநாடுகளின் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமை சாசனத்தில் இந்தியா கையெழுத்திட்டு பல ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. **(Ratification in UNCRPD).** எவ்விதத்திலும் எவ்வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும் ஒதுக்குதலோ, வேறுபாடு காட்டுதலோ கூடாது சம உரிமை, சம வாய்ப்பு,



சமமான பங்கேற்பு என்பது அனைத்து மட்டத்திலும் இருக்க வேண்டும் என்பதை இந்த உரிமை சாசனம் தெளிவாக, ஆணித்தரமாக உணர்த்துகிறது. இதனையே மாற்றுத்திறனாளிகளுக்கான 1995ஆம் ஆண்டுச் சட்டமும் கூறுகிறது. **(Persons with Disabilities Act 1995).**

மாற்றுத்திறனாளிகளுக்கு மாவட்ட தொழில் மையம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் தாட்கோ போன்ற துறைகள் மூலமும் சுய தொழில் தொடங்க மானியத்துடன் கூடிய வங்கிக் கடனுதவிகள் வழங்கப்படுகின்றன.

**அரசின் சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் கடனுதவி:**

பாரத பிரதமரின் வேலை உருவாக்கும் திட்டத்தின் கீழ் மாற்றத்திறனாளிகள் சுய தொழில் தொடங்க வங்கிக் கடனுதவி வழங்கப்படுகிறது. பின், திருப்பி செலுத்த வேண்டிய தொகையில் 5 சதவீதம் சம்பந்தப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வழங்கும். இதற்கு வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடனுதவி அனுமதிக் கடிதம், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் பரிந்துரைக் கடிதம் ஆகியவற்றை இணைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலகத்தில் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

**அரசின் வேறு துறை மூலம் உதவிகள் :**

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் மாற்றுத்திறனாளிகள், சுய உதவிக்குழு தொடங்கினால் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கப்படுகிறது. அதன்படி ரூ. 50 ஆயிரம் முதல் ரூ. 1.50 லட்சம் வரை வங்கிக் கடன் வழங்கப்படுகிறது. அதுபோல் தனிநபர் தொழில் தொடங்க தேசிய வங்கிகளில் கடன் பெற்றால், மொத்த கடன் தொகையில் 30 சதவீதம்வரை மானியம் வழங்கப்படுகிறது. அதில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாற்றுத்திறனாளிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

**மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்குச் சலுகைகள்**

இந்திரா குடியிருப்பு திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகள் வீடு கட்டிக் கொள்ள ரூ. 60 ஆயிரம் வழங்கப்படுகிறது. மேலும்,

வங்கிக் கடனாக ரூ. 10 ஆயிரமும் வழங்கப்படுகிறது. இதற்கு சம்பந்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள் பெயரில் காலி வீட்டுமனை இருக்க வேண்டும். அதுபோல் மாற்றுத் திறனாளிகள் கழிப்பறை அமைத்துக் கொள்ள ரூ. 1,500 மானியம் வழங்கப்படுகிறது.

**தாட்கோ திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்குத் தொழில் தொடங்க கடனுதவி**

18-55 வயதுடைய தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 75 ஆயிரம்வரை வங்கிக் கடன் வழங்கப்படுகிறது. அதில் 30 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ. 25 ஆயிரம்வரை மானியம் ஆகும். இக்கடனுதவி கேட்டு தாட்கோ, மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் விண்ணப்பம் செய்ய வேண்டும். அதுபோல் சிறு தொழில் தொடங்க மாவட்ட ஆட்சியர் மூலம் ரூ. 10 ஆயிரம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது.

## X. மனித உரிமை மீறல்

மனித உரிமை மீறல் என்பது மனிதன் மனிதனை சுரண்டுவதும், ஒடுக்குவதும், அடிமைப் படுத்துவதும், இயற்கையாக மனிதன் வாழும் உரிமைகளைப் பறிப்பதும் ஆகிய நடவடிக்கைகளே மனித உரிமை மீறல் ஆகும்.

**மனித உரிமை மீறலுக்கான முக்கிய காரணங்கள்**

1. இன ஒதுக்குதல், இனப்படுகொலை, பாசிச ஆட்சித் தன்மை 2. பாலியல் வேறுபாட்டுக் கருத்தாக்கம் 3.குழந்தை உழைப்புச் சுரண்டல். 4. மூலதனக் குவியலுக்கு லாப வெறி 5. கொத்தடிமை 6. மக்களின் வறுமையைத் தவறான வழியில் பயன்படுத்திச் சுயநலத்தைப் பெருக்குதல். 7. ஆதிக்கத்தின் மூலம் சமூக மாற்றம் அடைய விரும்புவது. 8. மக்களின் அறியாமை, எழுத்தறிவின்மை, 9. ஒரு நாட்டுக்குள்ளேயே மக்களிடையே நுகர்வு கலாச்சாரத்தை உருவாக்கி ஏற்றத் தாழ்வை உருவாக்கும் உலகமயப் பண்பாடு ஆகியவையே மனித உரிமை மீறலுக்குக் காரணங்களாக அமைகின்றன.

**மனித உரிமை மீறலின் வடிவங்கள்**

1. யுத்தம் ஒரு கோரமான வடிவம். முதல் உலகப்போர் இரண்டு கோடிப் பேரைக் கொன்று தொலைத்தது. இரண்டாம் உலகப்போரில் ஆறரைக் கோடிப் பேர் கொல்லப்பட்டார்கள்.



2. அணு வெடிச் சோதனை ஹிரோசிமா, நாகசாகியில்
3. நாஜி யுத்தம் : ஹிட்லர் மரணத் தொழிற்சாலையையே உருவாக்கினார். தனது நாசிச இனவெறி ஆதிக்க வெறியால் ஒரு நாளுக்கு 2000 யூதர்கள் வீதம் கொல்லப்பட்டார்கள்.
4. சாதி மதவெறிச் சண்டை: இந்தியா முழுவதும் நடைபெற்ற சாதிவெறி மதவெறி சண்டையில் ஏராளமானோர் பலியானார்கள்.
5. தீண்டாமைக்கொடுமையும், ஆணவக் கொலைகளும்
6. மனிதர்களைக் கொத்தடிமைகளாகவும், குழந்தை தொழிலாளர் முறையைக் கடைப்பிடிப்பதும்
7. ஆண்- பெண் பாலினப் பாகுபாடும், பெண்களைப் போகப் பொருளாகவும்,பொம்மைகளாகவும் மதிக்கும் சிந்தனை.
8. தனிமனித உரிமைகளை அவமதித்திலும், மறுத்தலும்.
9. காவல் நிலைய வன்கொடுமைகள், சிறை மரணங்கள்
10. இராணுவத் தாக்குதல்
11. பெண்களுக்கெதிரான வன்கொடுமைகள்.
12. அரசியல் காழ்ப்புணர்ச்சிக் காரணமாக, அதிகார வர்க்கத்தால் எதிர்கட்சியினரைச் சிறைப்படுத்துதல்.

## XI. இந்திய மனித உரிமை ஆணையங்கள்

மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், அவற்றை முறையாக செயல்படுத்தவும் மனித உரிமை ஆணையங்கள் மூன்று அடுக்குகளாக உருவாக்கப்பட்டன. அவைகளாவன்

**1. தேசிய மனித உரிமை ஆணையம்:**

இந்த ஆணையம் 1993 செப்டம்பர் 27-ல் நிறுவப்பட்டது. இந்த ஆணையத்தின் தலைவர் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப் படுகிறார். உச்சநீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதி தலைவராக நியமனம் செய்யப்படுகிறார். பிற உறுப்பினர்கள் உச்சநீதிமன்றத்தில் பணிபுரியும் அல்லது ஓய்வு பெற்ற நீதிபதிகளாயிருக்கலாம் அல்லது உயர்நீதிமன்றத்தில் பணிபுரியும் அல்லது ஓய்வு பெற்ற முதன்மை நீதிபதியாக இருக்கலாம்.

மொத்தம் எட்டு உறுப்பினர்களாக இருப்பார்கள். மனித உரிமை மீறல்கள் மீது புகார் செய்யப்பட்ட கடிதங்களைத் தீர்க்க ஆய்வு செய்து தீர்ப்புகளை வழங்க பொறுப்புள்ள அமைப்பாக இது விளங்குகிறது.

2. **மாநில மனித உரிமை ஆணையம் :**

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு மாநில மனித உரிமை ஆணையம் நிறுவப்பட்டுள்ளது.

3. **மாவட்ட மனித உரிமை நீதிமன்றங்கள்:**

ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. மனித உரிமை மீறல் குற்றங்களுக்கு உடனடியாக தீர்வு காண இவைகள் பொறுப்பு வகிக்கின்றன.

## XII. மனித உரிமை பாதுகாப்பிற்காக இந்தியாவில் நிறைவேற்றப் பட்ட சட்டங்கள்

1. குழந்தைகள் திருமணத் தடைச்சட்டம் -1929
2. குழந்தைகள் ஈடு வைத்தல் தடைச்சட்டம் -1933
3. குடிமையுரிமைகள் பாதுகாப்புச் சட்டம் -1955
4. வரதட்சணை தடுப்புச் சட்டம்-1961
5. குழந்தைகள் சட்டம்- 1960
6. தாய்மை பேறு நலச்சட்டம் -1961
7. மகளிருக்கு மகப்பேறுகாலச் சலுகைகள் சட்டம்-1961
8. கொத்தடிமை ஒழிப்புச் சட்டம் -1976
9. குழந்தைகள் தண்டனை நீதிச்சட்டம்-1980
10. உடன்கட்டை ஏறுதல் ஒழிப்புச் சட்டம்-1987
11. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கெதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்-1989
12. மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டம்-1993
13. தீண்டாமையை ஒழிப்பதற்காக இந்தியக் குடியுரிமை பாதுகாப்புச் சட்டம்- 1955
14. மகளிருக்குச் சொத்துரிமை வழங்கும் இந்து வாரிசு உரிமைச் சட்டம்-1956



15. அனாதை மற்றும் சேவை நிறுவனங்கள் சட்டம்-1960
16. தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம்-1923
17. தொழில் தகராறு சட்டம்-1947
18. குறைந்தபட்ச ஊதியச் சட்டம் -1948
19. சம ஊதியச் சட்டம்-1948

## கேள்விகள்

**I. சரியான விடையைத் தெரிவு செய்க:**

1) மனித உரிமைப் பிரகடனம் முதன் முதலாக இயற்றப்பட்ட ஆண்டு ________

அ) 1958 ஆ) 1977 இ) 1955 ஈ) 1948

2) குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு ________

அ) 1945 ஆ) 1950 இ) 1955 ஈ) 1955

3)பெண்களைப் பயமுறுத்துதல், வீட்டுக்குள் கட்டுப்படுத்துதல்________ரீதியான வன்முறை ஆகும்.

அ) உடலியல் ஆ) உளவியல்
இ) பாலியல் ஈ) தகவல் தொடர்பு

4) அரசியல் சட்டப்பிரிவு 11(எ)ன்படி அனைவருக்கும் கட்டாய இலவச கல்வி வழங்க வேண்டிய வயது வரம்பு

அ) 8 முதல் 14 ஆ) 6 முதல் 14
இ) 6 முதல் 18 ஈ) 5 முதல் 14

5) சிறுபான்மையோர் தமக்கென்ற தனிமொழி, வரிவடிவம் அல்லது பண்பாட்டை அழியாமல் காப்பாற்றிக் கொள்ள உரிமை உண்டு என அறிவிக்கும் அரசியல் சட்டப்பிரிவு ______ ஆகும்.

அ) பிரிவு 24 ஆ) பிரிவு 29 இ) பிரிவு 14 ஈ) பிரிவு 30

பகுதி - ஆ

**II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு 150 வார்த்தைகளுக்கு மிகாமல் பதில் கூறுக.**

1) அடிப்படை மனித உரிமைகள் யாவை?

2) மனித உரிமைகள் என்பதன் வரைவிலக்கணம் யாது? மனித உரிமைகளின் முக்கியத்துவம் யாவை?

3) பெண்களுக்கெதிரான வன்முறை என்றால் என்ன?

4) சிறுபான்மையோர் என்பவர் யார்?

5) ஐக்கிய நாடுகள் மாநாட்டுத் தீர்மானங்கள் அடிப்படையில் குழந்தைகளுக்கான உயிர்வாழும் பாதுகாப்பு பெறுவதற்கான உரிமைகள் யாவை?

பகுதி - இ

**III) கீழ்க்கண்ட வினாக்களுக்கு 500-600 வார்த்தைகளுக்கு மிகாமல் கட்டுரை வரைக.**

1) இந்திய அரசியல் அமைப்பின் அடிப்படை உரிமைகள் பற்றி விளக்குக.

2) பெண்களுக்கான உரிமைகளை விளக்குக.

3) சமூகத்தில் நடைபெறும் தலித்துகளுக்கு எதிரான வன்முறை வகைகள் யாவை?

4) குழந்தை உரிமைகளை விளக்குக.

5) சிறுபான்மையோரின் உரிமைகளாக அரசு நியமித்த ரங்கநாத் கமிஷன் குறிப்பிடுவன யாவை?



# UNIT III

## சமூக அவலங்கள், மதச்சார்பின்மை, சமூக நல்லிணக்கம்

### சமூக அவலங்கள்

### I. போதை

**மது அடிமைத்தனம்**

மதுவானது ஒரு பெரும் சமூக அவலமாக இருக்கிறது. திருவள்ளுவர் முதல் மகாத்மா காந்தி வரை மதுவுக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். ஆனாலும் மதுவானது சமூகத்துக்கு ஒரு பெரும் சவாலாகவே இருக்கிறது. மதுவை நாடிச் செல்வோர் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்து வருகிறது. பண்டிகைக் கொண்டாட்டங்களுக்கு மதுவைப் பயன்படுத்தும் பழக்கமும் பரவலாகி வருகிறது. பள்ளி மாணவர்கள் மற்றும் பெண்கள் மது குடிக்கும் பழக்கத்துக்கு ஆளாகிவிடுகிறார்கள் என்பது ஒரு அதிர்ச்சியான தகவல். எப்போதாவது மது அருந்துவோரையோ தினமும் மிதமாக மது அருந்துவோரையோ குடிகாரர்களாக சமூகம் பார்ப்பதில்லை. ஆனால், மிதமாக மது அருந்தும் பழக்கம் அல்லது எப்போதாவது மது அருந்தும் பழக்கம் பலரையும் "மது அடிமை" நிலைக்குக் கொண்டு செல்கிறது.

**வரையறை**

எவ்வித கட்டுப்பாடோ வரன்முறையோ இன்றி மது அருந்தும் பழக்கமும், அப்பழக்கதினின்று விடுபட முடியாத நிலையுமே "மது அடிமைத்தனம்" என அழைக்கப்படுகிறது.

விளையாட்டாகவோ, நண்பர்களின் வற்புறுத்தலாலோ, மகிழ்ச்சியைக் கொண்டாடவோ, மன துக்கத்துக்கு வடிகாலாகவோ மது அருந்தத் தொடங்கும் பலர், அவ்வப்போது மது அருந்தும் பழக்கத்துக்கு ஆளாகி, பின்னர் அடிக்கடி மது அருந்துபவர்களாகி, படிப்படியாக தினமும் மது அருந்தும் பழக்கத்தில் வீழ்ந்து ஒரு கட்டத்தில் எப்போதும் மதுவிலேயே மூழ்கிக்கிடக்கும் மது அடிமை நிலைக்கு ஆளாகின்றனர். இறுதியில் மது அவர்கள் உயிரைக் குடித்துவிடுகிறது. எனவே, மதுவிடம் எச்சரிக்கையாயிருக்க வேண்டியது அவசியம்.

"குணப்படுத்துவதைவிட தடுப்பதே சிறந்தவழி" (Prevention is better than cure) என்ற நன்மொழிக்கேற்ப, எப்போதும் மதுவிலிருந்து விலகியிருப்பதே நலம்.

**மது குறித்த பொய்மையான சில எண்ணங்கள்**

1. மதுவை உணவு என்றும் மருந்து என்றும் சிலர் கருதுகின்றனர். மது உணவோ, மருந்தோ அல்ல. மது ஒரு மென்மையான விஷம். சிறுகச் சிறுக உடலை அரித்து, அழித்துவிடும் விஷம்.

(சிலவகை மதுக்கள் அவற்றின் வேதித்தன்மை காரணமாக, அனுமதிக்கப்பட்ட அளவில், சில மருந்துகள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. மற்றபடி, தனியாக மதுவுக்கு எவ்வித மருத்துவக் குணமும் இல்லை)

2. மது அருந்துவது கவுரவமானது, அந்தஸ்தை உயர்த்துவது என்ற கருத்து சிலரிடம் உள்ளது. இது தவறான கருத்து. உண்மையில் மதுவானது கவுரவத்தையும் அந்தஸ்தையும் அழித்துவிடுகிறது.

3. மதுவானது கவலைகளை மறக்கச் செய்து மனதுக்கு இதம் தருகிறது என்பது சிலரது எண்ணம். இது ஒரு தவறான எண்ணம். மதுவால் ஏற்படும் போதை நிலையில் மூளையானது இயல்பு நிலையில் இராது. அதனால் அந்நேரத்தில் எதார்த்தப் பிரச்சினைகள் மறக்கப்படலாம். ஆனால், பிரச்சினைகள் மறைவதில்லை. போதை தெளிந்த பின் மீண்டும் அப்பிரச்சினைகள் நினைவுக்கு வந்து கவலை அதிகமாகிறது.

4. மதுவானது மூளையின் செயல்திறனையும் படைப்பாற்றலையும் அதிகரிக்கிறது என்பது சிலரது அபிப்பிராயம். திரைத்துறை பாடலாசிரியர் கண்ணதாசன் போன்றோரை இதற்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடுவதுண்டு. கண்ணதாசன் போன்றார் விதிவிலக்குகள். பொதுவாக, மதுவானது மூளையில் பாதிப்பை உண்டாக்கி அதன் திறனைச் சிதைக்கிறது என்பதுதான் உண்மை.



5. நட்பை ஆழமாக்கவும், நட்பு வட்டத்தைப் பெரிதாக்கவும் மது உதவுகிறது என்றோர் கருத்தும் பரவலாக இருக்கிறது. உண்மையில், மதுவானது நட்புகளை விட பகைமையைத்தான் அதிகம் உருவாக்குகிறது் பல நண்பர்களைப் பிரித்திருக்கிறது. பல சண்டைகளுக்குக் காரணமாவதுடன் பல நண்பர்களைக் கொலையாளிகளாகவும் மாற்றியிருக்கிறது.

**மது வகைகள்**

சாராயம், அரிஷ்டம், கள் போன்றவை உள்நாட்டு மதுவகைகள். பீர், வைன், ரம், பிராண்டி, விஸ்கி போன்றவை வெளிநாட்டு மது வகைகள்.

உள்நாட்டு மதுக்கள் தமிழ்நாட்டில் தடைசெய்யப் பட்டுள்ளன. ஆனாலும் சில பகுதிகளில் ரகசியமாக இவை உற்பத்தி செய்யப்படுகின்றன. வெளிநாட்டு மது வகைகளை உற்பத்தி செய்வதற்கான 'அனுமதி பல ஆலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆலைகளில் தயாராகும் மது வகைகள் அங்கீகாரம் பெற்ற கடைகளில் விற்கப்படுவதால் தாராளமாக கிடைக்கின்றன.

மதுவின் தீமையைப் பறைசாற்றும் எச்சரிக்கை வாசகங்கள் மதுப்புட்டிகளிலும், மதுக்கடைகளிலும் எழுதப்பட்டுள்ளன. "மது வீட்டுக்கும் நாட்டுக்கும் கேடானது". "மது அருந்துவது உடல் நலத்துக்குத் தீங்கானது" போன்ற வாசகங்கள் மதுக்கடைகளிலும், மதுபுட்டிகளிலும் எழுதப்பட்டுள்ளதைக் கொண்டே மது எவ்வளவு தீங்கானது என்பதைப் புரிந்து கொள்ளலாம். இந்த எச்சரிக்கையையும் மீறி மது அருந்துவோரை முட்டாள்கள் என்று தான் அழைக்க முடியும்.

**மதுவின் தீமைகள்**

***அ) உடலுக்கு இழைக்கும் தீமைகள்:***

1. தொடர்ச்சியாக மது அருந்துவது உடல் நலத்தை பாதிக்கிறது. குறிப்பாக, கல்லீரல், இதயம் முதலான உடல் உறுப்புகளைத் தீவிரமாகப் பாதிக்கிறது.
2. மது மூளையை மட்டுமல்லாது நரம்பு மண்டலத்தையும் பாதிக்கிறது.

3. சர்க்கரை நோயாளிகளின் மது அருந்தும் பழக்கம், நோயைத் தீவிரமாக்குகிறது.
4. தீவிர மதுப்பழக்கமானது மனச்சிதைவையும் உடல் தளர்ச்சியையும் உண்டாக்குகிறது. பலர் இளம் வயதிலேயே முதுமை நிலையை அடைய மது காரணமாகிறது.

**ஆ) குடும்பத்தில் இழைக்கும் தீமைகள்:**

1. குடும்பத்தின் பொருளாதார நிலையைப் பாதிக்கிறது
2. குடும்ப உறவுகளில் விரிசலையும் சமாதானமின்மையையும் உருவாக்குகிறது
3. குடும்பத்துக்குச் சமூகத்தில் அவப்பெயர் பெற்றுத்தருகிறது
4. பிள்ளைகளின் கல்வி முதலானவற்றில் பாதிப்பை உண்டாக்கி அவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறி ஆக்குகிறது.
5. பல வீடுகளில் குழந்தைகளின் மன நிலையைப் பாதிக்கிறது

**இ) சமூகத்தில் இழைக்கும் தீமைகள்:**

1. சமூக வளர்ச்சியைப் பாதிக்கிறது
2. சட்டம் - ஒழுங்குப் பிரச்சினை மற்றும் சமூகப் பதட்டத்தை உருவாக்குகிறது
3. பல கலவரங்களைத் தொடங்கி வைத்ததில் மதுவின் பங்கு இருக்கிறது.

**போலி மது**

போதை தரும் ரசாயனக் கலவையைத் தயாரித்து மது என்ற பெயரில் விற்பனை செய்வதும் பல இடங்களில் நடக்கிறது. இது போலி மது என்று அறியப்படுகிறது. சாதாரண மதுவைவிட இந்தப் போலி மது அதிக தீமை விளைவிக்கக்கூடியது. சில வேளைகளில் இது உடனடி மரணத்தையும் உண்டாக்குகிறது. இப்படியான போலி மதுவை அருந்தி கொத்துக் கொத்தாக மக்கள் மரணமடையும் செய்தி அவ்வப்போது ஊடகங்களில்



வருகிறது. மதுவுக்கும் போலி மதுவுக்கும் வேறுபாடு தெரியாத நிலை இருப்பதால் இப்படி நிகழ்கிறது. குடிப்பவர்கள் மயங்கி விழுந்து மரணமடைந்த பின்னரே அது போலி மது என்ற உண்மை வெளிச்சத்துக்கு வருகிறது. பலர் போலி மது என்பதை அறியாமலே குடித்து உயிரைப் பறிகொடுப்பது பெரும் சோகம்தான்.

போலி மதுவை எப்படி தவிர்ப்பது என்ற கேள்வி பலரிடம் இருக்கிறது. போலி மதுவும் தோற்றத்தில் மதுவைப் போன்றே இருப்பதால் அதனைப் பிரித்தறிவது சிரமம். எந்த மதுவுமே வேண்டாம் என்று ஒட்டுமொத்தமாக மதுவைத் தவிர்த்தால்தான் போலி மதுவிடமிருந்து தப்பமுடியும்.

**போதை மாத்திரைகள் மற்றும் ஊசிகள்**

போதைக்காக மாத்திரைகள் மற்றும் ஊசிகளை பயன்படுத்தும் போக்கு நகர்ப்புறங்களில் அதிகரித்து வருகிறது. போதை மாத்திரைகளும் போதை ஊசிகளும் தடை செய்யப்பட்டவை. இருப்பினும் சட்ட விரோதமாக பலர் இவற்றை விற்பனை செய்து வருகின்றனர்.

போதை மாத்திரைகள் மற்றும் ஊசிகள் உடலுக்கும் மனதுக்கும் மதுவைவிட மிக அதிக கேடு விளைவிப்பவை. போதை மாத்திரை அல்லது போதை ஊசிகளைப் பயன்படுத்துவோர் மிக விரைவில் உடல் தளர்ச்சி மற்றும் மனச்சிதைவு முதலான மனநோய்களுக்கு ஆளாகின்றனர். இத்தீய பழக்கத்திற்கு ஆளாகும் பலர் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவர்களாக மாறுகின்றனர். இத்தகையோர் குடும்பத்தாலும் சமூகத்தாலும் புறக்கணிக்கப்படும் நிலையும் உருவாகிறது. மிக ஆபத்தான இவ்வகை மருந்துகளை அருகில் அண்டவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது இளைஞர்களின் கடமையாகும்.

## II. வறுமை மற்றும் வேலையின்மை

### 1. வறுமை

உணவு, உடை, வசிப்பிடம் இம்மூன்றும் மனிதர்களின் அடிப்படைத் தேவைகள். இவற்றுள் உணவு முதன்மையானது. உயிர் வாழ்வதற்கு உணவு மிகமிக இன்றியமையாதது.

தம் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் வாழும் மக்களை வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் என்று குறிப்பிடுகிறோம். இந்தியாவில் பலகோடி பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறார்கள்.

இந்தியா ஒரு வளரும் நாடு. அதன் பொருளாதார வளர்ச்சி அபரிமிதமாக உள்ளது. ஆனால், இந்தப் பொருளாதார வளர்ச்சி பெரும்பாலான மக்களுக்குப் பலனளிப்பதாக இல்லை. சொல்லப்போனால், பெரும்பான்மை மக்களுக்குக் கெடுதலையே தருகிறது. புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைச்சல்களான உலகமயம், தாராளமயம் மற்றும் வணிகமயம் ஆகியவற்றால் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும் ஏழைகள் மேலும் ஏழைகளாகவும் மாறுகிறார்கள். இதனால் ஏழை-பணக்காரர் ஏற்றத்தாழ்வு பலமடங்கு அதிகரித்துள்ளது.

இந்தியாவின் சுமார் 68 சதவீத வளங்கள் 5 சதவீத மக்களிடம் குவிந்துள்ளது. 50 சதவீத மக்களிடம் வெறும் 4 சதவீத வளங்களே உள்ளன. இந்தியாவின் வளங்களைப் பரவலாக எல்லோரும் பகிர்ந்து அனுபவிக்கும் நிலை உருவானால் மட்டுமே இப்பிரச்சினைக்குத் தீர்வு உண்டாகும்.

நாட்டுக்கு உணவு வழங்கும் விவசாயிகளின் நிலைமை பரிதாபமாக இருக்கிறது. விவசாயிகள் தற்கொலை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. விவசாயிகள் தங்கள் நிலங்களை விட்டு வெளியேற்றப்படுதல், விவசாயிகளுடைய உழைப்பின் பலன் அவர்களுக்குக் கிடைக்காத நிலை ஆகியவற்றால் கடுமையான நெருக்கடியில் விவசாயிகள் உள்ளனர்.

ஏழைகள் மற்றும் விவசாயிகளுக்காக அறிவிக்கப்படும் திட்டங்களின் பயன்கள் முழுமையாக அவர்களைச் சென்றடையாத நிலை. ஊழல் மற்றும் முறைகேடுகளால் அவர்களுக்கான உதவித் திட்டங்கள் சரிவர பலனளிப்பதில்லை.



மானியங்களை நிறுத்துவது போன்ற கொள்கைகள் மூலம் ஏழைகளும் விவசாயிகளும் கடுமையான பாதிப்புகளுக்குள்ளாகி உள்ளனர். விவசாய விளை பொருட்களுக்கான விலையை நிர்ணயிக்கும் உரிமையும் அவர்களுக்கு இல்லாதிருக்கிறது.

### 2. வேலையின்மை

இன்று இந்தியா எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று வேலையில்லாத் திண்டாட்டம். படித்து பட்டம் பெற்ற பல இலட்சம் இளைஞர்களுக்குப் போதிய வேலைவாய்ப்பு இல்லாத நிலை. நாட்டில் பல ஆயிரம் பொறியியல் கல்லூரிகளும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இருக்கின்றன. இவற்றின் மூலம் பல இலட்சம் பட்டதாரிகள் ஆண்டுதோறும் உருவாகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தங்கள் தகுதிக்கேற்ற வேலை வாய்ப்புகள் இன்றித் திண்டாடுகின்றனர். இதனால் பல இளைஞர்களின் திறமை வீணடிக்கப்படுகிறது. மனிதவளம் நம்மிடம் மிகுதியாக இருந்தும் அதனை முழுமையாகப் பயன்படுத்தும் திட்டங்கள் இல்லை. பல இளைஞர்கள் மன அழுத்தத்திற்கு ஆளாகி செயல் இழந்து போகின்றனர். பலர் திருட்டு, கொள்ளை, தீவிரவாதம் முதலான சமூக விரோத செயல்களில் ஈடுபடுகின்றனர். வேலைவாய்ப்புகள் கிடைக்கும் பலருக்கும் செய்யும் வேலைக்கு ஏற்ற ஊதியம் கிடைக்காத நிலை. இவற்றின் மூலம் வறுமை நிலையானது மேலும் அதிகமாகிறது. வேலை வாய்ப்புக்களை உருவாக்கி மனித வளத்தை முறையாகப் பயன்படுத்தினால்தான் நாடு வளரும்.

## III. மதச்சார்பின்மையும் சமூக நல்லிணக்கமும்

இந்தியா வேற்றுமையில் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டான நாடு. பல்வேறு மதங்கள், இனங்கள், மொழிகள், பண்பாடுகள், உணவுப் பழக்கங்கள், பண்டிகைகள் மற்றும் நம்பிக்கைகளைக் கொண்ட மக்கள் வாழும் நாடு. இம்மக்கள் ஒருமைப்பாட்டுடன் இணைந்து வாழ்வதற்கு "நல்லிணக்கம்" மிக மிக அவசியம்.

வேறுவேறு இன, மத, மொழி, நம்பிக்கைகள் கொண்ட மக்கள் சமூகப் பரப்பில் நட்புறவுடன், மகிழ்ச்சியாக, அமைதியாக வாழ்வதுதான் "சமூக நல்லிணக்கம்".

நல்லிணக்கம் இல்லாவிட்டால் நாட்டின் வளர்ச்சி மட்டுமல்லாது, வீட்டின் வளர்ச்சியும் பாதிக்கப்படும். ஏனெனில், ஒற்றுமையே உயர்வுக்கு வழி.

தம் சொந்த மொழி, மதம், நம்பிக்கைகள் மீது உறுதியான பற்றுதல் கொண்டிருந்து, அடுத்தவர் மொழி, மதம், நம்பிக்கைகளுக்கு மதிப்பும் மரியாதையும் அளிப்பதுதான் நல்லிணக்கத்துக்கான அடிப்படை. வேறு மொழி, மதம், நம்பிக்கைகள், பண்பாடுகளைச் சார்ந்தோர் மீது காழ்ப்பும் வெறுப்பும் கொண்டு அவர்களுக்கெதிராக பேசுவதும் செயல்படுவதும் அடிப்படைவாதம் ஆகும்.

**இந்தியாவில் மதங்கள்**

மதங்களின் வேர்கள், சமூகத்தில் ஆழமாகப் பதிந்திருக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. மக்களின் பண்பாடுகளுடன் அவை இறுக்கமாகப் பிணைந்துள்ளன.

புத்தம், சமணம், சைவம், வைணவம், இஸ்லாம், சீக்கியம், கிறிஸ்தவம் முதலானவை இந்தியாவில் நடைமுறையிலிருக்கும் முக்கிய மதங்கள். தவிர, பல்வேறு சிறு தெய்வ வழிபாட்டாளர்களும் நாட்டார் தெய்வங்களின் பக்தர்களும் இங்குப் பரவலாக உள்ளனர். சைவம், வைணவம் முதலான மதங்களைச் சார்ந்தவர்கள் மொத்தமாக இந்துக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

கடவுள் நம்பிக்கையற்ற மதங்களுக்கு அப்பாற்பட்ட மக்களும் நம் நாட்டில் கணிசமாக உள்ளனர். தமிழகத்தின் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். தன்னை எந்த மதத்தையும் சாராதவராக அறிவித்தவர். தனது மதம் "திராவிடம்" என்று குறிப்பிட்டவர்.

பெரும்பாலும் ஒருவருடைய மதம் அவரது பிறப்பால் தீர்மானிக்கப்படுகிறது. தாயும் தந்தையும் எந்த மதத்தைச் சார்ந்தவர்களோ அவர்களுக்குப் பிறக்கும் குழந்தையும் அதே மதத்தைச் சார்ந்ததாக அறியப்படுகிறது. பெற்றோர் வெவ்வேறு மதங்களைச் சார்ந்தவர்களாக இருப்பின் குடும்பமாக அவற்றில் ஏதேனும் ஒரு மதத்தைத் தழுவும் நிலைக்கு வருகின்றனர். புள்ளி விபரங்கள் தயாரிப்புகளுக்காக அப்படியொரு நிலை உருவாகிறது.



சில வீடுகளில் வேறு வேறு மதங்களைச் சார்ந்த தாயும் தந்தையும் தனித்தன்மையுடன் தத்தமது மத நம்பிக்கைகளில் உறுதியாக இருந்து, அதே நேரம் நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வருகின்றனர். இதுவே உண்மையான நல்லிணக்கம்.

தாம் பின்பற்றும் மதத்தின் கொள்கைகள் அல்லது மதத்தலைவர்கள் மீது வெறுப்பு கொண்டோ இன்னொரு மதத்தின் மீது ஈர்ப்பு கொண்டோ, அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காகவோ சிலர் மதத்தை மாற்றிக்கொள்வதும் உண்டு. மத நம்பிக்கை என்பது தனிநபர் சார்ந்த உரிமை. அவர் விரும்பும்போது அதை மாற்றிக்கொள்ளும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. தான் சார்ந்திருக்கும் மதத்தின் நம்பிக்கைகளையும் தொழுகை முறைகளையும் பின்பற்ற மட்டுமல்ல, அவற்றை விமர்சிக்கவும் அவருக்கு உரிமையுண்டு. ஆனால், அடுத்தவர் மத விவகாரங்களில் தலையிடும் போது கவனம் தேவை. முட்டை உள்ளிருந்து உடைவதற்கும் வெளியிலிருந்து உடைக்கப்படுவதற்குமிடையிலான வேறுபாட்டைப் போன்றது அது.

**அரசியலும், மதமும்**

மதத்தை அரசியலில் கலப்பதோ, அரசியல் ஆதாயத்துக்காக மதத்தைப் பயன்படுத்துவதோ சரியானதன்று. அரசியலில் மதமோ மதத்தில் அரசியலோ கூடாது. மதத்தின் மீது மரியாதை கொண்டவர்கள் அப்படி செய்வதில்லை. அரசியல் லாபங்களுக்காக மதம் சார்ந்த பதட்டங்களை உருவாக்குபவர்கள் தம் மதத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் எதிரானவர்கள். இவர்கள் தேசத்துக்கும் எதிரிகள். உண்மையான தேசியவாதிகள் தேசத்தின் அனைத்து மக்களையும் நேசிப்பவர்களே. மதங்களைக் கடந்த மனிதநேயமே தேசத்தைக் கட்டியெழுப்பும். மதமோதல்களால் நாட்டின் வளர்ச்சி பாதிப்படையும்.

**மதச்சார்பின்மை**

நமது அரசியல் சாசனமானது மதச்சார்பின்மையை அடிப்படையாகக் கொண்டது. உண்மையான மதச்சார்பின்மை என்பது எந்த மதத்தையும் சாராமல் இயங்குவது. நம் நாட்டைப்

பொறுத்தவரை அத்தகு மதச்சார்பின்மை பகுத்தறிவாளர்களிடம் மட்டுமே உள்ளது. பெரும்பாலான மனிதர்களும் ஏதோவொரு மதத்தின் மீது பற்று கொண்டவர்களாக இருக்கும் சூழலில் "மதச் சார்பின்மை" என்பது வேறொரு பொருளில் அறியப்படுகிறது.

பொது வெளியில் எல்லா மதங்களுக்கும் சம மரியாதை அளித்து, மதத்தின் அடிப்படையில் மனிதர்களை வேறுபடுத்தாத நிலையே நம் சூழலில் மதச்சார்பின்மையாக கருதப்படுகிறது. அதாவது, எல்லா மதங்கள் மீதும் சம அளவிலான சார்பு.

**அரசியல் சாசனமும், மத சுதந்திரமும்**

இந்திய அரசியல் சாசனம் வழங்கியுள்ள வழிபாட்டு சுதந்திரம் பின்வருமாறு உள்ளது (பிரிவு 25):

"பொது ஒழுங்கு, ஒழுக்க முறைமை மற்றும் உடல் மன நலம் ஆகியவற்றுக்கும் (அரசியல் சாசனத்தில் கூறப்பட்டுள்ள மற்றவற்றிற்கும் உட்பட்டு) தம் மனசாட்சியின்படி செயல்படும் சுதந்திரம் எல்லோருக்கும் இருக்கிறது. ஒரு மதத்தைக் கொண்டாடவும், கடைபிடிக்கவும், பரப்பவும் ஒவ்வொருவரும் உரிமை உடையவர் ஆவார்.

**எச்சரிக்கை**

மத சுதந்திரமானது பொது ஒழுங்கு, ஒழுக்க முறைமை இவற்றுக்குச் கட்டுப்பட்டன என்று அரசியல் சாசனம் தெரிவிக்கிறது. மத சுதந்திரத்தைப் பொது ஒழுங்கையோ அமைதியையோ குலைக்கும் காரியங்களில் பயன்படுத்தலாகாது. ஒரு மதத்தின் மீது பற்று கொண்டு அம்மதம் சார்ந்த சடங்குகளிலும் தொழுகைகளிலும் ஈடுபடும் உரிமை அனைவர்க்கும் இருக்கிறது. அதேநேரம், அடுத்த மதத்தினரின் தொழுகைகளிலோ மத நடவடிக்கைகளிலோ குறுக்கீடு செய்வதும் இடையூறு செய்வதும் சமூக பதட்டத்துக்கு வழிவகுப்பவை. மதம் சார்ந்த எந்த நடவடிக்கையும் தேசத்தின் இறையாண்மையைச் சேதப்படுத்த அனுமதிக்கக் கூடாது.



## கேள்விகள்

### பகுதி - அ

**I. கீழ்க்கண்ட கேள்விகளுக்குச் சரியான விடையை தெரிவுச் செய்க:**

1. தீவிரமதுப்பழக்கம்________உண்டாக்குகிறது.

(அ) மனச்சிதைவை (ஆ) உடல் தளர்ச்சியை
(இ) மூளை வளர்ச்சியை
(ஈ) மனச்சிதைவையும், உடல் தளர்ச்சியையும்.

2. பின்வருவனவற்றுள் எது சரியான கருத்து?

அ) மது ஓர் உணவு
ஆ) மது அருந்துவது கவுரவமானது
இ) மது மூளையின் செயல்திறனை அதிகரிக்கிறது
ஈ) மது வீட்டுக்கும் நாட்டுக்கும் கேடானது

3. போதை ஊசிகளின் விளைவு________

அ) உடல்பலம் ஆ) உடல் தளர்ச்சி
இ) மூளையின் செயல்திறன் அதிகரிப்பு
ஈ) சமூக அந்தஸ்து

4. பின்வருவனவற்றுள் மனிதர்களின் அடிப்படைத் தேவை எது?

அ) உணவு ஆ) வாகனம் இ) செல்பேசி ஈ) மின்விசிறி

5. இந்திய அரசியல் சாசனம் ________ ஐ அடிப்படையாகக் கொண்டது

அ) இந்து மதம் ஆ) இஸ்லாம்
இ) கிறிஸ்தவம் ஈ) மதச்சார்பின்மை

### பகுதி - ஆ

**II. பின்வரும் கேள்விகளுக்கு சுருக்கமாக பதில் தருக:**

1. போலி மது குறித்து குறிப்பு வரைக.
2. வறுமை குறித்து சுருக்கமாக விவரி.
3. மதுவின் தீமைகள் குறித்து சிறு குறிப்பு வரைக.
4. இந்தியப் பொருளாதார வளர்ச்சி பெரும்பான்மை மக்களுக்கு பலனளிக்காததன் காரணிகள் யாவை?
5. இந்தியாவில் உள்ள மதங்கள் பற்றி சுருக்கமாக எழுதுக.

6. மதச்சுதந்திரம் குறித்து அரசியல் சாசனம் கூறுவது குறித்து சுருக்கமாக விவரி.

பகுதி -இ

III. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விரிவான விடை எழுதுக.

1. மதுவால் உண்டாகும் தீமைகள் என்னென்ன?
2. மதச்சார்பின்மை மற்றும் சமூக நல்லிணக்கம் குறித்து விவரி.
3. மது குறித்த பொய்மையான எண்ணங்கள் குறித்தும், அவற்றை நீக்குவதற்கு இளைஞர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றியும் விளக்கமாக கூறு.
4. சமூக அவலங்கள் எவை? அதைப் போக்க அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை?
5. மத நல்லிணக்கத்திற்குத் தடையாக இருப்பன குறித்து விரிவான விடை தருக.



# UNIT- IV

## ஊடகங்களும், தினசரி வாழ்வியலும்

### 1. தொடர்பியல் (Communication)

தொடர்பியல் என்பது ஒரு உண்மை நிகழ்வு. தொடர்பியல் என்ற வார்த்தை லத்தீன் மொழியில் இருந்து பெறப்பட்டது. லத்தீனில் 'கம்யூனிஸ்' என்றால் பொது என்று அர்த்தம் லத்தின் பெயர் சொல்லான கம்யுனிஸ் மற்றும் வினைச்சொல்லான கம்யுனிக்கேர் ஆகிய வார்த்தைகளில் இருந்துதான் ஆங்கில வார்த்தையான கம்யூனிக்கேஷன் (Communication) பெறப்பட்டது. அதற்குப் பொதுமைப்படுத்துதல் என்று அர்த்தம். தொடர்பியல் மூலம் மட்டும்தான் நாம் பொதுவான விஷயங்களைப் பகிர்ந்து கொள்கிறோம். தொடர்பியல் என்பது பொதுமைத்தன்மையைப் பகிர்ந்து கொள்ளும் முறை. தொடர்பியல் பற்றி விவாதிக்கும் போது சமூகம் மற்றும் விசேஷ அம்சங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் ஆகிய எண்ணங்கள் அறிவுறுத்தப்படுகின்றன. தொடர்பியல் என்பது ஒரு செயலோ அல்லது நிகழ்வோ மட்டுமல்ல மாறாக அது சமூக மற்றும் கலாச்சார ஒன்று சேர்தல் ஆகும். மனிதர்கள் சமூகமாக ஒன்று சேர்வதற்குத் தொடர்பாடல் தேவை. இதைத் தான் பொதுமைப்படுத்துதல் என்கின்றோம். தொடர்பியல் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் உள்ளடக்கிய மனித உறவாகும். அதில் நிகழும் கலந்துரையாடல் தகவல் பரிமாற்றம் ஒன்று கூடுதல் ஆகியவை பொதுமைத்தன்மை வாய்ந்ததாக இருக்கும். பொதுமைத்தன்மை இல்லாவிட்டால் தொடர்பியல் நிகழ்வது கடினம். மொழி வழி மற்றும் மொழியற்ற தொடர்பியல் கலாச்சாரம் மற்றும் சமூகச்சூழலின் பொதுமைத்தன்மை மிகவும் முக்கியம். இருவர் உரையாடும் போது மொழி பொதுவாக இருக்க வேண்டும். இல்லையென்றால் புரிந்து கொள்வது கடினம். மொழியற்ற தொடர்பியல், புன்னகை முகபாவங்கள் போன்றவை மனிதர்களுக்குப் பொதுவாக இருப்பதால் புரிந்து கொள்வது கொஞ்சம் எளிது. ஆனால் இதிலும் பொதுமைத் தன்மை தேவை. தொடர்பியல நிகழ்வதற்குப் பொதுமைத் தன்மை மிகவும் அவசியம்.

## 1.1. மக்கள் தொடர்பியல் (Mass Communication)

தகவல் தொடர்பு என்பது மக்களிடம் தகவல்களை, கருத்துக்களை, செய்திகளைக் கொண்டு சேர்ப்பது ஆகும். இத்தகவல் தொடர்பு ஒரு இடத்திலிருந்தோ ஒருவர் மூலமாகவோ பல லட்சம் மக்களுக்குச் செல்வது மக்கள் தொடர்பியல் எனப்படும். மக்கள் தொடர்பியலுக்காக நாம் பயன்படுத்தும் சாதனங்களை மக்கள் தொடர்புச் சாதனங்கள் என்கின்றோம். மக்கள் தகவல் தொடர்பு என்பது பன்னெடுங்காலமாக நம்மிடையே நிலவி வரும் தொடர்பியல் முறை ஆகும். அரசர்கள் மக்களுக்குத் தகவல்களைச் சொல்வதற்குக் கல்வெட்டுகள், மணி அடித்தல், பறை அறைதல் எனப் பல்வேறு யுக்திகளைக் கையாண்டனர். காலப்போக்கில், மக்கள் தொகை பெருக, ராஜ்ஜியங்கள் வளர, நாகரிகங்க்ள விரிவுபட தகவல்களின் தேவை அதிகரித்தது. 1436 இல், ஜெர்மனி நாட்டின் ஜான் கட்டன்பர்க் என்பவர் அச்சுப் பொறியைக் கண்டுபிடித்தார். இதுவே பிற்காலத்தில் மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்களில் முதன்மையான செய்தித்தாளைக் கண்டறிய வழிவகுத்து செய்தித்தாள்கள் ஒரே தகவலைப் பல்லாயிரக்காணக்கான மக்களுக்குக் கொண்டு சென்றது.

## 1.3. மக்கள் தொடர்பு ஊடகங்கள் (Mass Media)

மக்கள் தொடர்பியல் என்றால் நம் நினைவுக்கு வருவது ஊடகங்கள் தான். பத்திரிக்கைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், இணையம், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவனைத்தும் ஊடகங்கள் என்றழைக்கப் படுகின்றன. ஊடகத்தைப் புரிந்து கொள்வதற்குப் மெப்லூவனின் கருத்துக்கள் பயனுள்ளதாக இருக்கும். அவரது பார்வையில் ஊடகத்தைப் புரிந்து கொள்வதற்கு, நாம் ஒவ்வொன்றையும் கேள்விக்குட்படுத்த வேண்டும். ஊடகம் என்பது ஒரு புதிய தொழில்நுட்பம். அந்தப் புதிய தொழில்நுட்பமும் நமது உடல், உள்ளம் மற்றும் உயிரின் நீட்சியே என்கிறார். தொலைக்காட்சி என்பது நம் கண் மற்றும் காதின் நீட்சி என்கிறார். கணினியின் அமைப்பு நம் நரம்பு மண்டலத்தின் நீட்சி. வானொலி என்பது நம் காதின் நீட்சி. ஊடகங்கள் என்பவை மாற்றத்தை உருவாக்கும் மாபெரும் பிரதிநிதிகள். அந்த மாற்றங்களால் நமது உலக அனுபவங்கள்,



நாம் மற்றவருடன் கலந்துரையாடுவது, நமது நுண்புலன்கள் என அனைத்தையும் பாதிக்கின்றது. அவர் ஊடகங்களின் உள்ளடக்கத்தைப் படிப்பதை விட அது ஏற்படுத்தும் விளைவுகள் மீது கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

## 1.4. மக்கள் தொடர்பு ஊடகங்களின் பணிகள் (Functions of Mass Media)

ஊடகங்கள் சமுதாயத்தில் மேற்கொள்ளும் பணிகளுள் நான்கு முக்கியமானவை. மேலும் தொடர்பாடலுக்கு என்னென்ன பணிகள் உண்டோ அத்தனையும் ஊடகங்களுக்கும் உண்டு.

1. **கண்காணிப்பு:** ஊடகத்தின் செய்தி மற்றும் தகவல் தரும் பணியைக் கண்காணிப்பு என்று கூறலாம். மக்கள் பெரும்பாலும் நாட்டுநடப்புகளையும், நிகழ்வுகளையும் தெரிந்து கொள்வதற்கு ஊடகத்தையே பெரிதும் நம்பியுள்ளனர். அனைத்து ஊடகங்களும் செய்திகளைத் தருவதில் போட்டி போடுவது இதற்காகத் தான். இதில் கண்காணிப்பு என்பது இரு வகைப்படும். அவை எச்சரிக்கை கண்காணிப்பு மற்றும் உபகரண கண்காணிப்பாகும். நிலநடுக்கம், சுனாமி, புயல், எரிமலை வெடிப்பு ஆகியவற்றைப் பற்றி மக்களுக்கு எச்சரிப்பது கண்காணிப்புப் பணியாகும். தினசரி வாழ்விற்குப் பயன்படும் தங்க விலை விவரம், அழகுக் குறிப்புகள், ஆடையலங்கார யோசனைகள், சமையல் குறிப்புகள் ஆகியவை உபகரண கண்காணிப்புப் பணியாகும்.

2. **ஒருமைப்பாட்டுப் பணி:** ஊடகங்கள் இருவழித் தொடர்பை ஏற்படுத்திச் சமுதாயத்தில் பல்வேறு கூறுகளாக இருப்பவற்றை ஒன்றிணைக்கிறது. பூகோள ரீதியாக பிரிந்து இருப்பவர்களை ஒன்றுபடுத்தும் பணியையும் ஊடகம் மேற்கொள்கின்றது. எடுத்துக்காட்டு சுனாமி அல்லது நிலநடுக்கம் ஏற்பட்டால் அதன் பாதிப்பை ஊடகத்தில் தொடர்ந்து செய்தியாக வெளியிடுகின்றனர். அதைக் கண்ட மக்கள் உலகத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நிவாரணத் தொகைகளை அளிப்பது இந்தப் பணியால்தான். அதே போல ஊடகத்தின் வழியாக தலைவர்களுக்கும் மக்களுக்கும் ஒரு பாலம் ஏற்படுத்தப்படுகின்றது. எடுத்துக்காட்டு தொண்டர்களுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களது கட்சி இதழ்களில் அல்லது செய்திமடல்களில் எழுதும் கடிதம்

தலைவர்களையும் கட்சித்தொண்டர்களையும் இணைக்கின்றது. ஊடகத்தின் மூலம் சிறுபான்மை மக்கள் ஒன்றிணைந்து ஒரு சக்தி வாய்ந்த குழுவாக மாற முடியும்.

**3. கலாச்சாரப் பரிமாற்றம்:** ஊடகங்கள் பாரம்பரிய நெறிமுறைகளை, கலாச்சாரத்தை ஒரு கால கட்டத்தில் இருந்து மற்றொரு கால கட்டத்திற்குக் கொண்டு வருகின்றது. கலாச்சாரத்தைப் பரப்புவது ஊடகங்களின் பணியாக உள்ளது.

4. பொழுதுபோக்கு: ஊடகங்கள் இந்தப் பணியைத் தான் தெளிவாக ஆற்றுகின்றன. அனைத்து ஊடகங்களிலும் கதை, நாடகம், திரைப்படம், நகைச்சுவை நிகழ்ச்சிகள் தான் அதிகம். பண்பலை வானொலிகளும், தனியார் செயற்கைக்கோள் தொலைக்காட்சி சேனல்களும் பொழுதுபோக்கு அம்சங்களுக்குத் தான் முக்கியத்துவம் தருகின்றன.

## 1.5. ஊடகங்களின் தன்மைகள் (Characteristics of Mass media)

1. ஊடகங்கள் அதிக மக்களைச் சென்றடைகின்றது. ஊடகத் தயாரிப்புகள் பல்லாயிரக்கணக்கான மக்களால் நுகரப்படுகின்றன. இது காலத்திற்குக் காலம் மாறுபடும். மக்கள் பல்வேறு குழுக்களாக சிதறியுள்ளனர். ஊடகத்தைப் பல வழிகளில் மக்கள் பயன்படுத்துகின்றனர். ஒவ்வொரு ஊடக தயாரிப்பும் மக்களை மையப்படுத்தியே தயாரிக்கப்படுகின்றது.

2. ஊடகங்கள் பொதுவாக தயாரிக்கப்பட்டாலும் தனிப்பட்ட முறையில் நுகரப்படுகின்றன. ஊடகங்கள் மக்களுக்கு என்று தயாரிக்கப்பட்டாலும், ஊடகப் பயன்பாடு என்பது இன்னும் ஒரு தனிப்பட்ட அனுபவமாகவே உள்ளது. ஊடகங்கள் பெரும்பாலும் நமது தனிப்பட்ட அல்லது நமக்குரிய தனிப்பட்ட வெளியில் மட்டுமே நுகரப்படுகின்றது. ஊடகங்கள் நம் வாழ்வில் அதிகமாக நுகரப்படுகின்றது. நம் வாழ்வின் அனைத்து அம்சங்களிலும், நமது அனுபவங்களிலும் ஊடகங்களே ஆதிக்கம் செலுத்துகின்றது. இது ஊடக நிரம்பி வழிதல் அல்லது ஊடக வெள்ளம் எனப்படும்.

3. ஊடகத் தயாரிப்புகள் அனைத்தும் பகிர்ந்து நுகரப்படுகின்றது. ஊடகத் தயாரிப்புகள் அனைத்தும் அனைவருக்கும் பொதுவானது. யார் வேண்டுமானாலும் நுகரும் உரிமை இருக்கின்றது.



அனைவருக்கும் பொதுவானதால் ஊடகங்கள் நமது பொதுக்கலாச்சாரத்தின் ஒரு அங்கமாக மாறிவிட்டது.

4. ஊடகங்கள் அனைத்தும் கட்டுப்படுத்தப்படுகின்றது அல்லது வழிநடத்தப்படுகின்றது. ஊடகத்தின் ஆதிக்கம், புகழ் மற்றும் சாதனை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு ஊடகங்கள் அரசின் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு நாடும் ஊடகங்களுக்காகச் சட்டம் மற்றும் நெறிமுறைகளை வகுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

5. ஊடகங்கள் அதிநவீன தொழில்நுட்பத்தைச் சார்ந்துள்ளது. நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கும், அதை வெளியிடுவதற்கும் ஊடகங்கள் பெரும்பாலும் தொழில்நுட்பத்தைச் சார்ந்தே உள்ளது.

6. ஊடகங்கள் நவீனமயமானவை. ஊடகத் தொழில்நுட்பம், தயாரிப்புகள் என ஒவ்வொன்றும் புதியவை அல்லது நவீனமயமானவை ஊடகத்தில் தினந்தோறும் புதியதொரு மாற்றம் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது.

7. ஊடகங்கள், ஊடக நிகழ்ச்சி தயாரிப்பதற்கும், வெளியிடுவதற்கும் அதிக பொருட்செலவு ஆகும். அதனாலேயே ஊடகங்கள் பெரும்பாலும் அரசு, பெரிய கம்பெனிகள் அல்லது சர்வதேச நிறுவனங்களால் மட்டுமே .நடத்தப்படுகின்றன.

## 2. ஊடகக் கல்வி

ஊடகங்களைப்புரிந்து, அவற்றைப் பகுப்பாய்ந்து அறிவுக் கண்கொண்டு பார்ப்பதே இன்றைய தேவை ஆகின்றது. இவ்வாறு ஊடகங்களைப் பற்றியும் அவை நம்மீது செலுத்தும் தாக்கத்தைப் பற்றியும் தெரிந்து கொள்வதே ஊடகக் கல்வி ஆகும். ஊடகங்கள் என்பது நம தினசரி வாழ்வியலின் முக்கிய கூறாகத் திகழ்கிறது. ஒரு வகை ஊடகத்தினைப் பல்வேறு காரணங்களுக்காக நாம் சார்ந்துள்ள நிலையே ஊடகச் சார்புநிலை என்கிறோம். உதாரணமாக, தகவல் பெற பொழுதுபோக்கு மற்றும் சமூகக் கண்காணிப்பு போன்ற முக்கிய தேவைகளுக்கு ஊடகங்களையே நாம் பெரிதும் சார்ந்திருக்கிறோம். இத்தகைய சார்புத் தன்மை என்பது, ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு வேறுபடுகிறது. சிலர் ஏதோ ஒரு காரணத்திற்காக ஒரு ஊடகத்தை அதிக நேரம்

பயன்படுத்துகின்றனர் என்று ஆய்வுகள் கூறுகின்றன. இதிலும் பொழுதுபோக்கிற்காக திரைப்படம், இசை, நாடகம், நகைச்சுவை போன்ற நிகழ்ச்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் தருகின்றனர். எனவே ஊடகப் பயன்பாடு என்பது ஒரு மனிதரின் தினசரி வாழ்வியலில் ஒரு குறிப்பிட்ட நேரத்தை எடுத்துக்கொள்வது இன்றியமையாததாகிவிட்டது.

### 2.1. மாணவர்கள் மற்றும் குழந்தைகளின் ஊடகப் பயன்பாடு

இன்றைய சூழலில் மாணாக்கர், கல்வி, தகவல், பொழுதுபோக்கு எனப் பல்வேறு தேவைகளுக்காக ஊடகங்களை மிகுதியாக பயன்படுத்துவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஒன்பதாம் வகுப்பு மாணாக்கரிடம் ஓர் ஆய்வுக்காக ஊடகங்கள் பற்றிய ஓர் விவாதம் நடத்திய போது சமுதாயம் சார்ந்த அவர்களது புரிதல்கள் மீது ஊடகங்கள் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் பற்றி ஆராய ஒரு வாய்ப்பு கிடைத்தது. தகவல், செய்தி, விளையாட்டு, பொழுதுபோக்கு என அவரவர் தேவைகளுக்கேற்ப ஊடகப் பயன்பாடும் நேரமும் மாறுபட்டிருந்தன. இருப்பினும் பெரும்பாலான மாணவ மாணவிகள் ஒரு நாளைக்கு 2 மணி நேரம் முதல் 5 மணி நேரம் வரை ஊடகங்களைச் (பெரும்பாலும் தொலைக்காட்சியினை) சினிமா சார்ந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைக் காண பயன்படுத்துவது தெரிய வந்தது. குறிப்பாக பள்ளிகளில் ஆண், பெண் சமத்துவத்தைக் கற்பிக்க முற்பட்டாலும் ஊடகங்களின் பயன்பாடு கல்வியையும் விஞ்சி தனது ஆதிக்கத்தை முன்னிருத்துவதைக் காண வியப்பாகத்தான் இருந்தது.மாணவர்களின் ஊடகப் பயன்பாடு என்பது அதிகம் பொழுதுபோக்கு சார்ந்ததாக உள்ளதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. இதனால் வளரும் பருவத்தில் பலவேறு பாதிப்புகளும் ஏற்படுகின்றன என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

### 2.2. ஊடகங்கள் ஏற்படுத்தும் சமூகக் கலாச்சார அரசியல் பாதிப்புகள்.

இன்றைய சூழலில், குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு ஊடகங்கள் முன்னிருத்தும் வாழ்வியல் சார்ந்த சமூகக் கலாச்சார அரசியல் சார்ந்த மதிப்பீடுகளை



நாம் சற்றே பகுத்தாய்வது அவசியமாகிறது. காரணம், இந்த மதிப்பீடுகள் வாழ்வில் பல்வேறு கட்டங்களில் நம்மை இயக்கும் சக்திவாய்ந்தாகத் தெரிகிறது. சரி இதற்கு எப்படி ஊடகங்களைத் தொடர்புபடுத்துகிறோம் என்ற கேள்வி எழலாம். ஊடகங்கள் என்பவை இன்றைக்கு ஒரு தொழில்துறையாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இதுவே அதிவேகமாக வளர்ந்து வரும் தொழில் துறைகளில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. எனவே, ஊடகத்துறை என்பது பொழுதுபோக்கிற்கு முக்கியத்துவம் அளிப்பதால் இந்தத் துறையில் அதிகமான முதலீடுகள் குவிகின்றன. ஒரு வருடத்திற்குக் குறைந்தது 1000 திரைப்படங்கள் எடுக்கப்படுகின்றன, 875 தொலைக்காட்சி சேவைகளுக்கு மேல் இந்தியாவில் இயங்குகின்றன.

ஊடகத்துறை இன்று மிகப் பெரிய அளவில் வருமானம் தரும் துறையாக திகழ்கிறது. ஊடகத்துறையைச் சார்ந்தே விளம்பரத்துறை இயங்குகிறது. பல பொருட்கள், குறிப்பாக, தினசரி பயன்படுத்தும் முக்கிய பொருட்களே வேகமாக நுகரப்படும் நுகர்வுப்பொருள் எனப்படுகிறது. இவற்றில் சோப்பு, பற்பசை, முகப்பூச்சுகள் போன்ற பொருட்களே அதிகம் அடங்கும். இந்தப் பொருட்களை வணிகப்படுத்த விளம்பரங்கள் தேவைப்படுகின்றன. இந்த விளம்பரங்கள் பல்வேறு வகையான ஊடகங்கள் மூலம் மக்களை அடைகின்றன. இதுவே ஊடகத்துறைக்கான முக்கிய வருமானத் தளமாக இயங்குகின்றது.

### 3. ஊடகங்கள் முன்னிறுத்தும் கலாச்சாரம் (Mass Mediated Culture)

நமது தினசரி வாழ்வியலில் உணவு, உடை, போன்ற முக்கிய அம்சங்களை நாம் தீர்மானிக்க விளம்பரங்கள் மற்றும் நமது திரை நட்சத்திரங்களைச் சார்ந்தே இருக்கிறோம் என்கின்றன ஆய்வுகள். சந்தைகளின் நுகர்வாளர்களாக (consumers) மாறி ஊடகங்கள் போற்றும் அழகிலக்கணங்களை எட்ட முடியாது. நமது வளரிளம் பருவத்தினர் சந்திக்கும் விளைவுகளோ இன்னும் அபாயகரமானது. அழகு பற்றிய தவறான புரிதல் உடல்நலக் கேடுகளை விளைவிக்கின்றது என்பது ஆய்வாளர்கள் மற்றும் மருத்துவர்களின் கூற்று.

## 3.1. அழகு சார்ந்த மதிப்பீடுகள்

அழகு சார்ந்த புரிதல்கள் நமது சமூகத்தில் பல்வேறு கோணங்களில் அணுகப்படுகிறது. மனிதனது புற அழகிற்கு முக்கியத்துவம் தரும் வகையில் நிறம், உயரம், எடை, உடை, ஆபரணங்கள் போன்றவற்றைக் கொண்டு ஒரு நபரைப் பற்றிய கருத்தமைப்பு உருவாக்கப்படுகிறது. ஒரு ஆண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற விதிமுறைகளை ஊடகங்கள் நமக்கே தெரியாமல் நம்மில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஆண் என்பவன் உயரமாக, திடகாத்திரமான உடற்கட்டுடனும், பெண் என்பவள் மிகவும் ஒல்லியாக, வெளிர் நிறமுள்ளவராக இருப்பதே அழகு என்ற மதிப்பீட்டை நமது பொழுதுபோக்கு ஊடகங்கள் நம்மில் திணித்துள்ளதை நாம் அறிவதில்லை. நமது சமுதாயத்தில் மனித உடலின் வெளிப்புற தோற்ற அழகு குறித்த புரிதல்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் நம்மில் பல கேள்விகளை எழுப்புகிறது. இன்றைக்கும் நமது வீடுகளில் குழந்தை பிறந்தவுடன் கேட்கப்படும் முதன்மையான கேள்விகளில் ஒன்று குழந்தை சிவப்பா? கருப்பா? என்பதுதான். இலக்கிய நாயகிகள் முதற்கொண்டு இன்றைய திரைப்பட நாயகிகள் வரை சிவப்பு என்பது அழகின் முக்கிய குறியீடாக முன்னிறுத்தப்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. மணமக்கள் தேவை பக்கத்தை ஆராய்ந்தால் சிவப்பழகின் மீதான நமது மோகம் அப்பட்டமாக தெரியும். இதனை அடையாளம் கண்டு கொண்ட பன்னாட்டு நிறுவனங்களும் நம்மை நல்ல சந்தையாக பயன்படுத்த வியாபார நோக்கத்துடன் பெண்கள் ஆண்கள் என இருபாலருக்குமான முகப் பூச்சுகள், திரவங்கள், சோப்புகள் போன்றப் பல்வேறு அழகு சாதனப் பொருட்களை அறிமுகப்படுத்தி அழகு என்பது லாப வணிகமாக மாறியுள்ள போக்கைக் காண முடிகிறது.

அழகு சார்ந்த உணர்வினை வணிகமயமாக்கி இப்பன்னாட்டு நிறுவனங்களே அழகிப் போட்டிகளை முன்னின்று நடத்துகின்றன. சந்தை சாத்தியக் கூறு மிகுந்த இந்திய நாட்டிலிருந்து உலக அழகிகளும் முடிசூட்டப்பட்டுள்ளனர். அழகு சார்ந்த நமது விழிப்புணர்வையும் நுகர்வையும் அதிகப்படுத்தும் இம்முயற்சியில்



ஊடகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. ஊடகங்கள் சித்தரிக்கும் அழகு நம்மை ஒருவித மாயைக்குள் தள்ளுகிறதோ என்கிற ஐயம் எழுகிறது. விளைவு, சந்தையில் அதிகரித்துவரும் அழகு சாதனப் பொருட்களும் அதன் விலைகளும்தான். பல்வேறு வியாபார உத்திகளால் ஊடகங்களின் துணையோடு லாபம் மட்டுமே குறிக்கோளாய் செயல்படும் இப்பன்னாட்டு நிறுவனங்களுக்கு மத்தியில் உடல் ஆரோக்கியம் குறித்த சிந்தனை சத்தமின்றி மழுங்கடிக்கப்படுகிறது. எனவே ஊடகங்களைக் குறிப்பாக திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சியின் வாயிலாக மையப்படுத்தும் அழகு சார்ந்த விசயங்களைக் கண்டிப்பாக ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது. நமது கண்களைத் தாண்டிய அறிவுத் தேடலும் எதையும் கேள்வி கேட்டு ஆராயும் தன்மையும் இன்றைய சூழலில் அவசியமாகிறது. ஊடகங்கள் சித்தரிக்கும் அழகு என்ற கோட்பாட்டையும் பள்ளிக் குழந்தைகள் குறிப்பாக வளர் இளம் பருவத்தினரிடம் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

ஊடகங்கள் சித்தரிக்கும் கதாநாயகிகள், விளம்பர மாடல்கள் எதார்த்தத்தை மீறிய, நடைமுறை வாழ்க்கையில் நாம் சார்ந்திராத உருவங்களாக நம்மை ஆக்கிரமிப்பது விந்தையாக உள்ளது. அதிகப்படியான சிவப்பழகு, பளீரென்ற தோற்றம், மெலிந்த உடல்வாகு என நாம் அன்றாடம் பார்க்கும் முகங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டு அதிக செயற்கைத்தனத்தோடு அழகு குறித்த ஆபத்தான கருத்தியயைத் திணிக்கிறது. இது இளைய தலைமுறையினரிடையே உடல் குறித்த பிம்பத்தை உருவாக்குகின்றது. உடல் ஆரோக்கியத்திற்கு எதிரான தரமற்ற நிர்ணயங்களை நம்மிடையே திணிக்கின்றது. குறிப்பாக ஊடகங்கள் சித்தரிக்கும் கதாநாயகிகள், விளம்பர மாடல்கள் முன்னிருத்தும் பூஜ்ய அளவு என்கிற மெலிந்த தேகம் பெண்களுக்கான உடல் அளவை நிர்ணயிக்கின்றன. இதே போல ஆண்களுக்கான அழகு நிர்ணயங்களாக திரைப்பட கதாநாயகர்களும், விளம்பர மாடல்களும் முன்னிருத்துவது 6 பேக் அல்லது 8 பேக் எனப்படும் உடற்கட்டு ஆகும். விளைவு இவ்வாறான அசாதாரணமான அழகை அடைய பல்வேறான

ஆரோக்கியமற்ற வழிகளை இன்றைய வளர் இளம் பருவத்தினர் கையாள்வது பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமுதாய ஆர்வலர்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நமது நாட்டில் 14 வயது முதல் 17 வயது வரை உள்ள குழந்தைகளிடம் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் "உங்கள் புறத்தோற்றம், உடல் அமைப்பு" உங்களுக்கு பிடித்திருக்கின்றதா? எனக் கேட்ட போது பெரும்பாலான குழந்தைகள் "இல்லை" என்றும், பலர் "முழுமையாக திருப்தி இல்லை" என்றும் கூறியுள்ளனர். இவ்வகையான ஆய்வுகள் அதிர்ச்சிகரமான உண்மைகளை வெளிக்கொணருகிறது. பெரும்பாலான குழந்தைகளின் உடல் சார்ந்த பிம்பம் என்பது பல்வேறு ஊடகங்களால் திணிக்கப்பட்ட ஒன்றாகவே உள்ளது. உதாரணமாக பெண்களைப் பொறுத்தமட்டில் உடல் சார்ந்த பிம்பத்தின் புரிதல்கள் சிவப்பழகு மற்றும் பூஜ்ய அளவை எட்டுவதே தங்களுக்கு விருப்பமானது என்று தெரிவித்துள்ளனர். இதற்காக அதிக பணம் செலவழித்து அழகு சாதனப் பொருட்களை வாங்குவது, தங்களை வருத்திக் கொண்டு முறையான பயிற்சிகளின்றி, புரிதலின்றி உடல் மெலிய மற்றும் பிற தவறான அணுகுமுறைகளைக் கையாள்வது வாடிக்கையாகிவிட்டது. இன்றைக்குப் பெரும்பான்மையான மாணவிகள் காலை அல்லது இரவு உணவைத் தவிர்க்கும் வழக்கம் மேலோங்கி வருகிறது. தங்களை வருத்திக் கொண்டு உணவைத் தவிர்த்து தேவையான உடல் எடையைக் காட்டிலும் குறைவான நிலையை அடைய மெனக்கெடுகிறார்கள். சாதாரணமான இயற்கையாக அந்தப் பருவத்திற்கே உரிய எடையைக் கூட அதிகம் எனக்கருதி உடல் மெலிய ஆரோக்கியமற்ற வழிகளைத் தேர்வு செய்கின்றனர். மேலும் கருப்பாக இருப்பதே குற்றம், மனித வளர்ச்சிக்கு, இயல்பிற்கெதிரானது எனவே, எதையாவது போட்டு நான்கு வாரங்களில் சிவப்பழகு பெற வேண்டும் என ஊடகங்கள் நிற வேற்றுமையை விதைக்க இது இன்றைக்கு ஆண்களையும் விட்டு வைக்கவில்லை.

ஆண்களைப் பொறுத்தவரை, செயற்கையான உடலமைப்பைப் பெற துரித உணவுகள், செயற்கை உணவுகள்,



ஊக்க மருந்துகள், இன்னும் பிற முறைகளைப் பயன் படுத்துகின்றனர். இந்த ஆபத்தான அழகியல் கூறுகளை இவர்கள் எங்கிருந்து கற்றுக் கொண்டனர்? என்றறிய ஆய்வாளர்கள் களமிறங்கிய போது முதன்மைக் காரணமாக நின்றது உடல் சார்ந்த அழகியல் குறித்த ஊடகங்களின் சித்தரிப்புகளே.

ஊடகங்கள் முன்னிருத்தும் அழகு சார்ந்த பரிமாணங்களை இளைய தலைமுறையினர் எட்ட மேற்கொள்ளும் முயற்சிகள் ஏராளம். உடல் மெலிய உணவுகளைத் தவிர்ப்பதால் இரத்த சோகை, முடி உதிர்தல், ஞாபக மறதி, கண்பார்வை பாதிப்பு, மாதவிடாய் கோளாறுகள் போன்ற எண்ணற்ற நோய்கள் உருவாகும் அபாயம் உள்ளது. அதே சமயம் துரிதமாக எடையைக் கூட்ட அல்லது குறைக்க எடுக்கும் உணவுகளும் இரசாயன தன்மையுடனும் உள்ளதால் உடல் நலனைப் பாதிக்கின்றது.

இவ்வாறான போக்கு, உடல் கேடுகளை மட்டுமின்றி மனநலனையும் பாதிக்கிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது. பெரும்பாலான குழந்தைகள் ஊடகங்கள் போற்றும் அழகிலக்கணங்களை எட்ட முடியாத போது மனச்சோர்வு மற்றும் தாழ்வுமனப்பான்மை அடைகின்றனர். மேலும், தங்களது இயற்கையான உடல் அமைப்பை வெறுக்கின்றனர் தங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். எனவே வளரிளம் பருவத்தினரிடையே ஊடகங்கள் முன்னிருத்தும் அழகு சார்ந்த பரிமாணங்களைப் பற்றிய புரிதல்கள் விவாதிக்கப்பட்டு ஆராயப்பட வேண்டும். பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் சிந்தித்து செயல்பட வேண்டும். எது அழகு, எது ஆரோக்கியம் என்ற புரிதல் மேம்பட வேண்டும். கண்களைத் தாண்டி பகுத்தறிவோடு ஊடகங்களை ஆராய்வோம் செயல்படுவோம்.

நமது சிந்தனைக்கு

- ஊடகங்களில் வரும் பெண்களுக்கும் நிஜ வாழ்வில் வரும் பெண்களும் உள்ள வித்தியாசம் என்ன?
- வேறுபாடுகளால் ஏற்படும் விளைவுகள் என்ன?
- ஊடகங்கள் சொல்லும் அழகு என்ற அடிப்படையில் நீங்கள் ஏதாவது பிரச்சனைகள் அல்லது பாகுபாடுகளை சந்தித்துள்ளீர்களா?

- நீங்கள் பார்த்த திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சித் தொடர்களில் ஆண் பாத்திரங்கள் மற்றும் பெண் பாத்திரங்களை எவ்வாறு படைத்துள்ளனர்.?

**3.2. உணவு மற்றும் ஆரோக்கியம் சார்ந்த மதிப்பீடுகள்**

பத்தாண்டுகளுக்கு முன்புவரை நமது வீட்டு பிள்ளைகளுக்கு நூடுல்ஸ், பீசா போன்ற துரித உணவுகளின் அறிமுகம் இல்லாமல் இருந்தது. ஆனால் விளம்பரங்கள் மூலம் இவை நமது உணவு பழக்கவழக்கத்தை வெகுவாக மாற்றியமைத்துள்ளது. உணவு என்பது நமது உடல் ஆரோக்கியம் சார்ந்தது என்ற நிலை மாறி, சுவைக்காகவும் அந்தஸ்து சார்ந்த விஷயமாகவும் மாறியுள்ளதைப் பார்க்கும் போது வேதனை அளிப்பதாக உள்ளது. ஆரோக்கியம் தரும் உணவுகள் இரண்டாம் பட்சமாக கீழ்நிலைக்குத் தள்ளப்படுவதால், மோர், இளநீர் போன்ற பானங்களுக்குப் பதிலாக செயற்கை குளிர்பானங்களை அருந்துவதை அந்தஸ்தாக பார்க்கும் அவல நிலை உருவாகியுள்ளது. செயற்கை குளிர்பானங்கள் மற்றும் துரித உணவுகள் நமது உடலுக்குக் கேடு விளைவிக்கும் தன்மை வாய்ந்தது என்பதைத் தெரிந்தும் அவற்றை மக்களும் குழந்தைகளும் இளையதலைமுறையினரும் விரும்புவது விளம்பரங்களின் வெற்றியே.

ஆரோக்கியத்தைப் பின்னுக்குத் தள்ளி, போலியான கௌரவத்திற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. எதையாவது செய்து முகத்தில் பூசி வெள்ளையாவது, உணவைத் தவிர்த்து ஒல்லியாக மாறுவது,துரித உணவு முறையால் திரை நட்சத்திரங்கள் போன்று உடற்கட்டு பெற முற்படுவது என நமது இளைய சமுதாயம் ஆரோக்கியத்தைப் பணயம் வைக்கும் நிலை இன்று அதிகரித்திருப்பதைக் காண முடிகிறது.

நமது சிந்தனைக்கு

- உங்கள் நண்பர்கள் யாராவது உணவு உண்ணாமல் உடல் எடை குறைந்ததைப் பார்த்திருக்கிறீர்களா?
- "என் உடம்பு இப்படி இருக்கே" என்று அவர்கள் புலம்பியதைச் கேட்டிருக்கிறீர்களா?



- இளம் பெண்களும், இளைஞர்களும் ஏன் அழகு சாதன கிரீமைப் பயன்படுத்துகின்றனர்?
- ஏன் நம் ஊர்களில் 10 ஆண்டுகளுக்கு முன்பு அழகு சாதனக் கடைகள் இல்லை? அழகுக்காக உடல் ஆரோக்கியத்தை விட்டு கொடுக்கலாமா?

**3.3 ஆளுமை சார்ந்த மதிப்பீடுகள்**

இது எல்லாம் சினிமாவுலதான் நடக்கும் நிஜ வாழ்க்கையில் இது சாத்தியப்படுமா? - இந்தக் கேள்வியை ஏதேனும் ஒரு தருணத்தில் நாம் ஒவ்வொருவரும் கடந்து வந்திருப்போம். இந்தக் கேள்வி, பெரும்பாலும் நிஜ வாழ்க்கையில் ஒரு செயலைச் செய்ய முடியுமா? செய்தால் அதன் விளைவுகள் எப்படியிருக்கும் எனப் பலவாறு யோசிக்கும் சந்தர்ப்பங்கள் வரும் எனலாம். எனவே நிஜ வாழ்க்கையில் சாத்தியப்படாத பல செயல்கள் சினிமா என்ற கற்பனை கதைகளில் சாத்தியப்படுகிறது. உதாரணமாக, ஒரு தனி நபர் தன்னைத் தாக்க வரும் பலரைத் தனி ஒருவனாக நின்று தாக்கி வெற்றி பெறுவது, ஒரே பாடல் காட்சியில் செல்வந்தர் ஆவது, என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

இவை யாவும் கற்பனைதான் என நன்கு உணர்ந்துதான் இவற்றை அணுகுகிறோம். ஆனால் இந்தக் கற்பனைகள் மனதின் உணர்வுகளைத் தட்டும் திறனோடு படைக்கப்படும்போது அதில் லயித்துப் போகிறோம். பல நேரங்களில் பகுத்தாராய்ந்து நிஜங்களைப் பிரித்துணர மறந்துவிடுகிறோம். ஊடகக் கதாபாத்திரங்களின் நிலையில் தம்மைப் பொருத்தி அந்த அனுபங்களில் இருந்து சமுதாயத்தையும் சுய அனுபவங்களையும் காண முற்படுகின்றோம். நாளடைவில் நம்மைச் சுற்றியுள்ள உலகைப் பற்றிய புரிதலை நிர்ணயிப்பதில் இவை முக்கிய பங்கு வகுக்கின்றது என்கின்றனர் ஆய்வாளர்கள். எனவே ஊடகங்கள் கட்டமைக்கும் எதார்த்தங்களைப் பற்றிய புரிதல்கள் அவசியமாகிறது.

இதில் கவனம் செலுத்த வேண்டியவற்றுள் முதன்மையானது சமூகம் மற்றும் தனிநபர் சார்ந்த புரிதல்களே. காரணம் சமுதாய நிகழ்வுகளை ஊடகங்கள் கட்டமைக்கும் விதம்

தனி நபரது சமுதாயப் பார்வையை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகுக்கிறது. இவ்வாறு கட்டமைக்கப்படும் சமுதாய எதார்த்தங்கள் காலப்போக்கில் சமூக நீரோடையில் கலந்து நடைமுறையாக மாறும் போது அதைப் பிரதிபலித்து ஊடகங்கள் இதுதான் எதார்த்தம் என அங்கீகரிக்கின்றன. உதாரணமாக, எங்கோ நடக்கும் ஒரு கொலை பரபரப்பு செய்தியாக பல்வேறு கோணங்களில் கொடுக்கப்படும் போது அதுவே ஒட்டுமொத்த சமுதாய எதார்த்தமாக பார்க்கப்படுகிறது. கல்லூரி காதல் கதைகளைத் திரைப்படங்களில் பார்த்து எத்தனை பெண்களின் பெற்றோர்கள் கல்லூரி வாசலைக் கூட எட்டிப்பார்க்க அனுமதிக்கவில்லை என்பதும் பதிவு செய்யப்படாத வேதனைகள்.

இன்றைய தலைமுறையினருக்கு ஊடகங்கள் இன்னும் பல தொழில்நுட்ப வளர்ச்சியுடன் தன்னிலை மறந்து லயித்து போதுமளவுக்குப் படைப்புகளைப் போட்டி போட்டுக் கொண்டு தருகின்றன. ஸ்பைடர் மேன், சூப்பர் மேன் போன்ற படங்களும் அதனை மிஞ்சும் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளிலும் பல தரப்பினரின் கவனத்தை ஈர்த்துள்ளது. இது மனித இனத்திலிருந்து மாறுபட்ட அதீத பலங்களையும் திறமைகளையும் உள்ளடக்கி சாகசங்கள் புரியும் கதாபாத்திரங்களை மையப்படுத்தி எடுக்கப்படுகின்றன. இவை ஒரு வித மாய உலகை நிஜ உலகம் போல் சித்தரிக்கின்றன. இது போன்ற சாகசங்கள் கொடூர கருவிகள், ஆயுதங்களின் பயன்பாட்டை முன்னிருத்தும் விதமாக கட்டமைக்கப்பட்டுள்ளது. இது அறிவியல் அறிவை மழுங்கடித்து ஒருவித மாய உலகத்தில் குழந்தைகளைத் தள்ளுகிறது. ஜன்னல் திரையைப் பிடித்து எகிறி குதித்து சாகசம் செய்ய முயற்சிக்கும் குழந்தைகளைப் பல வீடுகளில் காணமுடிகிறது. ஹீரோ போன்று வீரம் மிகுந்து, சாகசங்கள் செய்து, எல்லோருடைய பாராட்டையும் பெற வேண்டும் என்பது பல பிஞ்சு நெஞ்சங்களுக்குள் ஒளிர்ந்திருக்கும் ஆசைகள். இது தனிநபர் வழிபாட்டிற்கும் வலுசேர்க்கிறது.

சோட்டா பீம் நிகழ்ச்சியைப் பார்த்து 6 வயது குழந்தை கேட்டது "ஏம்மா கிருஸ்துமஸ் தாத்தா வானத்துல இருந்து வந்து நமக்கு பரிசுகள் கொடுப்பாரா?" இவ்வாறு கட்டமைக்கப்படும்



எதார்த்தங்களை எத்தனை குழந்தைகள் புரிந்து கொள்ளும்? கேட்கப்பட்ட அந்தக் கேள்வியால் அதை பற்றி விளக்கம் சொல்ல அக்குழந்தையின் பெற்றோருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் உணர்வுகளைத் தாக்கும் காதல் காட்சிகள், வன்முறை காட்சிகளைப் பார்த்து வளர் இளம் பருவத்தினர் இதே போல் கேள்வி கேட்பார்களா என்றால் அது சந்தேகம்தான். பல சம்பவங்களை விளக்க பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்படுகின்றதா என்பது கேள்வியே. இவர்களிடம் கேட்கப்படாத பல கேள்விகளை அரைகுறையாக நண்பர்களுடன் கலந்தாலோசித்து தடுமாறுகின்றனர், இன்றைய இளம் பருவத்தினர். முழங்கால் வரை சேலையைத் தூக்கி மடித்து சேற்றில் நாற்று நட்ட போது அதை ஆபாசமாக பார்த்தது இல்லை இந்தச் சமூகம். ஆனால் இன்றைய சூழலிலோ சற்றே விலகும் ஆடையில் கூட பாலியல் வக்கிரப் பார்வையைத் தூண்டுவதில் ஊடகங்களுக்குப் பெரும்பங்கு உண்டு என்பது நிதர்சனமான உண்மை.

ஊடகங்கள் கட்டமைக்கும் எதார்த்தங்களால் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. நம்மைச் சுற்றியுள்ள உலகம் பயமுறுத்துவதாக, பிரச்சனைகள் நிறைந்ததாக பாவிப்பது அல்லது நம்புவது, நிஜ வாழ்க்கையில் சாத்தியப்படாத இருந்திராத மனிதர்களை முன்மாதிரிகளாக, கடவுள்களாக நினைத்து போற்றுவது, கண்மூடித்தனமான தனிநபர் வழிபாட்டைப் பின்பற்றுவது, அநீதிகளை எதிர்க்க ஒரு கதாநாயகன் வருவான் என நம்புவது, ஏன்? எப்படி? எதற்கு? எனப் பகுத்தாராயாமல், அறிவியல் ஞானம் தொலைத்து மழுங்கிப் போவது, எந்த நேரமும் ஆபத்தான உலகம் என அஞ்சுவது துன்புறுத்தப்படுவோம் எனப் பயப்படுவது, மது அருந்துவதும், புகைப் பிடிப்பதும் இளையோர் வாழ்வின் முக்கிய பகுதி எனக் கருதுவது.

ஊடகங்கள் கட்டமைக்கும் உலகம் என்பது பெரும்பகுதி கற்பனையானதும், மிகைப்படுத்தப்பட்டதுமானது என்கின்றன ஆய்வுகள். இவை சமூகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கமானது எப்போதும் கணிக்கத்தக்க ஒன்றாக இருப்பதில்லை என்றாலும் அது வலிமை மிகுந்தது என்பது மறுக்கமுடியாத உண்மை.

எனவே நிஜ வாழ்கையின் எதார்த்த சூழ்நிலைகளை ஊடகங்கள் கட்டமைக்கும் எதார்த்தங்களோடு ஒப்பிட்டு ஆராயும் போது அவை பல்வேறு கோணங்களில் மாறுபடுவதைக் காணமுடிகிறது. இந்த எதார்த்தங்கள் சமூக நிகழ்வுகளின் பாதிப்பே என்றாலும் அவைகள் பெரும்பான்மையான நிகழ்வுகளைப் பிரதிபலிக்காது கட்டமைக்கப்படும் எதார்த்தங்களாகவே உள்ளன என்கின்றனர் ஆய்வாளர்கள். மேலை நாடுகளில் இவ்வாறான சித்தரிப்புகள் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. வன்முறை கலாச்சாராம் வளர இவையும் ஒரு காரணமாக அமைகிறது என்கின்றன ஆய்வுகள். எனவே ஊடகங்கள் நம்முன் சித்தரிக்கும் எதார்த்தங்களைப் பகுத்தாராய்வது அவசியம்.

## 3.4. வன்முறை சார்ந்த மதிப்பீடுகள்

உலக வரலாற்றைப் புரட்டிப் பார்த்தோமானால் வன்முறையால் அழிவே அதிகம் ஏற்பட்டுள்ளதை அறிவோம். வன்முறை என்பது மனித இனத்திற்கு எதிரான யுக்தியாக உள்ளதை நாம் உணர வேண்டும். ஆனால் ஊடகங்களில் வரும் வன்முறைக் காட்சிகள் வீரம் என்ற அடையாளத்தைத் தூக்கிப்பிடித்து வன்முறையை மேன்மைப்படுத்துகிறது என்கின்றன ஆய்வுகள். அதிக வன்முறைக் காட்சிகள் இன்றைய ஊடகங்களில் இன்றியமையாத ஒன்றாக மாறியுள்ளது. சக மனிதர்களை வன்முறைக்கு உட்படுத்துவதைக் கதைக்களத்தின் முக்கிய தேவையாக வைக்கின்றன நமது திரைப்படங்கள்.

மிக நல்லவராகவோ அல்லது மிகக் கெட்டவராகவோதான் முக்கிய கதாபாத்திரங்கள் கட்டமைக்கப்படுகின்றன. இதில், கெட்டவரைக் கதாநாயகர்கள் அழிக்கும் கதைக்களங்களே அதிகம். அதனால், வன்முறையை, அழிவை நியாயப்படுத்த நிஜ வாழ்வில் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு அதித வன்முறைகளைக் காட்சிப்படுத்துவது என்பது சாதாரணமாக உள்ளது. வில்லன்கள் ஏற்படுத்தும் அழிவைத் தடுக்க அதற்கு இணையாக கதாநாயகனும் பதில் தாக்குதல் நிகழ்த்த வேண்டி, வன்முறை வசீகரிக்கும் விதத்தில் காட்சிகள் அமைக்கப்படுகின்றன. இந்த வன்முறையை ரசிப்பவராக, அவசியம் தேவை என நினைப்பவராக, பார்வையாளர்கள் மாற்றப்படுகின்றனர்.



### வன்முறைக் கதைக்களங்கள்

கதாநாயகர்களுக்கு வில்லன் மீது கோபம் வர வேண்டும். அந்தக் கோபம் நியாயமானதாக இருக்க வேண்டும். அந்தக் கோபத்தின் விளைவாக ஆக்ரோஷத்துடன் சண்டைக் காட்சிகள் அமைக்கப்பட வேண்டும். இதனைச் சார்ந்தே தாய்மார்கள் கொலை செய்யப்படுவதும், தங்கைகள் பலாத்காரம் செய்யப்படுவதும், காதலிகள் கடத்தப்படுவதுமான ஏராளமான கதைக்களங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பொழுது போக்கு ஊடக சித்தரிப்புகளில் பெண்கள் வன்முறைக்குள்ளாவதும் அதனால் கோபமுற்று ஆண்கள் பழிவாங்குபவர்களாவும் சித்தரிக்கப்படும் கதைக் களங்களை கவனிக்க வேண்டும். இவ்வாறு பெண்கள் மீதான வன்முறையை ஹீரோவின் ஆண்மையை நிரூபிக்கும் காரணிகளாக சித்தரித்த திரைப்படங்களும் தொலைக்காட்சி தொடர்களும் ஏராளம். இதனால் பெண்கள் மீதான வன்முறை என்பது ஒரு கதைக் கருவியாக பயன்பட்டுக் கொண்டிருக்கும் போக்கு வன்முறை கலாச்சாரத்தை நியாயப்படுத்தக்கூடிய சமூகத்தில் சகஜ நிகழ்வாக காணப்படக்கூடிய அபாயம் ஏற்படுகிறது.

பெண்களைப் பாதிக்கப்படுபவர்களாகச் சித்தரித்து ஆண்களைப் பாதிப்பை ஏற்படுத்துபவர்களாகவோ, காப்பாற்றுபவர்களாகவோ அல்லது பழிவாங்குபவர் களாகவோ சித்தரிக்கிறார்கள். இந்தப் போக்கு பெண்களை வலுவற்றவர்களாகவும், ஆண்களை ஆதிக்கத்தின் உருவாகவும் முன்வைக்கிறது. மனைவியை அடிப்பது குற்றமில்லை, அடிக்கிற கைதான் அணைக்கும், தவறு செய்யும் பெண்களைத் துன்புறுத்துவது குற்றமில்லை, காதலிக்க பிடிக்கவில்லையென்றாலும் கட்டாயப்படுத்தி அன்பைப் புரியவைப்பது பயன் தரும், பலாத்காரம் செய்தவர்களையே திருமணம் செய்வது என வன்முறைகள் நியாயப்படுத்தப்படுகின்றன. இவை பெண்கள் மீதான வன்முறைகளுக்குக் காரணங்களைத் தேடத்தான் முனைகிறதே தவிர அதைச் சமூதாயச் சீர்கேடாக பார்ப்பது இல்லை. இது ஆண் பெண் பற்றிய பொதுப் புத்தியைப் பொது சூழலில்

நிர்ணயிக்கும் காரணிகளாக அமையும் போது அது பெண்களை இரண்டாம் நிலையிலேயே பார்க்கும் அபாயம் ஏற்படுகிறது. இதுவே வாழ்விலும் பிரச்சனைகளுக்கு வன்முறையே தீர்வாக இருக்கும் என்ற நிலைப்பாட்டை அதிகரிக்க செய்வதில் பெரும்பங்கு வகிக்கிறது. வன்முறை என்பது அத்தியாவாசியமானதாக, ஆண்மைத்தனமாக, காலத்தின் அவசியமாக முன்வைக்கப்படுவது சமூகத்தை அழிவை நோக்கி இட்டு செல்லும் என்பதில் ஐயம் இல்லை.

### 3.5. ஆண், பெண் சார்ந்த மதிப்பீடுகள்

சமுதாயத்தில் ஆண், பெண் எப்படி இருக்க வேண்டும் என்று மாணாக்கரிடம் நடந்த விவாதத்தில் பெண் என்றால் கையெடுத்து கும்பிடும்படி இருக்க வேண்டும், பெண் அதிகம் ஆசைப்படக் கூடாது, ஆம்பிளை என்றால் வீரம் வேணும், ஆண் பிள்ளை அழக்கூடாது எனவும் முண்டியடித்து வந்தன பலரது பதில்கள். பாகுபாட்டை விதைப்பதில் ஊடகங்களின் தாக்கத்தையும் பங்கையும் இது உணர்த்தியது. கோபம், ஆசை, சிரிப்பு, அழுகை, மனித இனத்திற்குப் பொதுவான உணர்வுகளாக குணங்களாக இருக்கும் போது, ஆண் என்றால் இப்படி இருக்க வேண்டும் பெண் என்றால் இப்படி இருக்க வேண்டும் என சினிமா வசனங்களைத் துணைக்கு அழைத்த இவர்களது போக்கு ஊடகங்கள் சித்தரிக்கும் ஆண், பெண் பாகுபாட்டை ஆராயத் தூண்டியது. இவ்வாறு மாணாக்கரின் நேரத்தைத் தனதாக்கும் ஊடகங்கள் இவர்கள் முன் நிறுத்தும் பெண்கள் பற்றிய புரிதல்களை இப்போது ஆராய்வோம்.

### 3.6. பாலினப் பாகுபாட்டை முன்னிறுத்தும் படைப்புகள்

பெண்களைப் பற்றிய சித்தரிப்புகள் குறிப்பாக பொழுது போக்கு ஊடகங்களில் பல வகைகளில் உள்ளதைப் பார்க்கலாம். இதில் ஊடகங்கள் பாலினப் பாகுபாட்டு கூறுகளை இன்றைக்கும் ஆழமாய் பிரதிபலித்துக் கொண்டுதான் இருக்கின்றன. அழகு, தியாகம், பொறுமை, கற்பு போன்ற இலக்கணங்களுக்கு உட்பட்டவளாக, பாதுகாக்கப்பட வேண்டியவளாக, திருத்தப்பட வேண்டியவளாக, வழிகாட்டப்பட வேண்டியவளாக, எனச் சுயம் என்ற ஒன்று இல்லாதவளாகவே பெரும்பான்மையான



சித்தரிப்புகள் ஒரே மாதிரியான வடிவங்களில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. வீடு, சமையல், குழந்தைகள், குடும்பம், காதல் சார்ந்து அறிவு ஆற்றல் சாராத சித்தரிப்புகளே அதிகம்.

இன்றைக்குப் பெண்ணின் உடல் போகப்பொருளாக வணிக லாப நோக்குடன் அணுகப்படுகிறது. படித்து திமிர் பிடித்தவள், பாடல், கவர்ச்சி, காதல் காட்சிகளுக்கு மட்டுமேயென, கடிவாளம் போட்டக் குதிரையாய் எவ்வளவு மோசமான நபராக இருந்தாலும் கதாநாயகனையே சுற்றிச் சுற்றி வருபவள் எனப் பல அவதாரங்களில் தொடர்ந்து கொண்டுள்ளது. இதில் இன்றைய நவயுகத்தின் பெண்கள் அனைத்தையும் தாங்கிப் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் சுமைதாங்கிகளாக வீட்டையும், வேலையையும், எதிரிகளையும் ஒரே நேரத்தில் எதிர் கொள்பவளாக ஒருபுறம். மறுபுறம் வில்லத்தனம், விஷமத்தனம் மிகுந்தவளாக தீமையின் உச்ச நிலை சித்தரிப்புகள் நெடுந்தொடர்களாக வலம் வருகின்றன. மேலும் பெண்கள் குடும்பச் சூழல் தவிர வெளியுலக அறிவு சார்ந்த சூழ்நிலைகளை எதிர்கொள்வதில் சாமர்த்தியம் அற்றவர்களாக அப்படியே சமாளித்தாலும் முடிவு தவறாக சித்தரித்து ஏளனப்படுத்தப்படுபவர்களாகவே கட்டமைக்கப் படுகின்றனர். எதார்த்தங்களை மறைக்கும் செயற்கையான முன்மாதிரிகளை இவை நம்முன் நிறுத்தும் விதமாகவே இதுவரை அமைந்துள்ளது.

**நமது சிந்தனைக்கு**

- அனைத்து வகையான பொழுது போக்கு ஊடகங்களும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை அதிகளவில் பின்வருமாறு சித்தரிக்கின்றன.
- உடல் சார் வன்முறைகள்-அடித்தல், உதைத்தல், முடியை இழுத்தல், கொலை செய்தல்.
- வார்த்தை வழி வன்முறைகள் - திட்டுதல், தப்பான வார்த்தைகளால் திட்டுதல், அவமதித்தல்.
- உள ரீதியான வன்முறைகள்-அச்சுறுத்தல், மிரட்டல்
- பாலியல் வன்முறைகள்-பாலியல் வன்முறை,, மானபங்கப்படுத்துதல், கொடுமைகள், கிள்ளுதல்

- பொருளாதார வன்முறைகள்-அடிப்படைத் தேவைகளை மறுத்தல், உதாரணத்திற்கு உணவு, உடை
- திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மேற்கண்ட வன்முறைகள் கதாநாயகன் என்ற பெயரில் நடப்பதை ஏற்றுக் கொள்ள முடியாதது.
- சட்ட ரீதியாக மட்டுமே எந்த ஒரு நபரையும் தண்டிக்க முடியும். சட்டத்திற்குப் புறம்பாக எந்தவொரு நபரையும் அடித்தல், சித்ரவதை செய்தல், அவமரியாதை செய்தல் போன்றவைகளை ஏற்றுக் கொள்ள முடியாதது.
- எந்தப் பிரச்சனைக்கும் வன்முறை தீர்வு அல்ல. கவுன்சிலிங், மத்தியஸ்தம் மற்றும் பிற சட்ட ரீதியான நடவடிக்கைகள் பற்றி மட்டும் எடுக்க வேண்டும்.

## கேள்விகள்

### பகுதி - அ

**I. கீழ்க்கண்ட கேள்விகளுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. இருவர் உரையாடும் போது ................. பொதுவாக இருக்க வேண்டும்.

(அ) மதம் (ஆ) இனம் (இ) மொழி (ஈ) ஜாதி

2. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு ..............

(அ) 1436 (ஆ) 1346 (இ) 1046 (ஈ) 1036

3. சமுதாய நிகழ்வுகளை ஊடகங்கள் கட்டமைக்கும் விதம் தனி நபரது ......... நிர்ணயிக்கிறது .

(அ) சமுதாயப் பார்வையை (ஆ) அரசியல் பார்வையை
(இ) வாழ்வியல் கோட்பாட்டை (ஈ) எதுவுமில்லை

4.ஊடகங்கள் கட்டமைக்கும் உலகம் என்பது பெரும் பகுதி ....... என்கின்றன ஆய்வுகள்.

(அ) கற்பனையானது (ஆ) மிகைப்படுத்தப்பட்டது
(இ) யதார்த்தமானது (ஈ) (அ) மற்றும் (ஆ )



5. ஊடகங்கள் போற்றும் அழகிலக்கணங்களை எட்ட முடியாத போது, குழந்தைகள் ............. ..... அடைகின்றனர்.

(அ) மன வலிமை (ஆ) மனச்சோர்வு
(இ) தாழ்வு மனப்பான்மை (ஈ)(ஆ) மற்றும் (இ)

### பகுதி - ஆ

**II. பின்வரும் கேள்விகளுக்குச் சுருக்கமாக பதில் தருக**

1. மக்கள் தொடர்பு ஊடகங்களின் பணிகள் எவையேனும் இரண்டு பற்றி குறிப்பு வரைக.
2. ஊடகக் கல்வியின் அவசியம் பற்றி எழுதுக.
3. மக்கள் தொடர்பு ஊடகங்கள் - சிறு குறிப்பு வரைக.
4. மக்கள் தொடர்பியல் என்றால் என்ன?
5. மாணவர்கள் மற்றும் குழந்தைகளின் ஊடகப் பயன்பாடு பற்றிச் சுருக்கமாக எழுது.

### பகுதி -இ

**III. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விரிவான விடை எழுதுக.**

1. மக்கள் தொடர்பு ஊடகங்களும், தினசரி வாழ்வியலும்.
2. ஊடகங்களின் தன்மைகள் பற்றி விளக்கமாக எழுதுக
3. ஊடகங்கள் ஏற்படுத்தும் சமூக, கலாச்சார. அரசியல் பாதிப்புகள் பற்றி எழுதவும்.
4. ஊடகங்கள் ஏற்படுத்தும் வன்முறை சார்ந்த மதிப்பீடுகள் குறித்து விரிவான பதில் தரவும்.
5. ஊடகங்கள் சித்தரிக்கும் அழகு சார்ந்த மதிப்பீடுகள் குறித்து எழுதவும்.

# UNIT - V
## நற்பண்புகளும், நெறிமுறைகளும் (Values and Ethics)

அரிச்சுவடியை விட பண்பின் உருவாக்கத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்றார் தேசப்பிதா மகாத்மா காந்தி. காந்தி குறிப்பிடும் பண்பு என்பது நற்குணங்கள் அல்லது நற்பண்புகள் என்று கூறலாம். இவைகள் நம் வாழ்க்கையை நெறிப்படுத்துவது மட்டுமல்லாது சமூகத்தில் நேர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் அம்சங்களாக இருப்பனவாகும்.

நம்மிடம் இருக்க வேண்டிய நற்பண்புகளையும், மதிப்புணர்வுகளையும் பலவாறு வகைப்படுத்தலாம். இவற்றில் தனிமனித நற்பண்புகள், குடும்ப மற்றும் சமுதாயப் பண்புகள் அல்லது மதிப்புணர்வுகள், நன்னெறிகள், ஆன்மீகப் பண்புகள், தொழில் சார்ந்த நெறிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒரு மனிதன் தனியாகவும், சமுதாயத்தின் ஒரு அங்கமாகவும் இருக்கின்ற காரணத்தால் தனி மனித நற்பண்புகள் மற்றும் சமுதாயப் பண்புகளில் அனைத்து நெறிமுறைகளையும் அடக்கிவிட முடியும். ஒரு சராசரி மனிதன் அன்றாட வாழ்வில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் நேர்மறையாக இருக்கும் போது அவனுடைய சமூகப் பண்புகள் மேலோங்கி நிற்கும். இவ்விரண்டும் சரியாக இருக்கும்போது அவன் பல்வேறு தளங்களில், நிலைகளில் நெறிப்பட்டு வாழ்ந்து சிறப்படைவான்.

தனி மனித நிலை, குடும்ப நிலை, உறவினர் நிலை, சமூக உறுப்பினர் நிலை, குடிமக்கள் நிலை என்னும் தளங்களில் மனிதர்கள் பாதுகாக்க வேண்டிய பண்புகள், ஆற்ற வேண்டிய பணிகள் எனப் பன்முகக் கூறுகளை ஒழுங்குற அமைத்து ஒரு முழுமையான வாழ்வியல் கருத்தாக்கத்தைத் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இச்சமூகத்திற்குக் கொடுத்துள்ளார்.



## I. தனிமனித நற்பண்புகள் (Personal Values)

தனிமனித நற்பண்புகள் என்பது ஒரு மனிதன் மனமாசின்றி தூய நேர்மறை நெறிகளை வாழ்வியல் அறமாகக் கொண்டு பிறர் ஏற்கக்கூடிய குணங்களை ஒருவர் பெற்றிருப்பதாகும். எடுத்துக்காட்டாக சில பண்புகளை அடையாளப்படுத்தலாம். அன்பு, அடக்கம், நேர்மை, இரக்கம், எளிமை, ஒழுக்கமுடைமை ஆகியவை முக்கியமானவைகளாகும். இவற்றுடன் தன்னம்பிக்கை, துணிவு, பொறுப்புணர்வு, தற்சார்பு, பொறுமை, விடா முயற்சி, ஊக்கம், சுயகட்டுப்பாடு, குறிக்கோள் என எண்ணற்ற ஏனைய நற்குணங்களும், பண்புகளும் மென்திறமைகளும் இணைந்துள்ளன. தனி மனிதன் பெற வேண்டிய அல்லது கொண்டிருக்கும் இப்பண்புகள்தான் அவனது ஆளுமைத்திறனை உயர்த்திக் காட்டும். அவன் சிறந்த மனிதனாக அறியப்படுவான்.

திருவள்ளுவர் இளைஞர்களுக்குத் தேவையான அறம் சார்ந்த வாழ்வியல் நெறிகளைச் சுட்டிக்காட்டிச்சென்றுள்ளார். அவர் காட்டும் வாழ்வியல் நெறிகளைக் கீழ்க்காணும் வகையில் நாம் அறிந்து கொள்வோம்.

1. அன்புடைமை
2. பகுத்தறிதல்
3. வாய்மை
4. குற்றங்கடிதல்
5. வினைத்தூய்மை
6. கள்ளுண்ணாமை
7. வெகுளாமை

### 1. அன்புடைமை

அன்பு என்பது வாழும் உயிர்களுக்குப் பொதுவான ஒன்றாகும். இது இயற்கையான உணர்வுகளில் ஒன்று. அதனால் தான் மனிதப் பிறவி உயர்ந்தது என்று ஆன்றோரால் போற்றப் பெற்றது. அன்பு வழி வாழ்க்கை வேண்டும். அவ்வழியே வளரும் வாழ்க்கை பண்பும் பயனும் உடையதாகும்.

அன்பு உடையவர் பற்றியும், அன்பு இல்லாதவர் பற்றியும் வள்ளுவர் குறிப்பிடும் போது,

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு - - - (குறள். 72)

என்று கூறுகின்றார்.

அதாவது அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர் எனவும், அன்பு உடையார் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர் எனவும் குறிப்பிடுகிறார். மற்றொரு குறளில் அன்பின் தன்மையை இவ்வாறு குறிப்பிடுகிறார்: உடலில் உயிர்நிலை பெறுவது அன்பின் வழிப்பட்டதேயாகும். ஒருவருக்கு உயிர் இருக்கிறது என்பதற்கு அடையாளமே அவ்வன்புதான். அன்பு இல்லாதவருடைய உடம்பு எலும்பும், தோலும் போர்த்தப்பட்ட உடல் ஆகும். எனவே அன்பைப் பேண வேண்டும் என்பது திருவள்ளுவரின் சீரிய சிந்தனையாகும்.

## 2. பகுத்தறிதல்

அறிவுச்சிந்தனை இன்று பல நிலைகளில் மேம்பாடு அடைந்துள்ளது. பல துறைகளில் நாம் முன்னேறி உள்ளோம். திருவள்ளுவர் இந்த அறிவுச் செல்வத்தைக் கண்டடையும் வழிமுறைகளையும் கூறியுள்ளார்.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு - - - (குறள். 423)

என்று கூறுகிறார்.

எச்சிந்தனைகளானாலும் அச்சிந்தனைகளின் உண்மைப் பொருளை ஆய்ந்து அறிவதுதான் அறிவு. அது மட்டுமல்ல, அறிவாராய்ச்சிக்கு உட்படாதது என்று எதற்கும் அவர் விதிவிலக்களிக்கவில்லை,

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்பொருள் காண்பது அறிவு" (குறள். 355 )

என்பது வள்ளுவர் வாய்மொழியாகும்.



எனினும், மனத்தைச் சென்ற இடத்தில் விடாமல் தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானதில் செல்லவிடுவதே அறிவாகும். கற்றல் மட்டுமே அறிவு அல்ல. நன்மை, தீமைகளையும் பகுத்தறிவதே அறிவு என்று குறிப்பிடுகிறார் .

## 3.வாய்மை

"வாய்மை" இன்று மறைந்து போன ஒன்றாகக் காணப்படுகிறது. வாய்மை மனிதனுக்குத் தேவையான பண்பாக இருந்தாலும் கூட அது பல சமயங்களில் பின்பற்றப்படுவதில்லை. வாய்மையின் தன்மையைத் திருவள்ளுவர்,"வாய்மை" என்பது பிறருக்கு எந்தவிதத் தீங்கும் செய்யாத சொற்களைச் சொல்வதுதான் என்கிறார்.

பொய்யான சொற்களால் நன்மை விளையாது பொய்யான சொற்களும் பிறருக்குக் குற்றம் தீர்ந்த நன்மையை விளைவிக்குமானால் வாய்மை என்று கருதத்தக்க இடத்தைப் பெறுவனவாம் என்று கூறுகிறார்.

இந்நிலையினைத்தான் வள்ளலார்,

உள்ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவோர்
உறவு கலவாமை வேண்டும்

என்று கூறுகின்றார்.

எனவே வாய்மையை மனித வாழ்வினில் கடைப்பிடித்தால் அது பலவிதமான நன்மையை உண்டாக்க வல்லதாகும்.

## 4. குற்றங்கடிதல்

ஒருவன் எவ்வளவு உயர்ந்த நிலையில் நின்றாலும், தன் உயர்வைத் தானே வியந்து தற்பெருமை கொள்ளக் கூடாது. அது அறிவுக் கண்ணை மறைக்கக் கூடியது. அவ்வாறு மறைத்தால் உண்மை விளங்காமல் போகும். பல தவறுகள் செய்து அறிவு தேடிக் கொள்ள நேரும்.

செய்த குற்றம் சிறிதே ஆனாலும், அதைப் பெரிய குற்றமாகக் கருதி மனம் வருந்துவது சான்றோர் பண்பு. குற்றம் வராமல் காக்கும் ஆற்றல் வளரும். குற்றம் வராமல் காத்துக் கொண்டால், வாழ்க்கைக்குத் தீங்கு நேராது.

## 5. வினைத்தூய்மை

செய்கின்ற அல்லது செய்யப் போகின்ற செயல் புகழையும் நன்மையையும் தருமா என்று ஆராய்ந்து செய்ய வேண்டும். எவ்வளவு துன்பப்படுவதாக இருந்தாலும் தெளிந்த அறிவுடையவர்கள் இழிவான செயல்களைச் செய்ய மாட்டார்கள் என்பது வள்ளுவரின் வாக்கு.

பெற்ற தாயின் பசியைக் கண்டு வருந்த நேர்ந்தாலும், சான்றோர் பழிப்பதற்குக் காரணமான இழிவுற்ற செயல்களை ஒருவன் செய்யக் கூடாது என்கிறார்.

## 6. கள்ளுண்ணாமை

இன்றைய காலகட்டத்தில் கள் என்ற போதைப் பொருள் நவநாகரீகமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. வள்ளுவர் கள்ளுண்பவர்களின் நிலையைக் கீழ்க்கண்ட வகைகளில் குறிப்பிடுகின்றார்.

மதிப்பை இழந்து விடுவார்கள் பகைவரும் அஞ்ச மாட்டார்கள் சான்றோரின் உறவும் போய்விடும் மற்றவர்கள் முன்பு குற்றவாளியாக நிற்க நேரிடும்.

மேலும் அவர், பெற்ற தாயின் முன்பாக மகன் கள்ளுண்டு மயங்குதல் துன்பம் தருவதாகும். அதனால் அந்த மகனைத் தாய் வெறுத்து ஒதுக்குவாள். அப்படியானால் தாயே வெறுத்து ஒதுக்கும்போது மற்ற சான்றோர்கள் அவனை எப்படி சகித்துக் கொள்வார்கள் எனக் கேட்கிறார். ஆகவே கள்ளுண்ணாமை நன்று என்கிறார் வள்ளுவர்.

## 7. வெகுளாமை

வலியார் மேல்சினம் பிறப்பது உண்டு ஆனால் அப்போது அது வலியாரை ஒன்றும் செய்யாது மெலியார் மேல்சினம் பிறந்தால் அது அவர்களை வருத்தும்.

சினம் செல்லாத வலியார் இடத்தில் மட்டும் சினம் கொள்ளாமல் காத்துக் கொள்வது பொருளற்றது. அங்கே சினம் காப்பதும் காவாமையும் ஒன்றுதான். சினம் பலிக்குமிடத்தில் காத்துக் கொள்வோனே சினம் காப்பவன். இது அருளுடையார் செயல் என்பார் திருவள்ளுவர்.



சினத்தை விடப் பெரிய பகை வேறு இல்லை. படையிடமிருந்து ஒருவன் தன்னைத் தான் காத்துக் கொள்ள விரும்பினால் சினம் வராமல் மனத்தைக் காத்துக் கொள்ள வேண்டும் காக்கத் தவறினால் சினம் தன்னையே கொன்றுவிடும். ஆகவேதான் சினம் யாரிடம் உள்ளதோ அவர்களையே அழித்துவிடும் என்பது வள்ளுவர் வாக்கு. சினங்கொள்ளாமல் வாழ வழி வகுப்போம்.

எனவே இன்றைய இளைஞர்கள் திருவள்ளுவரின் வாழ்வியல் நெறிகளைத் தம்முடைய வாழ்வில் பின்பற்றினால் அவர்கள் வாழ்வு மேன்மை அடையும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

கி.பி.17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிற்றிலக்கிய வேந்தர் குமரகுருபரர்,தனி மனித ஆளுமைத் திறன்களை "நீதிநெறி விளக்கம்" என்ற நூலில் எடுத்துரைக்கிறார். தனி மனிதனுக்குரிய நீதிகளை எடுத்துரைத்து அவர்களின் ஆளுமையை வளர்த்தெடுக்க இந்நூல் முயல்கிறது.

## 1. கல்வி

தனி மனித ஆளுமை வளர்ச்சியில் மிகவும் இன்றியமையாத பங்கெடுப்பது கல்வியாகும். இதனை நன்கு உணர்ந்த குமரகுருபரர் கல்வியின் சிறப்பு, பயன்,கல்லாமையின் இழிவு, கல்வியைக் காசாக்குவோர் நிலை ஆகியன பற்றி விரிவாகப் பேசுகிறார். கல்வியைச் "சிற்றுயிர்க்கு உற்ற துணை" என்றும், கற்புடைய மனைவி, செல்வப் புதல்வன் என்றும் இவர் குறிப்பிடுகிறார்.

ஒருவர் தம்முடைய கருத்தைப் பிறர்க்கு அஞ்சாது எடுத்துரைக்க வேண்டும். அதுபோல தம்மைவிட அறிவில் மிக்கார் கூடியுள்ள அவையில் ஒன்றைப் பற்றி நன்கு அறிந்து கொள்ளாமல் அதனைப் பற்றிப் பேசுவதற்கு அஞ்ச வேண்டும். அதாவது அஞ்சத் தகுவனவற்றிற்கு அஞ்சுதலும் அஞ்சத்தகாதனவற்றிற்கு அஞ்சாதும் வாழ்தல் வேண்டும். இத்திறம் நல்ல மனிதர்களுக்குரிய ஆளுமைப் பண்பாகும். கல்வி ஒரு சமுதாயத்தை உயர்ந்ததாக மாற்றும் ஆற்றல் வாய்ந்த கருவி என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

**2.செருக்கின்மை**

ஒருவர் அனைத்திலும் தாமே மேலானவர் என்று செருக்குக் கொள்ளுதல் அழிவிற்கு வித்தாகும். எனவே வாழப் பிறந்த மனிதர்கள் செருக்கற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

நம்மைவிட செல்வத்தில் குறைந்தாரை நோக்கி,"நாம் அவர்களை விட மிகுந்த செல்வம் உடையோம்" என்று மன நிறைவு கொள்ள வேண்டும். அதேவேளையில், நம்மைவிட கல்வியில் மிக்காரைப் பார்த்து நாம் கற்க வேண்டியவை ஏராளமாக உள்ளன என்று எண்ணுதல் வேண்டும். இதனை விடுத்துத் தாமே செல்வத்திலும்,கல்வியிலும் உயர்ந்தவர்கள் என்று எண்ணுதல் செருக்காகும். செருக்குடையவர்கள் வாழ்வு சருக்கி விடும் என்பது குமரகுருபரரின் கருத்து.

**3.முயற்சி**

முயன்றால் முடியாதது எதுவும் இல்லை முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் விதியை மதியால் வெல்லலாம் என்பதெல்லாம் அனைவரும் அறிந்த முதுமொழிகளாகும். வாழ்க்கையில் ஒருவர் பெறும் உயர்வுகளுக்கு அவர்தம் முயற்சிகளே காரணமாகின்றன.

தாம் எண்ணியதை எண்ணியாங்கு எய்த நினைக்கும் ஒருவர் தம்முடைய உடல் துன்பம், உள்ளப் பசி, தூக்கம் இவற்றை எல்லாம் பொருட்படுத்தக் கூடாது என்று குமரகுருபரர் கருதுகிறார். இதனை,

"மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்
துஞ்சார்........................................ கருமமே கண்ணாயினார்"

என்று அவர் குறிப்பிடுகிறார்.

**4.தெரிந்து முயலுதல்**

ஒன்றைச் செய்ய முயல்வதற்கு முன்பு அச்செயலைச் செய்வதற்குரிய காலம், இடம், காரணம், பயன் ஆகியவற்றை ஆராய்ந்து ஈடுபடுதல் இன்றியமையாததாகும். அப்பொழுதுதான் எடுத்த காரியத்தில் வெற்றி பெற இயலும் என்று நீதிநெறி விளக்கம் அறிவுறுத்துகிறது. எனவே, தெரிந்து முயலுகின்ற ஆளுமைத்திறன் பெற்றவரால்தான் வாழ்க்கையில் வெற்றிபெற முடியும் என்பது புலனாகிறது.



**5.வஞ்சகம் புரியாமை**

மனிதர்கள் ஒருவரை ஒருவர் ஏமாற்றியும் வஞ்சித்தும் வாழத்தலைப்படுகின்றனர். இது மிகவும் கொடிய செயலாகும். இங்ஙனம் வஞ்சித்தொழுகுவாரை,"மதியற்றவர்கள்" என்று குமரகுருபரர் சாடுகிறார். பிறரை வஞ்சித்து வாழ்கின்றவர்களுக்கு அப்பொழுது வேண்டுமானால் ஒருவரை வெற்றி பெற்று விட்டோம் என்ற உணர்வு மேலிடலாம். இம்மகிழ்ச்சி தற்காலிகமானதே ஆகும். ஒருவர் பிறரை ஏமாற்றுவதையும் வஞ்சிப்பதையும் கடவுள் பார்த்துக்கொண்டே இருக்கிறார். எனவே அதற்கான தண்டனை கிடைக்கப்பெற்றே தீரும் என்பதை, குமரகுருபரர் அறிவுறுத்துகிறார். ஆதலால் நல்ல மனிதர்களாக உலகை வலம் வர விரும்புகின்ற நல்லவர்கள் வஞ்சக எண்ணமில்லா ஆளுமைப்பண்பு நிறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

**6.சிற்றின்பம் நாடாமை**

பூவோடு சேர்ந்த நாறும் மணக்கும் என்பது பழமொழி. இதன் பொருள் நல்லவர்களோடு சேர்ந்த தீயவர்களும் நல்லவர்களாவர் என்பதாகும். பன்றியோடு சேர்ந்த கன்றும் மலம் தின்னும் என்பது மற்றொரு பழமொழி. இதன்பொருள் தீயவர்களோடு சேர்ந்த நல்லவர்களும் தீயவர்களாகி விடுவர் என்பதாகும்.

உலகில் தீயவர்களோடு சேர்ந்த நல்லவர்கள் கெடுவதைத்தான் மிகுதியாகப் பார்க்கிறோம். நல்லவர்களோடு சேர்ந்த தீயவர்கள் திருந்துதல் என்பது அரிதான ஒன்றாகவே இருக்கிறது. இதனைக் குமரகுருபரரும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.பேரின்பத்தை விரும்புகின்றவர் சிற்றின்பத்தை விரும்பார் சிற்றின்பத்தை விரும்பினார் மற்றின்பத்தை எல்லாம் கைவிடுவர். எனவே சிற்றின்பத்தை விரும்பாது வாழ்தல் என்பது தனி மனித ஆளுமைத் திறனாகக் கொள்ளலாம். இதனைத்தான் வள்ளுவரும் சிற்றினஞ்சேராமை என்று வலியுறுத்துகிறார்.

**7.நயத்தகு நாகரிகம்**

ஒருவன் தன்னால் முடிந்த உதவிகளைப் பிறருக்குச் செய்தல் வேண்டும். செய்வதைச் சொல்ல வேண்டும். சொல்வதைச் செய்தல் வேண்டும். ஆனால் சிலர் தம்மால் செய்ய முடியாதது

எதுவுமே இல்லை என்று வாய்ச்சவடால் பேசுவர். செய்தற்கு அரிதினும் அரிதான காரியங்களைத் தான் செய்து முடிப்பேன் என்று கூறிவிட்டு அதனைச் செயலில் காட்டாமல் பேச்சளவில் மட்டுமே நிற்பர். இத்தகையோரை நாகரிகமற்றவர்கள் என்று நாகரிகமாகச் சாடுகிறார் குமரகுருபரர். எனவே, மனிதர்கள் முடிந்த உதவிகளைப் பிறருக்குச் செய்து வாழும் நயத்தகு நாகரிகம் மிக்கவர்களாக இருத்தல் வேண்டும்.

8.பிறன்மனை நயவாமை

ஆண்மை என்றால் வீரம் என்று பொருள். பேராண்மை என்றால் பெரிய வீரம் என்று பொருளாகும். பிறன் மனை நோக்காத் தன்மையே பேராண்மை என்பது வள்ளுவம்.

இதனை நீதிநெறி விளக்கமும் வலியுறுத்துகிறது. பிறன்மனை விரும்பிச் செல்வான் உடலும் உள்ளமும் நடுக்கமுற்றுத் தீரா நோயுறுவான் என்று நீதிநெறி விளக்கம் எச்சரிக்கை செய்கிறது.

9. ஈகையும், இன்சொல்லும்

ஒருவர் தம்மிடமிருக்கும் பொருளை ஏழை எளிய மக்களுக்கு அவர்களின் தேவையறிந்து வழங்குதல் வேண்டும். அங்ஙனம் வழங்குதல் மிகுந்த இன்பத்தைத் தரவல்லது. பிறருக்கு வேண்டுவனவற்றை வழங்காமல் தம்மிடம் உள்ள பொருட்செல்வத்தை இழப்பவர்கள் அதனால் ஏற்படும் இன்பத்தை அறியாதவர்களாவர். இதனைக் குமரகுருபரர்,ஈயாக் குணம் கொண்ட செல்வந்தரின் செல்வத்தைக் காட்டிலும் ஈயும் குணம் கொண்டவரின் வறுமை மேலானது என்று ஈகையின் பெருமையை எடுத்துரைக்கிறார்.

பிறருக்குப் பொருள் கொடுத்து உதவும்பொழுது இனிய சொற்களைக் கூறி அளித்திடல் வேண்டும். அதாவது முகமலர்ச்சியோடு வழங்குதல் வேண்டும். ஈகை எத்துணை முக்கியத்துவம் வாய்ந்ததோ அத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது இன்சொல் கூறுதலும் ஆகும். ஒருவேளை ஈகைசெய்ய முடியாமல் போனால் இனிய சொற்களையாவது கூறுதல் வேண்டும். எனவே,ஈகையும்,இன்சொல் கூறலும் தனி மனித ஆளுமை வளர்ச்சியில் இன்றியமையா இடத்தைப் பெறுகின்றன.



குமரகுருபரர் நீதிநெறி விளக்கத்தில் தனிமனித ஆளுமைப் பண்புகளை மிகுதியும் எடுத்துரைத்துள்ளமையைக் காண முடிகிறது.

## II. குடும்பப்பண்புகள் (Family Values)

உலகப் பொது நெறிகளைத் தனிமனித நெறிகள், சமூக வாழ்வியல் நெறிகள் என இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். இவை ஒன்றோடொன்று இணைந்தவை என்றாலும், தனித்தனியே பகுந்தாய்ந்து அறிந்து புரியப்படுகின்றன. இவற்றில் குடும்பப் பண்புகள் அல்லது குடும்ப வாழ்வில் ஒரு தனிமனிதன் ஒழுக வேண்டிய பண்புகள் என்பவை சமூக வாழ்வியல் நெறிகளில் அடக்கம். நம் இந்தியச் சமூகத்தில் குறிப்பாக தமிழ்ச் சமுதாயத்தில் குடும்பம் என்பது பன்னெடுங்காலத்திற்கு முன்பிருந்தே போற்றிப் பாதுகாக்கப்பட்டுவரும் மிகச்சிறந்த ஓர் அமைப்பு. இந்த அமைப்பிற்காகவே தமிழ்ச்சமூகம் மேலை நாட்டாரால் பாராட்டப்படுகிறது. நாம் கட்டிக் காக்கும் இவ்வமைப்புதான் நம் தமிழ்ச் சமூக மேன்மைக்கு அடிப்படை. சமூக நெறிமுறைகளையும், தனிமனித ஒழுக்கங்களையும் வள்ளுவமும், சங்க இலக்கியமும், நீதிநெறி விளக்கமும் கூறிய அளவிற்கு எந்த மதம் சார்ந்த நூல்களோ அல்லது வேற்று நாட்டு இலக்கியங்களோ கூறியதாகத் தெரியவில்லை.

குடும்ப அமைப்பு என்பது நமது கலாச்சாரம் மற்றும் பண்பாட்டின் வெளிப்பாடு ஆகும். ஒரு குடும்பத்தில் ஆண் குடும்பத் தலைவராகவும், பெண் குடும்பத் தலைவியாகவும் அடையாளப் படுத்தப்படுகிறார்கள். ஆண்-பெண் உறவு நிலை, திருமணத்திற்கு முன்னும் பின்னுமாகக் காதல் நிலை ஆகியவற்றைத் திருக்குறள் விரிவாகப் பேசுகிறது. பெண், ஆணுக்கு இணையானவள்: ஆற்றல் மிக்கவள் என்பதை,

"சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை"

என்று ஆற்றலும், அறிவும் நிறையும் பெண்களை உலகிற்கு உருவாக்கித் தந்தவர் வள்ளுவர் எனலாம்.

ஆண்-பெண் சமனியத்தை ஏற்கும் தன்மைதான் குடும்பப் பண்புகளில் தலையானது. வள்ளுவம் வகுத்துத் தந்த அன்பெனும் நெறிக்குள், மனங்களின் சங்கமத்திற்குள், மாசுபடாத வாழ்வியல் படிநிலை ஆணுக்கும் பெண்ணுக்கும் அவசியமானது.

இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டில் குடும்ப அமைப்பு நகர்ப்புறங்களில் சிதைந்து விட்டாலும்கூட தமிழ் மரபும், பண்பாடும் பல குடும்பங்களில் இன்றும் போற்றப்படுகிறது என்பதுதான் சிறப்பு.

திருமணத்திற்குப் பின் ஒரு பெண் தாய், தந்தையரை விட்டுப் பிரிந்து கணவர் வீட்டில் உறுப்பினராக இணைவது தமிழ் மரபு. இதில் கவனம் பெறவேண்டியது என்னவெனில், மருமகளாகச் செல்லும் பெண்ணை அடுப்பூதும் சமையல்காரியாகவோ, வீட்டுவேலைகளைச் செய்ய வந்தவளென்று எண்ணாமல் அவள் மனம் நோகாதவகையில் கணவனது குடும்ப உறுப்பினர்களை எவ்விதம் நடத்துகிறார்களோ அதே விதத்தில் உரிய அங்கீகாரம் அளித்து, அவள் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அவளை அந்நியப்படுத்தாமல் இருக்கும் பண்பை அனைவரும் பெற்றிருக்க வேண்டும் என்பதாகும்.

தனிக் குடும்பமாக இருந்தாலும், கூட்டுக் குடும்பமாக இருந்தாலும் அன்பு, அரவணைப்பு, நெகிழ்ந்து கொடுக்கும் தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, சகிப்புத் தன்மை, பொறுப்புணர்வு,கடமையுணர்வு, ஒருவர் கருத்தை மற்றவர் மதித்தல், வெளிப்படைத்தன்மை, செருக்கின்மை, இன்சொல்கூறல் ஆகிய பண்புகளையும், அறநெறிகளையும் பின்பற்றுவது குடும்பத்தில் மகிழ்வையும், ஏற்றத்தையும் தரும்.

## III. சமூகப்பண்புகள் (Social Values)

சமூகம் என்பது பன்முகத் தன்மை கொண்டது. இனம், மொழி, நிறம், கலாச்சாரம் என்பவற்றால் வேறுபட்ட மனிதர்களை உள்ளடக்கிய இச்சமூகத்தில் தனிமனிதன் ஓர் அங்கம். பழங்காலந்தொட்டு மனித இனம் குழுவாகவே வாழ்ந்திருக்கிறது. கிரேக்கத் தத்துவ அறிஞர் அரிஸ்டாட்டில் கூறியுள்ளபடி," மனிதன் ஒரு சமூக விலங்கு". சமூகத்தில் ஓர் அங்கமாகச் செயல்பட சில பண்புகளை மனிதன் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்.



ஒரு மனிதன் தான் சார்ந்த சமூகத்தில் அங்கமாகச் செயல்படவும், சமூகத்தில் முழுமையும், மகிழ்ச்சியும், அமைதியும் நிலவிடவும் கொண்டிருக்க வேண்டிய பண்புகளை நாம் சமூக மதிப்புணர்வுகள் அல்லது சமூகப் பண்புகள் என்று அழைக்கிறோம். சமூக வாழ்வியல் நெறிமுறைகளை அறம், பொருள், இன்பம் என மூன்றாகப் பகுத்துக் கூறுவது நம் தமிழ் மரபு. "இன்பமும், பொருளும், அறனும் என்றார்க்கு" என்பது தொல்காப்பிய நூற்பா. இம்மூன்று வாழ்வியல் நெறிகளைச் சங்க இலக்கியமும், திருக்குறளும் பேசுவது நம் இலக்கியத்தின் தனிச்சிறப்பு.

சமுதாயப் பண்புகளில் சகோதரத்துவம், சகிப்புத்தன்மை, ஒற்றுமை உணர்வு, பெருந்தன்மை, சேவை மனப்பான்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, கடமை உணர்வு, பொறுப்புணர்வு, குழுவாக மற்றும் அணியாகச் செயல்படும் தன்மை ஆகியவை முக்கியமானவைகள். பண்புகளையும், நெறிமுறைகளையும் பட்டியலிட்டுத் தனித்தனியாக அட்டவணைப்படுத்துவது என்பது அரிது. காரணம் சில தனிமனிதப் பண்புகள் சமூகப் பண்புகளை உள்ளடக்கியதாக இருக்கும். எடுத்துக்காட்டாக அன்பு என்ற பண்பு இருநிலைகளிலும் முக்கியமானது. நேர்மை கொண்டவர்கள் மட்டுமே நேர்மையான சமூகத்தை வடித்தெடுக்க முடியும்.

தனி மனிதப் பண்புகளா, சமூகப் பண்புகளா என்ற பிரிவை விட நாம் சிந்திக்க வேண்டியது என்னவெனில், நாம் பிறரிடம் எந்தப் பண்புகளை எதிர்பார்க்கின்றோமோ அந்தப் பண்புகளை நாமும் பெற்றிருக்கிறோமா என்பதுதான். ஒரு சில சமூகப் பண்புகளைப் பற்றி இப்போது பார்க்கலாம்.

### 1.சகோதரத்துவம்:

இந்திய மண்ணின் சிறப்பான தன்மையே இப்பண்புதான். சக மனிதர்களைச் சகோதரத்துவத்துடன் எவ்விதப் பாகுபாடின்றி ஏற்றுக்கொண்டு செயல்படும் தன்மையைச் சகோதரத்துவம் என்று அழைக்கிறோம். சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் உரை நிகழ்த்தும்போது "சகோதர, சகோதரிகளே" என்று தொடங்கிப் பேசினார். இப்பேச்சு உலகமே வியந்து போற்றும் பேச்சாக இன்றும் நினைக்கப்படுகிறது. இன்று

உலகம் முழுவதும் பேசப்படுகிற உலகமயமாதல் (Globalization) என்ற குவலயக் குடும்பம் (Global Family) அணுகுமுறைகள் குறித்துப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே கணியன் பூங்குன்றனார்,"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற மாபெரும் தத்துவத்தைப் பாடி,"உலக மக்கள் யாவரும் உறவினர்களே, எல்லா நாடுகளும் பண்பட்ட ஊர்களே", என்ற மிகப்பெரிய உயரிய வாழ்வியலை உணர்த்தி விட்டார்.

சகோதரத்துவம் என்பது தமிழர் பண்பாடு. அதுவே சமத்துவத்திற்கு அடிப்படை அது ஏதோ தமிழர்களுக்கு மட்டும் பொருந்தக்கூடியது என்பதல்ல. வையக மாந்தர் யாவருக்கும் பொருந்தக்கூடியது. இப்பண்பு நம்மிடம் இல்லையென்றால் ஏற்றத்தாழ்வும், வன்முறைக் கலாச்சாரமும், நாடு, இனம், மொழி, நிறப் பாகுபாடுகள் மையப்படுத்தப்பட்டு அமைதியற்ற சூழ்நிலைதான் பெருகும்.

**2.சகிப்புத்தன்மை:**

சகிப்புத்தன்மை என்பது பிறருடைய இயல்புகள் மற்றும் உணர்வுகள், நம்பிக்கை, கொள்கைகளைப் புரிந்து கொண்டு நடப்பதாகும். நம் நாட்டில் பல மதங்களைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். பல மொழி பேசக்கூடியவர்கள் இருக்கிறார்கள். பல இனத்தைச் சார்ந்தவர்களும் உள்ளனர். அவர்களுடைய நம்பிக்கை மற்றும் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அனுசரித்து ஒற்றுமையுடன் வாழ்வது நன்மை பயக்கும். இ.எம்.ஃபார்ஸ்ட்டர் (E.M.Forster) என்ற ஆங்கில எழுத்தாளர் தன்னுடைய "சகிப்புத்தன்மை" என்னும் கட்டுரையில் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். இப்பண்பு அனைத்து இடங்களிலும், அனைத்துச் சூழல்களிலும் தேவைப்படுகிறது என்கிறார். எப்போது அன்பு குறைகிறதோ, அப்போதே சகிப்புத்தன்மை போய்விடும் என்பது அவரது கருத்து.

சகிப்புத்தன்மை இல்லாமற் போனதால்தான் வன்முறை, மதத்தின் பெயரிலும், இனத்தின் பெயரிலும், உலகெங்கும் பெருகி வருகிறது. இது இல்லாத போதுதான் மாறுபட்ட கருத்துக்களை ஏற்றுக்கொள்ள மறுக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. சாதி ஆணவக் கொலைகளும் சகிப்புத்தன்மை குறைபாடின் ஒரு வெளிப்பாடே



ஆகும். செருக்கும், ஆத்திரமும் ஒரு மனிதனின் அறிவுக்கண்களை மறைக்கும் போது அவன் மிருகமாக மாறிச் செய்யும் இழிசெயலே ஆணவம் ஆகும்.

**3.பெருந்தன்மை:**

ஒரு சமூகத்தின் அங்கமாக இருப்பதற்கு வேண்டிய அடிப்படையான பண்புகளில் பெருந்தன்மையும் முக்கியமான ஒன்றாகும். இரு நபர்களுக்கிடையே அல்லது பிரிவுகளுக்கு இடையே சண்டை, சச்சரவு ஏற்படும்போது யாராவது ஒருவர் பெருந்தன்மையுடன் நிதானத்துடன் விட்டுக்கொடுத்து விட்டால் அடுத்தகணமே ஒற்றுமையும், இணக்கமான சூழலும் அமைதியும் ஏற்பட்டு விடும்.

**4. ஒற்றுமை உணர்வு:**

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ; ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே" என்று பாரதி பாடினார். இந்தியா போன்ற பன்முகக் கலாச்சாரம் உள்ள நாட்டில் ஒற்றுமை என்பது இன்றியமையாத ஒரு சமூகப் பண்பு. இப்பண்பு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, சகிப்புத்தன்மை போன்றவைகளை உள்ளடக்கியுள்ளது. அடிப்படையில் அனைவரிடத்திலும் அன்பு பாராட்டினால் ஒற்றுமை உணர்வு தானாக ஏற்பட்டுவிடும். ஒற்றுமையைக் குலைத்து, அதில் குளிர்காய்ந்து, அதனால் சுயலாபம் ஈட்ட நினைக்கும் மதவாத, சாதீய, பிராந்திய தீய சக்திகள் நம்மைச் சுற்றி எப்போதும் வலம் வந்து கொண்டிருக்கின்றன. அவைகள் நம்மை உணர்வு ரீதியாக கவர்ந்து கடைசியில் மீளாத்துயரை ஏற்படுத்தக்கூடும். ஆகவே நம் அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள சகோதரத்துவத்தை வளர்த்து இந்திய மண்ணில் பிறந்த அனைவரும் ஓர் குலம் ; அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்ற நிலைப்பாட்டை எடுத்து அந்நிய சக்திகள் நம்மைப் பிளக்கும் திட்டத்தைத் தவிடு பொடியாக்க வேண்டும். அப்போதுதான் நாமனைவரும் அமைதியுடனும், நல்லிணக்கத்துடனும் வாழ முடியும். நம் வாழ்வின் ஏற்றத்திற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் ஒற்றுமை உணர்வு மிகவும் தேவையான ஒரு சமூகப் பண்பாகும்.

## 5. சேவை மனப்பான்மை:

தன்னலம் கருதாது, பிறரின் நலம் பேணி ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சிக்கு உதவும் பண்பை நாம் சேவை மனப்பான்மை என்கிறோம். கருமவீரர் காமராசர் மறைந்தபோது அவரிடம் ஒரு சில ஆடைகளும், சில நூறு ரூபாயும்தான் இருந்தன. தன்னைப் பற்றியோ, தன் குடும்பத்தைப் பற்றியோ ஒரு கணமும் சிந்திக்காமல், நாட்டைப் பற்றியும், நாட்டு மக்களைப் பற்றியும் எப்போதும் சிந்தித்துச் செயலாற்றி "கரும வீரர்" என்ற பெயர் பெற்றவர் அவர். புனிதர் அன்னை தெரசா தொழுநோயுற்ற நோயாளிகள், ஆதரவற்ற ஏழைகளுக்காக அளப்பரிய சேவை செய்து உலகம் போற்றும் புனிதராக வாழ்ந்து காட்டியவர். இன்னும் எத்தனையோ தலைவர்களும், நாடு போற்றும் நல்லவர்களும் நம்மிடையே வாழ்ந்து சேவையின் மகத்துவத்தை உணர்த்திக் காட்டி உள்ளார்கள். அவர்கள்போல், அனைத்தையும் துறந்து வாழா விட்டாலும் நம் அனைவரிடமும் சமூகச் சிந்தனையும், சமூக அக்கறையும் ஓரளவாவது இருக்க வேண்டும். தன்னால் இயன்றதை உழைப்பாகவோ, உதவியாகவோ தேவைப்பட்டோருக்கு நாம் செய்யும் போது நாம் சேவை செய்வதாகக் கொள்ளலாம். குறைந்தபட்சம் நமது நாட்டில் செயல்படும் எத்தனையோ சேவை அமைப்புகளில் ஏதாவது ஒன்றில் தம்மை இணைத்துக் கொண்டும் அறப்பணிகளில் ஈடுபடலாம். மனிதனின் மகத்துவத்தை உலகிற்குக் காட்டுவது சேவை மனப்பான்மை என்றால் அது மிகையல்ல.

## 6. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை:

"விட்டுக்கொடுப்பவர் கெட்டுப்போவதில்லை ; கெட்டுப் போகிறவர் விட்டுக் கொடுப்பதில்லை" என்பார்கள். அடுத்தவர்களின் அனுகூலத்திற்காக சில விஷயங்களை நாம் பெரிதுபடுத்தாமல் அனுசரித்துப் போனால் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை தானாக நம்மிடம் வந்து சேரும். பணத்தாலும், பொருளாலும் வலியவர் எளியவர்களுக்காக விட்டுக்கொடுக்கலாம். இதற்கு மிக அரிய பண்பான பெருந்தன்மை அவசியமல்ல. மிகச்சிறிய அனுசரணை போதுமானது. எப்போது ஒருவரிடம்



மாசாக ஒட்டிக்கொண்டிருக்கும் "நான்","எனது" என்ற அகந்தை அழிகிறதோ அப்போதே அவர் எதையும் விட்டுக் கொடுக்கும் தன்மையைப் பெறுகிறார். விட்டுக் கொடுக்கும் தன்மை நம் வாழ்வில் சாதாரண நிலைகளில் தேவைப்படுகிறது. ரேசன் கடை கியூவிலிருந்து, சினிமா தியேட்டரில் டிக்கட் வாங்கும் கியூவரை இப்பண்பு தேவை. முதியவர்களுக்காக, குழந்தைகளுக்காக, மாற்றுத்திறனாளிகளுக்காக, பெண்களுக்காக என்று "கியூ"வில் மட்டுமல்லாமல் குடும்பத்தில், சக மனிதர்களோடு கொண்ட உறவு மேம்பட, இப்பண்பை நாம் வளர்க்க வேண்டும்.

## 7. கடமை உணர்வு:

ஒரு சமூகம் பண்பட்ட சமூகம் என்று அடையாளப்படுத்தப்பட வேண்டுமானால் அச்சமூகத்தில் உள்ள அங்கங்கள் என அறியப்படும் ஒவ்வொருவரும் தமக்குள்ள கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும். அவரவர் கடமையைச் சரிவரச் செய்து விட்டால் சமூகத்தீமைகள் ஏற்படாது. ஒரு அரசுப் பணியாளர் கையூட்டு வாங்காமல் தனக்குள்ள பணியைச் செய்துவிட்டால் அவர் கடமையுணர்வு மிக்கவராக அறியப்படுவார். அரசுப் பணியாளர் என்று மட்டுமில்லாது, ஆசிரியர், மாணவர், மருத்துவர், பொறியாளர் முதலிய அனைத்துத் துறைகளில் உள்ளவர்களும் தமக்குள்ள பொறுப்புகள் எவை, கடமைகள் எவை என்ற புரிந்துணர்தலோடு தத்தம் வேலைகளைச் செய்யும் பட்சத்தில் நம் சமூகம் மறுமலர்ச்சி அடையும் ; மேன்மை பெறும். ஏனோ, தானோ என்று செய்யும் வேலையும், பணத்திற்காகவோ, தெரிந்தவர்-உறவினர் என்பதற்காகவோ அல்லது ஏதாவது ஒரு பலனிற்காகவோ செய்யும் வேலையும் கடமையைத் தவறவிட்ட குற்றமாகும். இக்கடமையுணர்வு குடும்பத்திலும் தேவைப்படும் ஒரு பண்பு. தந்தை, தாய், மகன், மகள் எனப் பல உறவு நிலைகளில் கடமையைச் செய்யும்போது குடும்பம் செழிக்கும். சமூகம் வளரும். நாடு மிளிரும். தாம் சார்ந்த மதங்களில் கூட, வழிபாடு முதற்கொண்டு வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் இன்னின்ன கடமையைச் செய்ய வேண்டும் என்று வரையறை செய்யப்பட்டுள்ளது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

**8. அணியாகச் செயல்படும் தன்மை: (Team Spirit)**

"தனிமரம் தோப்பாகாது" என்பார்கள். இச்சமூகத்தில் உள்ள எவரும் தனிமரம் அல்ல. செடிகள், கொடிகள், மரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதுதான் தோப்பு. அதைப்போல எந்த ஒரு மனிதனின் வளர்ச்சியும் அவர் சார்ந்துள்ள சமூகத்தின் அடிப்படையில்தான் வெளிப்படும். ஒரு சமூகத்தின் வளர்ச்சியும், மேன்மையும் அச்சமூக அங்கத்தினர்களின் குழுச் செயல்பாட்டின் விளைவுதான். ஒரு குழுவாக அல்லது ஓரணியாக செயல்படுவதற்கு அடுத்தவரின் கருத்துக்களை மதிக்கும் தன்மை வேண்டும். எதிர்மறை அல்லது மாற்றுக் கருத்துக்கள் இருந்தால், பக்குவமாக சொல்லக்கூடிய பேச்சுத்திறன் வேண்டும். குழுவாகச் செயல்படும் போது, குழுவின் நோக்கமறிந்து அதன்படிச் செயலாற்ற வேண்டும். நோக்கம் மறைந்து தனி மனித பலனுக்காக குழு செயல்படுமானால் அதை நெறிப்படுத்தும் ஆற்றல் வேண்டும். எல்லாவற்றிற்கும் அடிப்படையாக குழுச் செயற்பாட்டில் நம்பிக்கை வேண்டும்.

## IV. தொழில் நெறியும், வேலைப் பண்பாடும் (Professional Ethics and Work Culture)

இன்றைய உலகில் மிகப்பெரிய குறையாக பலரும் சுட்டிக் காட்டுவது செய்யும் தொழிலிலும், பார்க்கும் பணியிலும் வேலைப்பண்பாடு அவ்வளவாக இல்லை என்பதுதான். இத்தன்மைக்குப் பல காரணிகள் சொல்லப்பட்டாலும், எடுத்த பணியிலும், செய்யும் தொழிலிலும் அறமும், அர்ப்பணிப்பும் தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது.

நன்னெறியும், வேலைப் பண்பாடும் நாம் பார்க்கும் பணியில் இருக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல் இவை மட்டுமே முன்னிலைப்படுத்த வேண்டும் ; அப்போதுதான் நாம் நினைத்த விளைவுகளைப் பெற முடியும் என்பதை ஹார்வர்ட் பல்கலைக்கழக ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. அவ்வாய்வில் பணியைச் செவ்வனே செய்வதற்கு ஒருவருக்குத் திறமை 15 விழுக்காடு இருந்தாலே போதுமானது ; ஆனால் 85 விழுக்காடு வேலைப் பண்பாடு உள்ள மனப்பாங்கு தேவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தொழில் சார்ந்த நெறி என்பது ஒருவர் பார்க்கும் பணியிலும், செய்யும் தொழிலிலும் நேர்மையுடனும், நாணயத்துடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் கடமையைச் செய்வதாகும். இப்பண்பு கொண்டோரிடம் வேலைப் பண்பாடு அதிகம் இருக்கும் ; குழுவில் இணைந்து பணியாற்றுவார்கள். கூட்டு முயற்சியில் நம்பிக்கை கொண்டவர்களிடம்தான் இப்பண்பு மேலோங்கி இருக்கும். உழைப்பை மதிக்கும் இவர்களிடம் பொறுப்புணர்வு மிகுதியாக காணப்படும். இவர்களிடம் உள்ள இந்தத் தொழில் அறத்தினால் பார்க்கும் பணியில் தரமும், ஒழுங்கும் இருக்கும். இதன் விளைவாக, இவர் சார்ந்துள்ள சமூகத்திற்கும், இவருக்கும் மிகுந்த பயன் கிடைக்கும். மறைந்த முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் அப்துல்கலாம், இந்திய அரசியமைப்புச் சட்டத்தை வடிவமைத்த டாக்டர் அம்பேத்கர், புனிதர் அன்னை தெரசா, தேசப்பிதா மகாத்மா காந்தி, கருமவீரர் காமராசர் போன்ற உலகம் போற்றும் உத்தமர்கள் அனைவரிடமும் இப்பண்பு இருந்துள்ளது.

தொழில் நெறியையும், வேலைப்பண்பாட்டையும் மேம்படுத்த வேண்டுமெனில் பின்வரும் பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

(1) நேர்மை (2) பொறுப்புணர்வு (3) ஒழுக்கம் (4) கூட்டுமுயற்சி (5) மனஉறுதி (6) அர்ப்பணிப்பு (7) உழைப்பு (8)காலந்தவறாமை

மேற்கூறிய பண்புகளுடன் நாம் பின்பற்றும் நன்னெறிகள் மேலும் மேலும் நம்மை செம்மைப்படுத்தும் ; செழுமைப்படுத்தும்.

**1. நேர்மை:**

"நேர்மைதான் மிகச்சிறந்த கொள்கை" (Honesty is the best policy) என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. மனச்சாட்சி உள்ளவர்கள் நேர்மையுடனும், நாணயத்துடனும் இருப்பார்கள். நாம் ஈட்டும் பொருளும், நமக்குக் கிடைக்கும் பெயரும், புகழும், பதவியும் நேர்மையான வழியில் நம் உழைப்பின் பலனாகக் கிடைத்ததாக இருக்க வேண்டும். நேர்மையற்ற முறையில் பெறும் எதுவும் மனநிறைவைத் தராது. நேர்மையுடன் பணியாற்றுபவர்கள் உண்மையான ஒழுக்க சீலர்களாக இருப்பர்.

2. **பொறுப்புணர்வு:**

இப்பண்பு சமுதாயத்தில் நம்மை உயர்த்திப் பிடிக்கும். எந்த வேலையையும் முன்னின்று, உண்மையாக உழைத்து அதன் வெற்றிக்கும், தோல்விக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வது பொறுப்புணர்வு. இது மேலோங்கி ஒருவரிடம் இருக்கும்போதுதான், மற்றவர்கள் மிகப்பெரிய பொறுப்புகளையும், பதவிகளையும் அவருக்கு அளிப்பார்கள். ஏற்ற பணி எதுவாக இருந்தாலும் அதைப் பொறுப்புடன் கவனிக்கும்போதுதான் மற்றவர்கள் உன்னிப்பாக அவரைக் கவனிப்பார்கள் ; மதிப்பார்கள். இப்பொறுப்புணர்வில் நியாயம், நேர்மை, உண்மை, உழைப்பு உள்ளடங்கி இருக்கும்.

3. **ஒழுக்கம்:**

ஒழுக்கம் உயர்வைத் தரும் என்பார்கள். நற்பண்புகள் கொண்ட அனைவரிடமும் இருக்க வேண்டிய ஒரு அம்சம் ஒழுக்கம். தனிமனித நிலை, சமூக நிலை, குடும்ப நிலை என பல்வேறு நிலைகளிலும் இப்பண்பு அவசியமாகும். திட்டமிட்டு, மிகவும் சரியாக, சரியான நேரத்தில் ஒரு பணியைச் செய்யும்போது அது வெற்றியடைகிறது ; போற்றப்படுகிறது. அன்றாடம் செய்ய வேண்டிய பணி மட்டுமின்றி ஈடுபாட்டுடன் செய்யும் எச்செயலும் நன்மை பயக்கும். இந்த ஒழுக்கமானது பணி, தொழில் முறைகளில் நன்மதிப்பைப் பெற்றுத்தரும். சரியான நேரத்திற்கு பணியை முடிப்பது போன்றவை ஒருவரின் ஒழுக்கத்தின் மாற்று வடிவங்கள்.

4. **கூட்டு முயற்சி:**

பணியைச் செய்யும்போது கூட்டாக குழுவில் இணைந்து செயல்பட்டால் வெற்றி உறுதியாகக் கிடைக்கும். தாமாகவே எல்லாவற்றையும் செய்து முடிப்போம் என்று பேச்சளவில் கூறிக்கொள்ளலாம். ஆனால் முழுமையான நிறைவான வெற்றிக்கு குழுவில் சேர்ந்து செயல்பட வேண்டும். அப்படிச் செயல்படும்போது "நான்" என்ற மமதையை மட்டுப்படுத்தி "நாம்" என்ற அனைவரையும் உட்படுத்தும் உணர்வில் பணியாற்றி அச்செயலை முடிக்கப் பாடுபட வேண்டும். கூட்டாக இணைந்து செயல்பட Team Spirit என்று சொல்லக்கூடிய "அணியில் இசைந்து செயல்படும் மனப்பாங்கு" வேண்டியதுள்ளது.



இப்போது பல கார்ப்பரேட் நிறுவனங்கள், அரசுத்துறை நிறுவனங்கள் இந்த மனப்பாங்கு வேலைக்கு மனுச்செய்யும் மாணவர்களிடம் இருக்கிறதா என்றும் தேர்வு மூலம் சோதிக்கின்றன.

5. **மனஉறுதி:**

ஒரு பணியை முனைந்து செய்யும் போது ஏற்படும் இடர்ப்பாடுகள், துன்பங்கள், எதிர்மறையான சூழல்கள் இவற்றை முறியடித்து சோர்வில்லாமல், நம்பிக்கை சிறிதளவும் குறையாமல் தொடர்ந்து அப்பணியில் முழு முயற்சியுடன் ஈடுபடுவது மனஉறுதி என்று அழைக்கலாம். மன உறுதி கொண்ட அனைவரும் வெற்றியாளர்கள். தொழில் முனைவோர்கள் மற்றும் இன்று பிரபலமாக போற்றப்படுபவர்கள் அனைவரும் மனஉறுதி கொண்டதனாலேயே மேன்மை அடைந்தார்கள் என்று கூறலாம். ஜே.கே. ரவுலிங் எழுதிய ஹாரிபாட்டர் கதைகள் பலமுறை பதிப்பாளர்களால் நிராகரிக்கப்பட்டது. என்றாலும் அவரின் சீரிய மனஉறுதியுடன் கூடிய முயற்சி அவருக்கு மிகப்பெரிய வெற்றியைத் தேடித்தந்தது. இன்றைய மாணவர்கள் முயற்சியில் சோர்வடையக் காரணம் மனஉறுதியின்மையே.

6. அர்ப்பணிப்பு

ஒரு வேலையில் ஈடுபடும்போது அதில் அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட வேண்டியது அவசியம். அப்போதுதான் அந்த வேலையை முழுமையாகவும், தரத்துடனும், சிறப்பாகவும் முடிக்க முடியும். புறச்சூழல்கள் நம் பணியில் இடர்ப்பாடுகளை ஏற்படுத்தும்போது அவைகள் எந்த வகையிலும் பணியின் தன்மையைப் பாதிக்கக்கூடாது. ஈடுபாடும், ஆர்வமும் அர்ப்பணிப்பு உணர்வை நிச்சயம் மேம்படுத்தும். இவ்வுணர்வு சிலருக்கு இயற்கையாகவே இருக்கலாம். இயற்கையாக இல்லாதபோது இந்தப் பண்பை நாம் நமக்குப் பணிக்கப்பட்ட வேலையில் அல்லது நாமாக தேர்ந்தெடுத்த வேலையில் முழு ஈடுபாடு கொண்டு உழைத்தால் அர்ப்பணிப்பு உணர்வு மேலோங்கும்.

### 7. உழைப்பு:

"உழைப்பே உயர்வு" என்பது நம் பெரியவர்கள் கூறிய நன்மொழி. எந்த ஒரு உழைப்பிலும் உடல், உள்ளம், மூளை இவை மூன்றும் உள்ளடங்கியுள்ளது. மூளையைப் பயன்படுத்துவது என்பது விவேகத்துடன் நாம் பணிபுரிவது. உள்ளம் என்பது நாம் பணியில் கொண்டிருக்கும் ஆர்வமும், ஈடுபாடும். உடல் என்பது நாம் பணி செய்யும்போது பயன்படுத்தும் உறுப்புக்கள். ஆர்வத்துடனும், விவேகத்துடனும் செயல்படும்போது உடல் சோர்வடைய வாய்ப்பில்லை. ஒருவேளை சோர்வு ஏற்படும் நிலை ஏற்பட்டால் அதற்குக் காரணம் நமது திட்டமிடலும், பணியாற்றும் நேரத்தை நிர்வகிக்கும் திறனும் சரியில்லை என அர்த்தம். ஆகவே நாம் கரத்தாலோ, சிரத்தாலோ வேலையில் ஈடுபடும்போது சரியாகத் திட்டமிட்டு, விவேகத்துடன் உழைக்க வேண்டும். நிச்சயம் இவ்வகையான உழைப்பு பயன்தரும். தேனீ போல சுறுசுறுப்பாக இல்லாவிடினும் சோம்பித்திரியாமல் உழைப்பது காலத்தின் கட்டாயம்.

### 8. காலந் தவறாமை :

நம் நாட்டில் எந்த ஒரு நிகழ்வும் குறிப்பிட்ட நேரத்தில் தொடங்குவது கிடையாது என்பதை Indian punctuality என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு. ஒருவரிடம் தாம் பார்க்கும் பணியில் அர்ப்பணிப்பு உணர்வும் , பொறுப்புணர்வும் இல்லாத போது இயல்பாகவே அவர் சரியான நேரத்தில், ஒழுங்குடன் செய்வதில்லை. குறிப்பிட்ட நேரத்தில் ஒரு நிகழ்வை தொடங்குவதும், அந்நிகழ்வில் கலந்து கொள்வதும் ஒருவர் மீது உள்ள நம்பகத்தன்மையை அதிகரிக்கும். இது மட்டுமல்லாது, அன்றாடம் நாம் செய்யும் வேலைகளில் - பள்ளி, கல்லூரிக்குச் செல்வது முதல், இரவு தூங்கும் வரை காலந்தவறாமையை கடைப்பிடிக்கும் ஒழுங்கு நம்மிடம் இருந்தால் நிச்சயம் அது நன்மை பயக்கும். நமக்கு உயர்வைத்தரும். இத்தோடு கிடைத்தற்கரிய காலம் நமக்கு வந்து வாய்க்குமானால், அந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு அப்போதே காலந்தாழ்த்தாது செய்தற்கரிய செயல்களைச் செய்ய வேண்டும் என்று திருவள்ளுவரும் வலியுறுத்துகிறார்.



## V. பண்பாடு சார்ந்த வாழ்வியல் நெறிகள்
## (Cultural Values)

பண்பாடு என்பது ஆங்கிலத்தில் Culture (கல்ச்சர்) என்ற சொல்லுக்கு இணையான பொருளில் பயன்படுத்தப்படுகிறது. பரந்த பொருளுடன் பயன்படுத்தப்படும் இச்சொல்லும், கலாச்சாரம் என்ற வார்த்தையும் ஒரே கருத்தைக் குறிக்கிற இரண்டு சொற்கள். இச்சொல்லானது, மனிதர்களின் செயற்பாடுகளையும், அவற்றின் சிறப்புத் தன்மைகளையும், முக்கியத்துவத்தையும் கொடுக்கும் குறியீட்டு முறைகளையும் குறிக்கிறது.

பண்பாடு பல நிலைகளில் வரையறை உள்ளடக்கி உள்ளது. ஒரு நிலையில் ஒரு சமூகத்தின் அல்லது இனத்தின் வரலாறு, போக்கு, பண்புகள், அறிவு பரவல்கள், வாழ்வியல் வழிமுறைகள், சமூகக்கட்டமைப்பு ஆகியவற்றைக் குறிக்கும். இத்துடன் மொழி, உணவு, இசை, மதம், தொழில்சார் கருவிகள் போன்றவையும் பண்பாட்டிற்குள் அடங்கும்.

பண்பாடு பொதுவாக மனிதர்களின் செயல்பாடுகளையும், நடவடிக்கைகளைக் குறிக்கும் எனலாம். மனிதச் செயற்பாடுகளை விளங்கிக் கொள்வதற்கான வகையில் இதற்குப் பல கோட்பாடுகளைப் பிரதிபலிக்கும் வரைவிலக்கணங்கள் உண்டு. பண்பாடு என்பதற்குக் கூறப்படும் 200-க்கு மேற்பட்ட வரைவிலக்கணங்களை குரோபர் என்பாரும், கிளைட் குளுக்கோன் என்பவரும் (Kroeber, Clyde Kluckhohn) தாங்கள் 1952-ல் எழுதிய பண்பாடு : எண்ணக்கருத்துக்களும், வரைவிலக்கணங்களும்: ஒரு விமர்சன மீள்பார்வை (Culture: A Critical Review of Concepts and Definitions) என்னும் நூலில் விளக்கமாக பட்டியலிட்டுள்ளார்கள்.

பண்பாடானது இசை, இலக்கியம், வாழ்க்கை முறை, உணவு, ஓவியம், சிற்பம், நாடகம், திரைப்படம் போன்ற மனிதருடைய கலைப் பொருள்களிலும் நடவடிக்கைகளிலும் வெளிப்படுகின்றது. சில அறிஞர்கள் பண்பாட்டை நுகர்வு, நுகர் பொருட்கள் என்பவற்றின் அடிப்படையில் அடையாளம் காண்கின்றனர். ஆனால், மானிடவியலாளர், பண்பாடு என்பது

நுகர் பொருள்களை மட்டுமல்லாது அவற்றை உருவாக்குவனவும், அவற்றுக்குப் பொருள் கொடுப்பனவுமான வழிமுறைகளையும் அப் பொருள்களும், வழிமுறைகளும் பொதிந்துள்ள சமூகத் தொடர்புகள், செயல்முறைகள் என்பவற்றையும் குறிப்பதாகக் கூறுகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை பண்பாடு என்பது கலை, அறிவியல், நெறிமுறைகள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியது.

18, 19 -ம் நூற்றாண்டுகளில் மேலை நாட்டு அறிஞர்களும், இன்றும் கூட சிலரும் பண்பாடு என்பதை நாகரிகம் (Civilization) என்பதோடு அடையாளப்படுத்துவது உண்டு. பண்பாடு என்பதற்குப் பல்வேறு கோட்பாடுகளையும், விளக்கங்களையும் மானிடவியளார் கொடுத்த போதிலும், அதை விளங்கிக் கொள்ளும் பொதுவான முறை ஒன்று உண்டு. அது மூன்று அம்சங்களை உள்ளடக்கியது. அவையாவன: பெறுமானம் (எண்ணங்கள்), நெறிமுறைகள் (நடத்தை), மற்றும் பொருட்கள் (பொருள் சார்பண்பாடு). வாழ்வில் முக்கியமானது என்பது பற்றிய எண்ணங்கள் பெறுமானம் எனப்படும். அவை பண்பாட்டின் ஏனைய அம்சங்களை வழி நடத்துகின்றன. நெறிமுறைகள் என்பன, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதாகும். ஒவ்வொரு பண்பாட்டுக் குழுவும் இந்தப் பொது வழங்கங்களையும், நெறிமுறைகளையும் நடைமுறைப் படுத்துவதற்கான வழிமுறைகளைக் கொண்டுள்ளது. சமூகம் நடைமுறைப்படுத்தும் இந்த நெறிமுறைகள் சட்டங்கள் எனப் பொதுவாக வழங்கப்படுகின்றன. மூன்றாவது அம்சமான, பொருட்கள் பண்பாட்டின் பெறுமானம் மற்றும் நெறிமுறைகளிலிருந்து பெறப்படுகின்றது.

### சமுதாயமொன்றினுள் காணப்படும் பண்பாடுகள்

பெரிய சமுதாயங்கள் பெரும்பாலும் துணைப் பண்பாடுகளை அல்லது அவர்கள் சார்ந்த பெரிய பண்பாடுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டக்கூடிய தனித்துவமான நடத்தைகளையும், நம்பிக்கைகளையும் உடைய குழுக்களைக் கொண்டவையாக இருக்கின்றன. இத் துணைப் பண்பாடுகள், அவற்றின் உறுப்பினரின் வயது, இனம், வகுப்பு, பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடலாம். அழகியல், சமயம்,



தொழில், அரசியல் போன்ற பண்புகளும் துணைப் பண்பாடுகளில் தனித்துவத்துக்குக் காரணமாக இருக்கக்கூடும். இவற்றில் ஒவ்வொன்றும் தனித்தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை இணைந்தோ துணைப் பண்பாடுகளை உருவாக்கலாம்.

### நிலப்பகுதி அடிப்படையில் பண்பாடு

உலகின் நிலப்பகுதிக்குரிய பண்பாடுகள் நாட்டினங்களாலும், இனக் குழுக்களாலும் உருவாகின்றன. பண்பாடுகளுக்கு இடையேயான ஒத்த தன்மை பெரும்பாலும் புவியியல் அடிப்படையில் அருகருகே வாழும் மக்கள் நடுவே காணப்படுகின்றது. பல நிலப்பகுதிக்குரிய பண்பாடுகள் பிற பண்பாடுகளின் தொடர்பினால் ஏற்படக்கூடிய செல்வாக்கின் பாதிப்புக்கு உள்ளாகின்றன. இத்தகையதொடர்புகள், குடியேற்றம், வணிகம், புலப்பெயர்வு, மக்கள் ஊடகம், சமயம் போன்றவற்றினால் ஏற்படுகின்றன. பண்பாடு இயக்கத்தன்மை கொண்டதாக இருப்பதுடன், காலப்போக்கில் மாறுபாடும் அடைகின்றது. இவ்வாறு மாறும்போது, பண்பாடுகள் வெளிச் செல்வாக்குகளுக்கு உட்பட்டு மாறுகின்ற சூழலுக்கும், தொழில்நுட்பங்களுக்கும் ஏற்றவகையில் தன்னை இசைவாக்கிக் கொள்கிறது. இதனால், பண்பாடு தொடர்புகளில் தங்கியுள்ளது எனலாம். பண்பாடுகளிடையே மக்களினதும், எண்ணக் கருக்களினதும் கூடிய நகர்வுகளுக்கு இடமளிக்கும் புதிய தொடர்புத் தொழில்நுட்பங்களும், போக்குவரத்துத் தொழில்நுட்பங்களும் உள்ளூர்ப் பண்பாடுகளில் விரைவான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

### நம்பிக்கை முறைமைகள்

சமயமும், பிற நம்பிக்கை முறைமைகளும் பண்பாட்டுடன் ஒன்றிணைந்தவையாக உள்ளன. மனித வரலாறு முழுவதுமே சமயம் பண்பாட்டின் ஒரு அம்சமாக விளங்கிவருகிறது. கிறிஸ்தவத்தின் பத்துக்கட்டளைகள், புத்தசமயத்தின் ஐந்து நோக்குகள் போன்றவற்றினூடாகச் சமயம் நடத்தைகளை முறைப் படுத்துகின்றது. சில சமயங்களில் இது அரசுகளுடனும் தொடர்புள்ளதாக இருக்கின்றது. இது கலைகளின் மீதும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

மேனாட்டுப்பண்பாடு ஐரோப்பாவிலிருந்து மிகவும் வலுவாக ஆஸ்திரேலியா, கனடா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் பரவியது. இப்பண்பாடு, பண்டைக் கிரேக்கம், பண்டைய ரோம், கிறிஸ்தவம் முதலியவற்றின் செல்வாக்குக்கு உட்பட்டது. மேனாட்டுப் பண்பாடு, பிற பண்பாடுகளைக் காட்டிலும் கூடிய அளவில் தனிமனிதனுக்கு முதன்மை கொடுப்பதாக உள்ளது. அத்துடன்இது, மனிதன், இறைவன், இயற்கை அல்லது அண்டம ஆகியவற்றைக் கூடுதலாக வேறுபடுத்திப் பார்க்கிறது. இது, பொருட்செல்வம், கல்வியறிவு, தொழில்நுட்ப முன்னேற்றம் என்பவற்றினால் குறிக்கப்படுகின்றது. எனினும் இவை மேனாட்டுப் பண்பாட்டுக்கு மட்டும் உரித்தான இயல்புகள் அல்ல.

### தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள்

தமிழர் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்திருந்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள் மனித வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்து வாழ்ந்தனர். தமிழர் வாழ்வை அகவாழ்வு, புறவாழ்வு என இரண்டாக இலக்கணம் வகுத்து வாழ்ந்தமை பண்பாட்டின் சிகரமாகக் கருதப்படுகிறது. தான் தோன்றிய கால மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாழ்க்கைமுறை, அரசு, அமைச்சர்,ஆட்சிமுறை, போர், வீரம், காதல் போன்றவற்றை நமக்குக் காட்டி நிற்கின்றன. நமக்குக் கிடைத்திருக்கும் சங்க இலக்கியங்களிலிருந்து தமிழர் பண்பாட்டை நன்கு அறிகிறோம். பண்பாட்டின் கூறுகள் சிலவற்றைப் பற்றி இங்குக் காண்போம்.

### காதல்

தமிழர் காதலை அன்பின் ஐந்திணை என்றனர். இஃது ஒருவனும் ஒருத்தியும் கொண்ட உளமொத்தத் தூயகாதல் வாழ்க்கையாகும். இது களவு, கற்பு என இரண்டாக அமையும். ஐந்திணை ஒழுக்கத்தில் தலைமக்களாக விளங்குபவர்கள். அறிவும், செல்வமும் உடைய நல்லகுலத்தில் பிறந்தவர்கள். இக்காதல் நாடகத்தில் தலைவன், தலைவி நற்றாய், செவிலித்தாய், தோழி, பாணன், பாடினி போன்றோரும் ஊர் மக்களும் பாத்திரங்களாக வருவர். இக்காதல் வாழ்வு அறத்திலிருந்து மாறுபடாமல் அன்பின் வழிப்பாட்டாக அமையும்.



மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

என்று வள்ளுவரும் காதல்வழிவந்த மனை மாட்சியைச் சிறப்பிக்கின்றார்.

### வீரம்

பண்டையத் தமிழர்கள் வீரத்தைத் தொல்காப்பியப் புறத்திணை இயல் எடுத்துக் கூறுகின்றது. பெரும்பாலும் தற்காப்பு முறையில் தான் போர் நடைபெற்றது. தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்ற நால்வகைப் படைகளும் போரில் ஈடுபட்டன. வெட்சி, வஞ்சி, உழிகை, தும்பை என்ற நான்கு புறத்திணை பகுதிகளிலும் தமிழர்களின் போர்முறைகள் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன. மேலும் வீரர் அல்லாதவர்கள், புறங்காட்ட ஓடுவார், புண்பட்டார், முதியோர், இளையோர், இவர்கள் மீது படைக்கலம் செலுத்தலாகாது என்பதும் புறநானூற்றால் அறிய முடிகிறது.

### நட்பு

சங்ககாலத் தமிழர் நட்பினைப் பெரிதும் மதித்து வாழ்ந்தனர். திருவள்ளுவரும் உண்மையான நட்புக்கு இலக்கணம் கூறியுள்ளார்.

முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு

உள்ளன்புடன் மனம் மகிழ்ந்து நட்பு கொள்வதே உண்மையான நட்பாகுமென்றார்.

### விருந்தோம்பல்

"விருந்து" என்ற சொல்லுக்குப் "புதுமை" என்பது பொருள். உறவினரும் நண்பரும் அல்லாதவராய் புதியராக நம்மிடம் வரும் மக்களை "விருந்து" என்றனர் தமிழர். அறியாதவர்களையும் அழைத்து உணவளித்து இடமளித்து உபசரித்து மகிழ்ந்தனர் தமிழர்.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

என்கிறார் திருவள்ளுவர்.

விருந்தினர்களை வெளியில் இருக்கச் செய்து தான் மட்டும் வீட்டின் உள்ளே உண்ணுதல் சாவாமைக்கு மருந்தாகிய அமிர்தமாக இருந்தாலும் வேண்டப்படுவதில்லை என்பதை வள்ளுவர்,

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"

என்று கூறுவதிலிருந்து விருந்தோம்பல் சங்க கால மக்களின் பண்பாக இருந்தமை அறிய முடிகிறது.

இவை மட்டுமன்றி ஈகை, கொடை, கற்புடைமை, உலக ஒருமைப்பாடு ஆகியவற்றையும் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகளாகக் கொள்ளலாம்.

## VI. கடமைகளும், பொறுப்புகளும் (Duties and Responsibilities)

இனம், மொழி, மதம் ஆகியவற்றில் தொன்றுதொட்டு சில மரபுகளும், பழக்கவழக்கங்களும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இவைகளின் கூட்டு அம்சம்தான் ஒரு மொழியைப் பேசும் இனத்தின் மதம் சார்ந்த பண்பாடாக, கலாச்சாரமாக உருவெடுக்கிறது. இவற்றில் சில முரண்பாடு உள்ளவைகளாக, மூட நம்பிக்கையின் அடிப்படையில் பின்பற்றுபவைகளாக, நடைமுறை சாத்தியம் இல்லாதவைகளாகக் கூட இருக்க வாய்ப்புண்டு. இவற்றை நாம் பகுத்தாய்ந்து கலாச்சாரத்திற்கும், பண்பாட்டிற்கும் பங்கம் இல்லாதவகையில் ஒழுக வேண்டிய நெறிமுறைகளையும், பின்பற்ற வேண்டிய பண்புகளையும் கடைப்பிடிப்பது இன்றியமையாதது.

தமிழ் பேசும் நம் இனத்திற்கென்று ஒரு சிறப்பு உண்டு. அது மதங்களைக் கடந்து தமிழ்க் கலாச்சாரம் என்ற வகையில் ஒருவரை இந்து, கிறித்துவர், இஸ்லாமியர் என அடையாளப்படுத்தாமல், குடும்ப உறவுகளையும், சமூக உறவுகளையும் மேம்படுத்தும் பண்புகளைக் கொண்டதாகும். அவையாவன: வீட்டிற்கு வந்தோரை உபசரிப்பது, பெரியவர்களை மதிப்பது, பெண்களைப் போற்றுவது, இல்லறத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற நல்லறம் கொள்வது, கூட்டுக் குடும்பக்



கோட்பாட்டை ஏற்பது, குழந்தைகளை அவரவர் மரபுப்படி வளர்த்து ஆளாக்குவது, பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைக் கடைசி வரை செய்வது, மற்றவரின் தனிமனிதச் சுதந்திரத்தில் தலையிடாமலிருப்பது, கூட்டாகச் செய்ய வேண்டிய வழிமுறைகளை மனம் கோணாமல் செய்வது, சமூகம் பின்பற்றும் அறிவுப்பூர்வமான சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் ஏற்றுக்கொள்வது, மாற்று இன, மொழி, மதச் சடங்குகளையும், பழக்க வழக்கங்களையும் அனுமதிப்பது. நம் தமிழ்ச்சமூகம் பின்பற்றி வரும் பண்பாடு, ஆடைகளையும் பழக்க வழக்கங்களையும் மட்டும் அடிப்படையாக கொண்டவை அல்ல.

மனங்களை இறுக்கிக்கொண்டு தமது இனம், மொழி, மதம் என்று சுருங்கும் போது சமூகத்தில் பிரச்சனையும், நல்லிணக்கத்திற்கு அச்சுறுத்தல்களும் உருவாகி அமைதியின்மையும், சுமூகமற்ற சூழலும் ஏற்படுகின்றன.

"யாதும் ஊரே, யாவரும் கேளீர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் பாடலே, தமிழ்ச் சமூகம் ஒரு பரந்த மனப்பாங்கு கொண்ட சமூகம், யாவரும் நம் சொந்தங்கள் ; அனைத்துச் சமூகங்களின் கலாச்சாரங்களும் ஏற்புடையது என்ற சகோதரத்துவத்தை உள்ளடக்கிய பண்பாடுள்ள ஒரு சமூகம் என்பதைப் பறைசாற்றுகிறது. ஆகவே கலாச்சாரப் பண்பு என்பது தமது கலாச்சாரத்தை மட்டும் வெளிப்படுத்தும் பண்பு என்றில்லாது, மாற்றுச் சமூக, கலாச்சார வெளிப்பாடுகளை ஏற்கும் உயரிய மதிப்புணர்வு என்று கொள்ள வேண்டும்.

தமிழ்ச்சமூகம் காலங்காலமாய்ப் போற்றி வரும் நற்பழக்க வழக்கங்களையும், பின்பற்றிவரும் வாழ்வியல் நெறிமுறைகளையும் பாதுகாப்பது நம் தலையாயக் கடமையாகக் கொண்டு, மொழியையும், பண்பாட்டையும் பேண வேண்டும். இன்றைய இளைஞர்கள் முக்கிய பொறுப்பாக இதை ஏற்க வேண்டும். தமிழ்ச்சமூகத்தின் வெற்றி இதில் அடங்கி உள்ளது.

## கேள்விகள்

### பகுதி - அ

**I. சரியான விடையைத் தெரிவுச் செய்க:**

1) ஒரு முழுமையான வாழ்வியல் கருத்தாக்கத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் சமூகத்திற்கு வழங்கியவர்

அ) காந்தியடிகள் ஆ) குமரகுருபரர்
இ) கணியன் பூங்குன்றனார் ஈ) திருவள்ளுவர்

2) நேர்மறை விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவை

அ) நற்குணங்கள் ஆ) தீயகுணங்கள்
இ) புத்தகங்கள் ஈ) மதங்கள்

3) உடலில் உயிர்நிலை பெறுவது எது?

அ) அன்பின் வழிப்பட்ட வாழ்வு
ஆ) அறிவின் வழிப்பட்ட வாழ்வு
இ) உணவின் வழிப்பட்ட வாழ்வு
ஈ) பொருளின் வழிப்பட்ட வாழ்வு

4) தனி மனித ஆளுமை வளர்ச்சியில் மிகவும் இன்றியமையாத பங்கெடுப்பது எதுவென்று குமரகுருபரர் கூறுகிறார்?

அ) பணம் ஆ) கல்வி இ) பாசம் ஈ) நேசம்

5) "மனிதன் ஒரு சமூக விலங்கு" என்று கூறியவர் யார்?

அ) சாக்ரட்டீஸ் ஆ) அரிஸ்டாட்டில்
இ) பிளாட்டோ ஈ) அலெக்ஸாண்டர்

6) பின்வருவனவற்றில் எது சமூகப் பண்பாக அறியப்படுகிறது?

அ) தன்னம்பிக்கை ஆ) சகிப்புத்தன்மை
இ) நேரம் தவறாமை ஈ) செருக்கின்மை

7) யார் உண்மையான ஒழுக்க சீலர்களாக இருப்பார்கள்?

அ) நேர்மையுடன் பணி செய்வோர்
ஆ) கோபம் கொள்வோர்
இ) ஒழுங்கீனம் கொண்டோர்
ஈ) புகழை விரும்புவோர்



8) பண்பாடு என்பது எச்சொல்லுக்கு இணையாகப் பயன்படுத்தப்படுகிறது?

அ) கலாச்சாரம் ஆ) நாகரீகம்
இ) இலக்கணம் ஈ) மொழி

### பகுதி - ஆ

**II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடை தருக.**

1) தனிமனித நற்பண்புகள் எவையேனும் இரண்டைப் பற்றி சிறுகுறிப்பு தருக.
2) கல்வி, செருக்கின்மை பற்றி குமரகுருபரர் தரும் விளக்கம் யாது?
3) குடும்பப் பண்புகளை ஏன் வளர்த்துக் கொள்ள வேண்டும்?
4) கலாச்சாரப் பண்புகளை எவ்விதம் பெற முடியும்?
5) பின்வருபவை குறித்து சுருக்கமாக விடையளி.
i) சகோதரத்துவம் ii) சேவை மனப்பான்மை
6) பண்பாடு பற்றி குறிப்பு வரைக.

### பகுதி -இ

**III) பின்வரும் கேள்விகளுக்கு கட்டுரை வடிவில் பதில் தருக.**

1) குமரகுருபரரின்,"நீதிநெறி விளக்கம்" பற்றி விரிவான விடையளிக்கவும்.
2) வாழ்வியல் நெறிகள் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களை பற்றி விளக்கம் தரவும்.
3) தொழில் நெறியும், வேலைப் பண்பாடும் என்ற தலைப்பில் கட்டுரை எழுதவும்.
4) சமூக நற்பண்புகள் என்றால் என்ன? ,வற்றுள் முக்கியமான ஏதேனும் நான்கு பற்றி விளக்கமான விடையளிக்கவும்.
5) தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள் குறித்து விளக்கமாக எழுது.

## மாதிரி வினாத்தாள்

## U.G DEGREE EXAMINATION, APRIL 2017

Second Semester Sub.Code:

Part IV - Value Based Education

(For those who joined in July 2016 onwards)

Time: Three hours Max.75 marks

பகுதி - அ (10x1=10 marks)

I. சரியான விடையைத் தெரிவு செய்க:

1. சமூகநீதியின் அளவீடாக கீழ்க்கண்டவற்றில் எதைக் குறிப்பிடலாம்?

அ) சமவாய்ப்பு ஆ) கல்வி
இ) கலப்புத்திருமணம் ஈ) அனைத்தும்

2. சமூக அநீதிக்கான மிக முக்கியக் காரணம்

அ) சாதி ஆ) கல்வி
இ) வேலை வாய்ப்பு ஈ) சுதந்திரம்

3. மனித உரிமைப் பிரகடனம் முதன்முதலாக இயற்றப்பட்ட ஆண்டு _____

அ) 1958 ஆ) 1977 இ) 1955 ஈ) 1948

2. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு _____

அ) 1945 ஆ) 1950 இ) 1955 ஈ) 1955

4.பெண்களை பயமுறுத்துதல், வீட்டுக்குள் கட்டுப்படுத்துதல் _______ ரீதியான வன்முறை ஆகும்.

அ) உடலியல் ஆ) உளவியல்
இ) பாலியல் ஈ)தகவல் தொடர்பு

5.போதை ஊசிகளின் விளைவு

அ) உடல்பலம் ஆ) உடல் தளர்ச்சி
இ) மூளையின் செயல்திறன் அதிகரிப்பு
ஈ) சமூக அந்தஸ்து

6. பின்வருவனவற்றுள் மனிதர்களின் அடிப்படைத் தேவை எது?

அ) உணவு ஆ) வாகனம்
இ) செல்பேசி ஈ) மின்விசிறி



7. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு ___

(அ) 1436 (ஆ) 1346 (இ) 1046 (ஈ) 1036

8. சமுதாய நிகழ்வுகளை ஊடகங்கள் கட்டமைக்கும் விதம் தனி நபரது" _______. நிர்ணயிக்கிறது.

(அ) சமுதாயப் பார்வையை
(ஆ) அரசியல் பார்வையை
(இ) வாழ்வியல் கோட்பாட்டை (ஈ) எதுவுமில்லை

9) "மனிதன் ஒரு சமூக விலங்கு" என்று கூறியவர் யார்?

அ) சாக்ரட்டீஸ் ஆ) அரிஸ்டாட்டில்
இ) பிளாட்டோ ஈ) அலெக்ஸாண்டர்

10) பின்வருவனவற்றில் எது சமூகப் பண்பாக அறியப்படுகிறது?

அ) தன்னம்பிக்கை ஆ) சகிப்புத்தன்மை
இ) நேரம் தவறாமை ஈ) செருக்கின்மை

பகுதி - ஆ (5 x 5=25 marks)

II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு 150 வார்த்தைகளுக்கு மிகாமல் பதில் கூறுக.

11. அ) சமூக அநீதிக்கானக் காரணிகளை விவரி.

(அல்லது)

ஆ) பாலின சமத்துவமின்மை என்றால் என்ன?

12. அ)மனித உரிமைகள் என்பதன் வரைவிலக்கணம் யாது? மனித உரிமைகளின் முக்கியத்துவம் யாவை?

(அல்லது)

ஆ) சிறுபான்மையோர் என்பவர் யார்?

13. அ).போலி மது குறித்து குறிப்பு வரைக.

(அல்லது)

ஆ) வறுமை குறித்து சுருக்கமாக விவரி.

14. அ) ஊடகக் கல்வியின் அவசியம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) மக்கள் தொடர்பு ஊடகங்கள் - சிறு குறிப்பு வரைக.

15. அ) தனிமனித நற்பண்புகள் எவையேனும் இரண்டைப் பற்றி சிறுகுறிப்பு தருக.

(அல்லது)

ஆ) குடும்பப் பண்புகளை ஏன் வளர்த்துக் கொள்ள வேண்டும்?

பகுதி - இ (5x8=40 marks)

**III. கீழ்க்கண்ட வினாக்களுக்கு 500-600 வார்த்தைகளுக்கு மிகாமல் கட்டுரை வரைக.**

16. அ) பெரியார் மிக முக்கியமான சமூக சீர்த்திருத்தவாதி - விளக்கமாக விவரி.

(அல்லது)

ஆ) பெரியார், அம்பேத்கர் தவிர்த்து நீ அறிந்த ஒரு சமூகச் சீர்த்திருத்தவாதி பற்றி விவரி.

17. அ) சமூகத்தில் நடைபெறும் தலித்துகளுக்கு எதிரான வன்முறை வகைகள் யாவை?

(அல்லது)

ஆ) குழந்தைகள் உரிமைகளை விளக்குக.

18. அ) மதுவால் உண்டாகும் தீமைகள் என்னென்ன?

(அல்லது)

ஆ) மதச்சார்பின்மை மற்றும் சமூக நல்லிணக்கம் குறித்து விவரி.

19. (அ) ஊடகங்களின் தன்மைகள் பற்றி விளக்கமாக உரை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஊடகங்கள் ஏற்படுத்தும் சமூக, கலாச்சார, அரசியல் பாதிப்புகள் பற்றி எழுதவும்.

20. அ) வாழ்வியல் நெறிகள் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களை பற்றி விளக்கம் தரவும்.

(அல்லது)

ஆ) தொழில் நெறியும், வேலைப் பண்பாடும் என்ற தலைப்பில் கட்டுரை எழுதவும்.